
கல்கி

KALKI 3-4-83 ரூ 1.20



"சங்கீத
வித்வான்களுக்குச்
சங்கம்
வேண்டும்!"

துணுக்கு அறுவடை!



பழங்கால அமேஸான் காட்டுவாசி வீரப் பெண்கள் தங்களின் வலது மார்பகத்தை வெட்டிவிடுவார்கள். தடங்கல் இல்லாமல் அம்பு எய்ய இது உதவும் என்பதே காரணம்!

—எஸ். முகமது யூசுப்

ஹாலிவுட் நட்சத்திர நடிகர் பீட்டர் செல்லர்ஸ் 85 லட்சம் பெறுமான சொத்துக்களை விட்டு விட்டு இறந்தார். ஆனால் அவர் தமது உயிலில் தம்முடைய மூன்று பிள்ளைகளுக்கும் தலா இரண்டாயிரம் டாலர் மட்டுமே தரப்பட வேண்டும் என்று எழுதி வைத்தார். காரணம் அவர்கள் சொந்தக் கால்களில் நின்று சுய முயற்சியால் முன்னுக்கு வரவேண்டும் என்று அவர் அதில் குறிப்பிட்டிருந்தார்.

—எஸ். ஏ. காதிர்





மனித இயந்திரமான ரோபோ (Robot) பல்வேறு வேலைகளுக்காகத் தயாரிக்கப்பட்டு வருவது அனைவருக்கும் தெரிந்ததே. தற்போது நாய்களை வாக்கிங் அழைத்துச் செல்வதற்கென புதிதாக ஒரு ரோபோ கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதன் விலை ரூ. 15000 டாலர்களுக்கும் அதிகமாம்!

—விஜயலட்சுமி

கோப்பன்ஹேகனில் டாக்ஸிகள் நடமாடும் சினிமா விளம்பரங்களாக மாற்றப்பட்டுள்ளன. ஒரு பிரயாணி டாக்ஸியில் உட்கார்ந்ததும் தானியங்கு முறையில் 10 செகண்டுக்கு ஒரு விளம்பர ஸ்லைட் போடப்படும். பிரயாணி விரும்பாவிட்டால் ஓட்டுனர் இந்தக் காட்சியை நிறுத்தவும் முடியும்.

—தனலட்சுமி ஸ்ரீனிவாஸ்

அலிஸ்டெயர் மக்லீன் போன்ற பிரசித்தி பெற்ற நாவலாசிரியர்கள், திரைப் படத் தயாரிப்பாளர்கள், தொந்தரவு தாளாத நிலையில் கதைக் கருக்கங்களைத் தந்து, வேறு எழுத்தாளர்களைக் கொண்டு விரிவான திரைக் கதைகளை எழுதச் செய்கின்றனர். 'ஏர் ஃபோர்ஸ் ஒன் ஈஸ் டவுன்' முன்னுரையில் மக்லீன் குறிப்பிடுகிறார்: ''அலிஸ்டெயர் நாவல் அல்ல. என்னுடைய கதைக் கருக்கத்தை அடிப்படையாக வைத்து ஜான் டெனிஸ் என்பவரால் முற்றிலும் எழுதப்பட்டது.''

—எஸ். ஏ. காதிர்



மகாராஜபுரம் சந்தானம் பேட்டி

"சங்கீத வித்வான்களுக்குச் சங்கம் வேண்டும்"

ஒரு ஞாயிற்றுக் கிழமை மாலைப்பொழுதில் சுமார்மூன்று மணி நேரத்துக்குக் கர்நாடக இசையுலகம் பற்றி உரையாடினார். பிரபல இசைக் கலைஞர்மகாராஜபுரம் **திரு. சந்தானம்.** பேட்டியிலிருந்துசில முக்கிய பகுதிகள்:

ரசிகர் எம். ஜி. ஆர்.

சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பு சென்னையில் ஒரு சினிமாத் தியேட்டர் அதிபர் வீட்டுக் கல்யாணத்தில் கச்சேரி செய்து கொண்டிருந்தேன். எம். ஜி. ஆர். அவர்கள் (அப்போது அவர் முதல்வர் அல்ல) முன் வரிசையில் வந்து அமர்ந்து கொண்டு, இரண்டரை மணி நேரக் கச்சேரியையும் ரசித்துக் கேட்டார்.

நான் முடிக்க வேண்டிய சமயம் வந்து விட்டது. கல்யாண வீட்டைச்சேர்ந்தவர்கள் யாராவது இருந்தால், அவர்களைக் கேட்டுக் கொண்டு கச்சேரியை முடிக்கலாம் என்று பார்த்தால், யாரையும் காணோம். எம். ஜி. ஆர். அவர்களை நோக்கி, ''முடித்து விடட்டுமா?'' என்று கேட்டேன்.

''இன்னும் இரண்டு பாட்டுப் பாடுங்களேன்!'' என்றார் அவர்.

பாடி முடித்ததும், உயரமான மேடையில் அமர்ந்திருந்த என்னைப் பார்த்து, ''மிகநன்றாகப் பாடினீர்கள், மிகவும் சந்தோஷம்'' என்று பாராட்டினார்.

''கொஞ்சம் மேலே மேடைக்குவாருங்களேன்!'' என்று கேட்டுக் கொண்டேன். அவர் வந்ததும், ''நீங்கள் ரொம்பவும் பிஸி ஆர்ட்டிஸ்ட். என்னுடைய கச்சேரியைஇரண்டரைமணி நேரம் கேட்டு ரசித்ததற்கு நான்தான் மிகவும் சந்தோஷப்பட வேண்டும்!'' என்றேன்.

''நான் உங்கள் இசையை விரும்பிக்கேட்பவன். உங்கள் 'டேப்' எல்லாம் என்னிடம் இருக்கிறது. இரண்டு நாள் முன்பு ரேடியோவில் உங்கள் நேஷனல் புரோக்ராம் கேட்டேன். உங்கள் ஆரபி, மோகனம் எல்லாம் ரசித்தேன். இவ்வளவு நன்றாகப் பாடும் திரு சந்தானத்தின் இசையை ஏன் அடிக்கடி ஒலிபரப்புவதில்லை என்று ஏ.ஐ. ஆருக்கும் லெட்டர் எழுதியிருக்கிறேன்!'' என்றார் திரு எம். ஜி. ஆர்.


திரு எம். ஜி. ஆர். அவர்கள் கர்நாடக சங்கீத ரசிகர் என்று பலருக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் ராகங்களை அநுபவித்து ரசிக்கத்தெரிந்த தீவிரரசிகர் என்று எத்தனை பேருக்குத் தெரியும்!



✖ சந்தானம்



✖ ராமச்சந்திரன்



✖ ஸ்ரீநிவாசன்

என் தகப்பனார்

எனக்குக் குரு என் தகப்பனார் மகாராஜபுரம் விசுவநாதய்யர் அவர்கள்தான்; சங்கீத மும்மூர்த்திகளின் கீர்த்தனைகளில் தினம் ஒரு கீர்த்தனையை எடுத்து வைத்துக் கொண்டு அந்த ஒரு கிருதியைப் பற்றிக் கொஞ்ச நேரமாவது ஒருவரிடம் அவரால் பேசாமல் இருக்கவே முடியாது. அந்தக் கீர்த்தனையில் உருகிப் போய், கண்ணில் நீர்மல்க நிற்பார்.

மயிலாப்பூர் மாதவபெருமான் கோவில் தெருவில், தியாகராஜ சங்கீத வித்வத் சமாஜம் கட்டியவர் என் தகப்பனார்தான்.

என் தாயாருக்குச் சங்கீதத்தில் ஆர்வமே கிடையாது. (வியப்பாயில்லை?) என் அப்பாவிடம் தனியே பயில வில்லை என்றாலும், மதுரை மணி அவர்கள் ஏகலைவன் மாதிரி. ஜி. என். பி. கூட என் தகப்பனாரிடம் கற்றுக்கொண்டிருக்கிறார். செம்மங்குடி அவர்களுக்கும் என் தகப்பனார்தான் குரு.

ஒரு முறை மதுரை மணி அவர்கள் என் தகப்பனாரிடம் ''மிகவும் சாதாரணமான அடாணா ராகத்தை எப்படி இவ்வளவு அழகாகப் பாடுகிறீர்கள்?'' என்று கேட்டார்.

''உனக்கு அடாணாவில் என்னென்ன கீர்த்தனைகள் தெரியும்?'' என்று கேட்டார் அப்பா.

''நீ இரங்கா யெனில் புகலேது மட்டும்தான் தெரியும்!'' என்று மதுரை மணி சொல்ல, அடாணாவில் மட்டும் பத்துக் கீர்த்தனைகளைப் பாடிக் காண்பித்தார் என் தகப்பனார்.

''ராகத்தை விரிவாக, சுவாரஸ்யமாகப் பாட எத்தனை கிருதிகள் தெரிகிறதோ அத்தனை நல்லது'' என்றார்.

என் தாத்தா ராமையா, தஞ்சாவூர் ஜில்லாவில் பிரசித்தமான மிராசுதார். சங்கீதத்தில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர். அருமையாகப் பாடுவார். சில நாதஸ்வர வித்வான்கள் தாத்தாவிடம் வந்து ''ஐயா சாவேரி பாடுங்க: கேட்கணும் போல இருக்கு!'' என்று பவ்யமாய்க் கேட்பார்கள். தாத்தா மணிக் கணக்கில் பாடுவார்;

இலங்கையில்...

1960ல் இலங்கையில் (சர் பொன்னம்பலம்) ராமநாதன் மியூசிக் காலேஜ் தொடக்க விழாவுக்கு என் தகப்பனாரை அழைத்திருந்தார்கள். நாங்கள் குடும்பத்தோடு போயிருந்தோம். தொடக்க விழாவன்று என்னையே கச்சேரி செய்யச் சொன்னார்கள். யாழ்ப்பாணத்தில் அன்று என் கச்சேரியைக் கேட்டவர்கள் எல்லோருக்கும் என் சங்கீதம் பிடித்துப் போயிற்று. என்னையே அந்தக் கல்லூரிக்கு முதல்வராக நியமித்து விட்டார்கள். ஆறு வருஷங்கள்சிலோனில் இருந்தேன். நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் சேர்ந்து பயின்றார்கள். நாலு வருஷ கோர்ஸ் முடித்தவுடன் 'சங்கீத ரத்னம்' பட்டம் வழங்கினோம். பேராசிரியர்சாம்பமூர்த்தி, சந்தியாவந்தனம் சீனிவாச ராவ் எல்லாம் அங்கே எக்ஸாமினர்களாக வந்து தேர்வுகளை நடத்திக் கொடுத்தார்கள். அந்தக் கல்லூரியுடன் இன்னமும் தொடர்புவைத்துக் கொண்டிருக்கிறேன்.

அமெரிக்காவில்...

1981 கடைசியில் நாற்பத்தைந்து நாட்கள் அமெரிக்காவில் தங்கி இருபத்தைந்து கச்சேரிகள் செய்தேன். ஒவ்வொரு கச்சேரியிலும் சுமார் நாலரை மணி நேரம் பாடினேன். அங்கே ஒரு புதுமையான ஏற்பாட்டைச் செய்தார்கள். கச்சேரி ஆரம்பிக்கு முன்னால், அறிமுகம் செய்பவர், ரசிகர்கள் என்னென்ன பாட்டுக்கள் கேட்கிறார்களோ, அதையெல்லாம் திரு சந்தானம் பாடுவார் என்று அறிவிப்பார். தொடர்ந்து அவர்கள் கேட்கக் கேட்க நானும் பாடிக் கொண்டிருந்தேன். அமைதியாய் இருந்து உற்சாகமாய்க் கைதட்டி ரசித்தார்கள். அங்கே எல்லார் வீட்டிலும் கர்நாடக சங்கீத டேப் வைத்திருக்கிறார்கள். லைப்ரரி மாதிரி. இசை சம்பந்தமான புத்தகங்களையும் சேர்த்து வைத்திருக்கிறார்கள்!



மனைவி: ''எதுக்குச் சம்பந்தமில்லாம இமேஜ்னு பத்திரிகையில் அறிக்கை விட்டிருக்கீங்க?... மேலவைனு ஒண்ணு அவசியமே இல்லே...மேலவையை உடனே கலைக்கணும்னு!''

அரசியல்வாதி: ''எனக்குத் தர்றதாச் சொல்லியிருந்த எம்.எல்.சி. பதவியை வேறு ஒரு ஆசாமிக்குக் குடுத்துட்டார் எங்க கட்சித் தலைவர்!''

—உ. ராஜாஜி

சங்கீத வித்வான்கள் சங்கம்

சங்கீத வித்வான்களுக்கு அவசியம் அஸோஸியேஷன் மாதிரி ஓர் அமைப்பு வேண்டும். அது இல்லாதது ஒரு குறை என்பதைப் பலர் உணர்வதே இல்லை. மத்திய அரசின் கல்வி — கலாசார இலாகா பல சலுகைகள் வழங்குகிறது. வெளி நாடுகளுக்குப் போய் இசையைப் பரப்பும் வாய்ப்புக்கள் பெரும்பாலும் வட இந்திய கலைஞர்களுக்கே கிடைக்கின்றன. இங்கே ஒன்றுமே தெரிவதில்லை. அது மட்டுமல்ல, ஸ்காலர்ஷிப், க்ராண்ட் இன்னும் பல சலுகைகள் எல்லாம் வித்வான்களுக்குக் கிடைக்க ஓர் ஒழுங்கான அமைப்பு தேவை.

கச்சேரிகளில் பலர்'டேப்' செய்கிறார்கள். (பிறகு விலைக்கும் விற்கிறார்கள்) இம்மாதிரி டேப் செய்து விற்பனை செய்தால் வித்வான்களுக்கு எத்தனை கஷ்ட நஷ்டங்கள் உண்டாகின்றன என்பதை உணர வேண்டும் என்பது என் வேண்டுகோள். சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைச்சொல்கிறேன்: கேரளாவில் ஒரு கச்சேரிக்கு என்னை ஏற்பாடு செய்திருந்தார்கள். பக்க வாத்தியக்காரர்களையும் என்னையே ஏற்பாடு செய்து கொள்ளச் சொன்னார்கள். நானும் ஒரு மாதம் முன்னாலேயே வயலினுக்கும் மிருதங்கத்துக்கும் வித்வான்களை ஏற்பாடு செய்து விட்டேன். கச்சேரிக்குப் பத்து நாட்கள் இருக்கும்போது ''நாங்களே பக்கவாத்தியம் ஏற்பாடு செய்து விட்டோம். நீங்கள் அவர்களுடன்தான் பாட வேண்டும்!'' என்று கட்டளை விடுவது மாதிரி சொன்னார்கள். அவர்கள்தொனியே.

சரியாகப் படவில்லை எனக்கு. நான் மறுத்து விட்டேன். நானே ஏற்பாடு செய்த சக வித்வான்களை அவமரியாதை செய்வது எப்படி நியாயமாகும்? அவர்கள் வேறு பாடகரை ஏற்பாடு செய்து, பிறகு அவரையும் மாற்றி, வேறு ஒருவரை ஏற்பாடு செய்தார்கள் — நடந்த கதை எதையும் சொல்லாமல். அவர்கள் மறுபடி ஏற்பாடு செய்திருந்த வயலின்-மிருதங்க வித்வான்களோடு தொடர்பு கொண்டு விஷயத்தை விளக்கியதும் மிருதங்க வித்வான் மட்டும் என்னோடு ஒத்துழைத்து அந்தக் கச்சேரியில் கலந்து கொள்ளவில்லை என்று தெரிவித்தார். இதெல்லாம் ஒரு முறையான அமைப்பு இருந்தால் நடவாமல் தடுக்கலாம்.

விமரிசகர்கள்


விமரிசகர்கள் பயமின்றி எழுதட்டும். பயஸ் (bias) வேண்டாம்! ஒரு விமரிசகர் குறிப்பிட்ட இரண்டு மூன்று பேர் கச்சேரிகளை மட்டுமே ரசித்து விமர்சனம் செய்வது அத்தனை சிலாக்கியம் அல்ல என்பது என் கருத்து. கூடுமானவரை எல்லாக் கச்சேரிகளையும் கேட்கட்டும். பிறகு நன்றுவிருந்தது. இல்லை என்று எழுதட்டும். அதனால் தவறில்லை. விமரிசகர்கள் எல்லாம் புகழ்ந்தே எழுத வேண்டும் என்று நான் சொல்ல வரவில்லை.

இன்றைக்கு....

இன்றைய இளைஞர்கள் கர்நாடக சங்கீதக் கச்சேரிகளுக்கு வருகிறார்கள். ரசிக்கவும் செய்கிறார்கள். இரு நாட்கள் முன்பு, ப்ளஸ்-டூ படிக்கிற பெண் ஒருத்தி வந்து, 'வீணை கற்றுக் கொள்கிறேன். உங்கள்முன் வாசித்துக் காட்டுகிறேன்!' என்றாள். என்னுடன் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்த என் மனைவி அந்த இசையில் அப்படியே உருகிப் போய்க் கண்ணில் நீர் தளும்ப அப்படியே உட்கார்ந்து விட்டாள். இசையைப் பயிலுவதில் ஆகட்டும், ரசிப்பதில் ஆகட்டும், இளைய தலைமுறையினருக்கு நிச்சயம் ஆர்வம் இருக்கிறது.

துக்கடா

காலை ஐந்து மணிக்கு எழுந்திருக்கிறார் சந்தானம். ஆறு மணி வரை சங்கீத சம்பந்தமான புத்தகங்கள் படிக்கிறார். பிறகு பிள்ளைகள் ராமச்சந்திரன், சீனிவாசன் இருவருக்கும் சங்கீதம் கற்றுக் கொடுக்கிறார். எட்டரை — ஒன்பது வரை இந்த இசைப் பயிற்சி நடக்கும். பிறகு சிஷ்யர்களுக்கும் பயிற்சி அளிக்கிறார். வெளியூர் போகாமல் சென்



ஆசிரியர்: பஞ்ச பூதங்கள் எவை?
மாணவன்: தண்ணீர், அரிசி, கெரோசின், சர்க்கரை, பாமாயில். -லட்சுமி சிவம்

னையிலே இருக்கிற நாட்களில் இது அவரது 'ருட்டீன்'. மாலை நேரத்தில் சினிமாக்களுக்குப் போய் விடுகிறார் மனைவியுடன். இரண்டு பேருக்கும் சினிமா ஈடுபாடு அதிகம்.

1942லிருந்து தம் தகப்பனாரிடமே சங்கீதம் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார். அவருக்குத் தம் மகன் சங்கீதம் கற்றுக் கொள்வதில் விருப்பமே இல்லையாம். பிள்ளை நன்றாகப் படித்து வேறு உத்தியோகத்துக்குப் போக வேண்டும் என்பது அவர் ஆசை. ஆனால் இவருக்கோ படிப்பில் அவ்வளவு நாட்டம் இருக்கவில்லை. வீட்டில் அப்பாவிடம் சிஷ்யர்கள் கற்றுக்கொள்ளும் போது, இவரும் இசை பயின்றார். பாட்டுப் போட்டிகள் பலவற்றில் கலந்து கொண்டு பரிசுகள் வாங்கிக்கொண்டு வந்தார்!

கச்சேரிகளுக்குப் போகும் பொழுது புரோகிராம் போட்டுக் கொண்டு பாடுவதில்லை இவர். புதுப் புதுப் பாடல்களை ஒவ்வொரு கச்சேரியிலும் பாடுவதுதான் தமது புகழுக்கும் வெற்றிக்கும் காரணம் என்கிறார். கச்சேரியின்போது ரசிகர்களுடன் ஒரு தொடர்பு—(rapport) ஏற்படுத்திக் கொண்டு விடுகிறார். பக்கவாத்தியக் காரர்களுடன் பாடகரின் வாய்ப் பாட்டும் சேர்ந்து 'டீம் ஒர்க்' மாதிரி கச்சேரிகள் அமைந்தால் தான் வெற்றி யடையும் என்கிறார் சந்தானம். சினிமாப் பாடல்கள் பலவும் (பழையவை, புதியவை) கர்நாடக இசையை அடிப்படையாகக் கொண்டவை தான். கர்நாடக இசை இன்னும் மக்களிடையே பரவ சினிமாவில் கர்நாடக சங்கீதத்தை 'லிட்'டாகப் புகுத்தலாம் என்கிறார் சந்தானம்.

பாபநாசம்சிவன் கீர்த்தனைகளை உயர்ந்தவை என்று புகழும் இவர், சிவன் அவர்களைச் சங்கீத மும்மூர்த்திகளுடனே சேர்த்து விடலாம் என்கிறார். பக்தி ரசத்திலும், சாகித்தியத்தின் உயர்விலும் சிவன் அவர்கள் தியாகராஜ சுவாமிகளுக்கு இணையாகப் பாடல்களை இயற்றியிருக்கிறார் என்பது இவர் கருத்து.

இசைக்கும் கலைகளுக்கும் பெயர் போன தஞ்சை மண்ணில் மாயூரத்திற்கும் கும்பகோணத்திற்கும் இடையில் உள்ள நரசிங்கன்பேட்டையிலிருந்து முக்கால் மைல் தூரத்தில் இருக்கிறது இவரது பெயருக்கு முன்னால் உள்ள மகாராஜபுரம்.

—சாருகேசி, தமயந்தி

அட்டை வண்ணப்படம்: 'சுபா' சுந்தரம்

ஒரு பத்ம விபூஷண் பேசுகிறார்!

புதுடில்லியில் உள்ள சப்தர்ஜங் மருத்துவ மனையில் முதல் தரம், இரண்டாம் தரம், ஸ்பெஷல் வார்டு என்கிற வரிசை முறையெல்லாம் கிடையாது. ஒரு முறை பாரதப் பிரதமராயிருந்த லால் பகதூர் சாஸ்திரி அவர்களின் துணைவியார் இங்கே சேர்க்கப்பட்டிருந்தார். உடன் வந்திருந்த சாஸ்திரியின் மாப்பிள்ளை சற்றே முகம் சுளித்தார். இதைக் கவனித்துவிட்ட சாஸ்திரி சொன்னார்:

''அவர் பணக்கார வீட்டுப் பிள்ளை. அவருடைய மனநிலை அப்படித்தான் இருக்கும். ஆனால் நான் சாமானியமானவன். என் மனைவிக்கும் இப்படிப்பட்ட சாதாரண இடம் தருவதே சரி.''

அப்புறம் சாஸ்திரி அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டது: ''என் மனைவியை எப்படிக்



கவனிக்கிறீர்களோ அதே போல் எல்லாத் தரப்பினரையும் கவனிக்க வேண்டும்.''


இந்த நிகழ்ச்சி பற்றிச் சொன்னவர் அந்த மருத்துவ மனையைக் குழந்தையைப் போல் தாலாட்டிச் சீராட்டி வளர்த்து விட்ட கர்னல் ஆர். டி. ஐயர்.

நேருஜியின் குடும்பமாகட்டும், சாதாரண பாமரனாகட்டும் — எல்லோரும் ஒன்றுபோலக் கவனிக்கப்படுவது உண்மைதான் எனினும் சிறப்பான மருத்துவக் கவனிப்புக்கு சப்தர் ஜங் பெயர் பெற்றது.

சென்னை மருத்துவக் கல்லூரியில் அனடமி டெமான்ஸ்டிரேட்டராக, நூற்றைம்பது ரூபாய் சம்பளத்தில் மருத்துவத் துறைக்கு வந்த திரு ஐயர், இராணுவ சேவைக்குச் சென்று, மேஜர் ஐயர் கர்னல் ஐயர் என்று உயர்ந்து, பாரத மருத்துவத் துறையில் மிக உயர்ந்த பீடமான டைரக்டர் ஜெனரல் ஆப் மெடிகல் சர்விஸஸ் ஆகப் பணியாற்றி, ஓய்வு பெற்றவர். 1962ஆம் ஆண்டில் இவருக்குக் கிடைத்தது: பத்ம விபூஷண். பாரத ரத்னாவுக்கு அடுத்த பெரும் சிறப்பு இதுதான்.

சப்தர்ஜங்கில் நூற்றுஎண்பது படுக்கைகள் கர்னல் ஐயரின் நேரடிப் பொறுப்பில் உண்டு. எந்த நேரத்திலும் அந்த நூற்றி எண்பது நோயாளிகளின் உடல் நிலை பற்றிய நிலவரம் அவருக்குத் தெரியும்.


சப்தர் ஜங் மருத்துவ மனையில் ஒரு நாளைக்கு ஏழாயிரம் ஊசிகள் போடப்படுவதுண்டு. 'சென்ட்ரல் ஸ்டெரைல் சப்ளை ஆர்கனைசேஷன்' என்று ஒரு அமைப்பு இருக்



கிறது. தினசரி அவ்வளவு சிரிஞ்சுகளும் அங்கே 'ஆட்டோ கிளேவிங்'' முறைப்படி ஸ்டெரைல் செய்யப்பட்ட பிறகு மறுபடி மருத்துவ மனையின் பல்வேறு பகுதிகளுக்குச் செல்லும். 21 கிளை மருத்துவமனைகளுக்குப் போகும். இம்முறையை அறிமுகப்படுத்தியவர் கர்னல் ஐயர்தான்.

''இப்போதெல்லாம் மேலை நாடுகளில் காமா கதிர் மூலம் ஸ்டெரைல் செய்கிறார்கள். ஒரு முறை பயன்பட்டதும் சிரிஞ்சை அப்படியே தூக்கி எறிந்து விடுவார்கள், பால் பாயிண்ட் பேனா மாதிரி. ஆனால் நம்முடைய பொருளாதாரம் அதற்கு இடம் தராதே'' என்கிறார் ஐயர்.

வங்கப் பஞ்சம் பெருவாரியான உயிர்களைக் கொள்ளை கொண்ட ஆண்டு 1943.



ஜெனரல் வேவல் உத்தரவுப்படி டாக்காவுக்கு ஒரு மெடிகல் யூனிட் சென்றது. டாக்காவிலிருந்து ஏழு மைல் தொலைவில் உள்ள நாராயண்கஞ்ச் என்கிற இடத்தில் ஒவ்வொன்றும் நூற்றைம்பது படுக்கைகளுடன் இரண்டு மருத்துவ மனைகள் திறக்கப்பட்டன. இவற்றுள் ஒன்று மேஜர் ஐயர் பொறுப்பில் இயங்கியது. சணல் கிடங்கு ஒன்றை ஆஸ்பத்திரியாகப் பயன்படுத்தினார்கள். மலேரியா, பட்டினி இவற்றால் ஏற்கனவே ஆயிரம் பேர் வரை செத்துப் போய்விட்டார்கள். மக்களிடம் கோபம் பொங்கியது. ''எல்லாரும் செத்தப்புறம் டாக்டர் வந்தாரா?'' என்ற வெறுப்பு.

கள்ளமார்க்கெட்டில் க்வினைன் மருந்தின் விலை எக்கச்சக்கமாய்ஏறிவிட்டது. இத்தகைய சூழலில் தினமும் ஒரு ஆர்டர்லி தலையில் மருந்து மூட்டையை ஏற்றிவிட்டு ஐயர் வயல் வரப்புக்களின் மீதாகப் பத்துப் பன்னிரண்டு மைல் என்று நடந்து சென்று திரும்புவார்.

''இந்த நேரத்தில்தான் நான் மிகவும் ஆத்ம திருப்தியோடு வேலை பார்த்தேன். முதலில் கோபத்தோடு என்னை வரவேற்றவர்கள் பின்னால் அன்பைச் சொரிந்தார்கள்.'' என்றார் ஐயர்.

சில நாட்களில் ஐயர் தலைமையகம் திரும்ப ரொம்பநேரமாகிவிடும். அதிகாரிகள் கவலைப்பட்டுப் போலீஸிடம் சொல்வார்கள். ''யாரைப்பற்றியாவது கவலைப்படவே வேண்டாம் எனில் அது ஐயரைப்பற்றித்தான்'' என்று போலீஸார் பதில் கூறுவார்கள். அப்படி ஐயரிடம் அபிமானம் பெருகிவிட்டது மக்களுக்கு. ''கிராமப்புறங்களில் எனக்கு அப்போதிருந்த செல்வாக்குக்குத் தேர்தலில் நின்றிருந்தால் எதிர்ப்பின்றி ஜெயித்திருப்பேன்'' என்கிறார் ஐயர். இந்த வேலை முடிந்தவுடன் மேஜர் ஐயர்கர்னல் ஐயராகப் பதவி உயர்வு பெற்றார்.

கர்னல் ஐயர் சர்ஜரியில் நிபுணர். ஒரு நாளில் பதினைந்து ஆபரேஷன்கள்வரை அவரே செய்வதுண்டு. யுத்த காலத்தில் காயம்பட்டுத் தமது மருத்துவ முகாம்களுக்குக் கொண்டுவரப்பட்ட போர் வீரர்களில் ஒருவரைக்கூட மரணமடைய விட்டதில்லை என்று சொல்கிறார் ஐயர்.

கேரளாவில் அச்சுத மேனன் முதலமைச்சராக இருந்த காலத்தில் செய்யப்பட்ட ஒரு ஏற்பாட்டையும் ஐயர் குறிப்பிடுகிறார். மருத்துவமனைகளில் இருந்தே ஆகவேண்டிய அத்தியாவசியமான மருந்துகள் என்று நூற்றைம்பதைப் பட்டியலிட்டார்கள். ஐம்பது லட்ச ரூபாய் திட்டம் ஒன்றை வகுத்து அவ்வளவு மருந்துப் பொருள்களையும் அரசாங்கமே உற்பத்தி செய்து மருத்துவ மனைகளுக்கு வழங்கி, மருந்து இல்லை என்ற பேச்சே எழாது பார்த்துக் கொண்டார்கள். இம்முறையை நாடு முழுதும் பின்பற்றலாம் என்பது ஐயரின் கருத்து.

பொதுவாக டாக்டர்கள் நோயாளிகளுடன் அவர்களுடைய நோய் பற்றி விவாதிப்பதில்லை. இது தவறு என்கிறார் ஐயர். ''நோய் என்பது நோயாளியின் பிரச்னைதான். டாக்டர்களுடையதல்ல. இன்ன நோய், இன்னது செய்யப் போகிறேன். விளைவு இப்படி இருக்கும் என்ற முழு விவரத்தையும் நோயாளிக்கு டாக்டர்கள் சொல்வது கடமை. இதற்கு நேரம் ஒதுக்கிக் கொள்ள வேண்டும். நான், வேறு யாரிடமேனும் ஸெகண்ட் ஒபினியன் கேட்டுக்கொள் என்று கூடச் சொல்வதுண்டு'' என்கிறார்.

எழுபதுகளின் தொடக்கத்தில் கிழக்கு வங்கத்திலிருந்து ஒரு மில்லியன் அகதிகள் அஸ்ஸாமிலும் மேற்கு வங்கத்திலும் குடியேறினார்கள். அப்போது அவர்களுடைய தேவைகளைக் கவனித்துக் கொண்டு பாடுபட்டது இந்திய செஞ்சிலுவைச் சங்கம். வட கல்கத்தாவில் ஐயர் அதன் துணைத் தலைவராக இருந்தார். கப்பல் மூலமும் விமானம் மூலமும் உலகெங்கிலுமிருந்து ஏராளமான நன்கொடைப் பொருள்கள் வரும். மருந்துகள், போர்வைகள், உணவுப் பொருள்கள் என்று. அதுவோ நக்ஸலைட் பகுதி. இப்பொருள்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமே. ஐயர் யோசித்தார். நக்ஸலைட் இளைஞர்கள் சிலரையே அழைத்து அந்தப் பொருள்களைப் பாதுகாக்கும் பணியை அவர்களிடம் ஒப்படைத்தார். மனிதாபிமானத்துடன் அந்த இளைஞர்கள் வந்து குவிந்த பொருள்களைக் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாத்தார்கள்!

இந்தியாவில் சப்தர்ஜங் மருத்துவமனையில் தான் ஐயர் பதவிக் காலத்தில் முதன் முதலில் சிறுநீரக டயாலிஸிஸ் யூனிட் நிறுவப்பட்டது. ஒரு சர்தார்ஜி இளைஞன் முதன் முதலில் அதில் சிகிச்சை பெற்றான்.

'ஒரு டாக்டர் தன்னைமுழுமையான டாக்டராகவேதான் அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும். வேறு எதிலும் இல்லை' என்கிற ஐயர், தம்முடைய பதவிக் காலம் முழுவதும் 'பிரைவேட் பிராக்டிஸ்' என்று செய்ததே இல்லை. தம்முடைய புகைப்படத்தைக்கூட தர மறுக்கும் ஐயரை இந்தப் பேட்டிக்குச் சம்மதிக்க வைக்கவே பெரும் பாடாகி விட்டது! அத்தனை அடக்கம்!

-சுப்ரபாலன்

சேலம் செவ்வாய்பேட்டைப் பகுதியில் உள்ள ஒரு எவர்ஸில்வர் பாத்திரக் கடையின் பெயர் 'ஓம் ஐம் ஹ்ரீம்' இந்தப் பகுதி மக்கள் இந்தக் கடையை 'மந்திரவாதி கடை' என்று அழைக்கிறார்கள்.

—பிரகாஷ் முரளி



கல்கி

1983 ஏப்ரல் 3
துந்துபி பங்குனி 20
மலர் : 41 இதழ் : 36




புரட்சி ஓங்குக!

கர்நாடக முதல்வரின் பாராட்டுக்குரிய நன்முயற்சியால் பெங்களூரில் நாலுமாநிலமுதல்வர்கள் கூடிப்பேசியதை''புரட்சியைத்தூண்டுதல்''என்று வர்ணித்துள்ளார் கேரள முதல்வர் கருணாகரன். தென் மாநில முதல்வர்கள் மாநாட்டில் தாம் கலந்து கொள்ளாததற்குச் ''சட்டசபைத் தொடர் நடந்து கொண்டிருப்பதே காரணம்'' என்று முன்னம் கூறிய இவர்தான் இப்போது பால்மாறிப் பேசுகிறார்! காரணம் காங்கிரஸ் தலைமைப் பீடம் முதல்வர்களின் இந்தச் சந்திப்பை ''மத்திய அரசுக்கு எதிரான தேவையற்ற சீண்டுதல்'' என்று வர்ணித்து விட்டதுதான்!

இந்தியா போன்ற ஒரு மிகப் பெரிய நாட்டில், பண்பாடு, கலைகள், மொழி, இயற்கை வளங்கள் போன்ற பல விஷயங்களிலும் மாநிலத்துக்கு மாநிலம் நிரம்ப வேற்றுமைகள் இருக்கின்ற நிலையில்பிராந்தியப் பற்றும் தாய்மொழிப் பற்றும் தேசப் பற்றுக்குச் சமமாக வளர்வது மனித இயல்பு; இயற்கைச் சக்தி. இதை வெல்லவோ மாற்றவோ யாராலும் முடியாது. ஆகவே இந்தப் பிராந்திய உணர்வைப் பரிகசிக்கவோ அல்லது கண்டிக்கவோ செய்யாமல் அதற்கு வளைந்து கொடுத்து விடுவதுதான் சாணக்கியம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கிவிடுவதன் மூலம் அவை எதற்கெடுத்தாலும் மத்திய அரசுடன் போராட வேண்டியிருக்கும் நிலையைத் தவிர்த்து விடுவது ராஜதந்திரம். அப்போது பிராந்தியப் பற்று பீறிட்டு எழாமல் அடங்கி இருக்கும். மாறாக மாநிலங்கள் மீது மத்திய அரசின் கட்டுப்பாடுகள் வளர வளர, இந்தி ஏகாதிபத்தியம் அதிகரிக்க அதிகரிக்க, மனக் கசப்பும் ஏமாற்றமும் ஏற்படும். பைசா பெறாத விஷயங்களுக்கெல்லாம்கூட டில்லிக்குக் காவடி தூக்க நேரிடும் போது உடன் விளைவாகப் பிராந்தியப் பற்று ஆபத்தான அளவில் பொங்கிப் பிரவகிக்கும். இதைத் தவிர்ப்பதுதான் விவேகம்.

மத்தியில் அயல்நாட்டு விவகாரம், தேசப் பாதுகாப்பு போன்ற மிக முக்கியமான அம்சங்கள் மட்டுமே கவனிக்கப்பட வேண்டும். மற்ற விஷயங்களில் மத்தியில் அதிகாரங்கள் குறைந்தபட்சமாகி மாநிலங்களின் அதிகாரங்கள் பெருக வேண்டும். அப்போது மாநிலங்கள் போட்டா போட்டியில் இயங்கித் துரிதமாக முன்னேற, தேசம் முழுவதுமே








காபிட்சம் பெருகும்.

பெங்களூரில் கூடிய முதல்வர்கள் இந்த அளவுக்கு வன்மையாகப் பேசவில்லை. மிகுந்த எச்சரிக்கையோடு மிருதுவாகவே குரல் எழுப்பியுள்ளனர்: அண்டை மாநிலங்களிடையே உள்ள பிரச்னைகளைப் பரஸ்பரம் பேசித் தீர்த்துக் கொள்வது; மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீட்டில் நியாயம் கோருவது; மத்திய — மாநில உறவுகள் பலவற்றில் புதிய சிந்தனையைத் தோற்றுவிப்பது ஆகியன தென் மாநில முதல்வர்கள் சபையின் முக்கிய குறிக்கோள்கள். ''வலுவான மாநில அரசுகளை விரும்பியபோதிலும் இச்சபை பாரத ஒருமைப்பாட்டுக்கோ அல்லது வலுவான மத்திய அரசுக்கோ எதிரானதல்ல'' என்றெல்லாம் தெளிவுபடுத்தி நாலு முதல்வர்களும் விடுத்துள்ள அறிக்கைகள்தாம் புரட்சியைத் தூண்டுவதாகத் தோன்றுகிறது இ.காங்கிரஸ் பார்வைக்கு.

டில்லியில் எல்லா அதிகாரங்களையும் குவித்துக்கொண்டு மாநில மக்களின் உணர்வுகளை மதிக்காமலும் மாநில அரசுகளைப் பொம்மைகளைப் போல் ஆட்டுவிக்க நினைப்பதுமான யதேச்சாதிகாரப் போக்குக்கு எதிர்ப்புக் காட்டுவது புரட்சியைத் தூண்டுவதாகும் எனில் அந்தப் புரட்சி ஓங்குக!

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

இரும்புக் குதிரைகள்



பாலகுமாரன்

அத்தியாயம் 12

காந்திலால் மேத்தா கண் விழித்த போது ஏழு மணி. கழுத்துச் சங்கிலியைத் தடவித் தேடி டாலரில் இருக்கும் வேங்கடா ஜலபதியை உற்றுப் பார்த்தான். கண் மடலில் ஒற்றிக் கொண்டான். ஜெய் பாலஜி என்றான். எழுந்தான். வீடு முழுக்க வனஸ்பதி வாசனை அடித்தது. எழுந்து பீடாப் பெட்டியைத் தேடி நேற்றைய ஜார்தா கருவை உதறி வாயில் போட்டுக் கொண்டான். நாலு முறை மென்றதும் ஜார்தா கருக்கென்று நெற்றி நரம்பில் ஏறிற்று. கண் இமையில் போதை கவிழ்ந்தது. அன்னத்திலும் கன்னக் கதுப்புகளிலும் சுகம் நகர்ந்தது.

தலையணைகளை உயர்த்திப்போட்டுச் சாய்ந்த படி அகலமான மார்பையும் வயிற்றையும் தடவிக் கொண்டான். காந்திலால் மேத்தாவின் மனைவி தரையில் படுக்கை விரித்துப் படுத்திருந்தாள். மேத்தா உட்கார்ந்திருக்கும் இரட்டைக் கட்டில் மாமனார் சீதனம் தான். ஆனாலும் மனைவி சந்தோஷமளித்த பிறகு தரைக்குப் போய்விட வேண்டும். இது கட்டளை. சோர்வோடு தூங்கிய பிறகு ஒரு சிறகுகூட மேலே படக் கூடாது. பகல் முழுக்க ஆட்களோடு பேசிப் போராடிச் சண்டையிட்டு வெற்றியோடு வரும் மனிதனுக்குத் தனிமை அவசியம். அந்த இடத்திலும் காதோடு பேச, கழுத்தை இறுக்கிக்



கொள்ள யாரும் தேவையில்லை. பெண்களைக் கண்டு தடுமாறுபவன் நல்ல பனியா இல்லை. ஒரு பனியா உழைப்பது பிறர் பொருட்டே. மனைவிக்கும் குழந்தைகளுக்கும் மற்றும் பலருக்கும் அள்ளிக் கொடுக்க. தருமம் செய்யப் பனியாவுக்குத் தெரியும். இருக்கும் பொழுது கொடுக்கப்படும். கொடுப்பதற்காகவே சேமித்து வைக்கப்படும். சேமிப்புக்காகவே அதிகம் உழைக்க வேண்டும். வாழ்க்கை இறுதிவரை வியாபாரம் பற்றிய கவனம் வேண்டும். சரி இன்றைய வேலை என்ன... ஆ... அந்த பம்பாய் லாரி. இங்கிலீஷ் கம்பெனி லோடு. நாற்பது டிரம்கள் கொண்ட வண்டி. ஒவ்வொரு டிரம்மிலும் இருநூறு லிட்டர் ரப்பர் பால். லடெக்ஸ் திரவம். துளைத்து எடுக்கிறார்கள். அரை மணிக்கு ஒரு போன். ஆ ஊ என்று கூச்சல். இன்று சாயங்காலத்துக்குள் வரவில்லையெனில் உன் சங்காத்தமே வேண்டாம் என்கிற மிரட்டல். எங்களுக்கு ஏற்பட்ட எல்லா நஷ்டத்துக்கும் வழக்குப் போடுவோம் என்ற அதட்டல்.

சகலத்துக்கும் காந்திலால் நிதானமாகவே பதில் சொன்னான். பம்பாய் சந்திப்புக்குப் போன் போட்டுக் கிளம்பின தேதி விசாரித்து பெங்களூர் சந்திப்புக்கு வந்ததை உறுதி செய்து இங்கிருந்து கிளம்பிய லாரியிடம் வழியில் பார்த்து விவரம் சொல்லும்படி கேட்டு எல்லா முயற்சியும் செய்தாயிற்று. முயற்சிகளை விளக்கிச் சொல்லியாயிற்று. கூச்சல் குறையவில்லை.

''சோட்டா சாப்... நான் லாரிக் கம்பெனிதான் நடத்துகிறேன். ஏரோப்ளேன் இல்லை. ஏரோப்ளேன் எட்டு மணி நேரம் தாமதமென்றால் எத்தனை பேர் கூச்சல் போடுவீர்கள்? கேண்டீனில் முட்டை ரொட்டி சாப்பிட்டு விட்டு லவுஞ்சில் பல் குத்திக் கொண்டுதானே இருப்பீர்கள். வரும். லாரி—வரும்.''

இது திமிர் பேச்சாம். அடாவடியாம். கம்பெனி முதலாளி வரை புகார் போய் விட்டது. கம்பெனி முதலாளி நிதானமாய்ப் பேசினார்.

''காந்திலால் மேத்தா காலை வணக்கம். உனக்கு ஏரோப்ளேன் கம்பெனி நடத்த ஆசை வந்தது பற்றி அறிந்தேன். என் பாராட்டுக்கள். என் வாழ்த்துக்கள். லாரி கம்பெனிக்கு நிறைய போட்டி இருக்கிறதைத் தெரிந்து கொண்டிருக்கிறாய். நல்லது. ஆனால் உன் ஒரு லாரி தாமதத்தால் என் கம்பெனி ஒரு வாரம் மூடப்படப் போகிறது. நானூறு பேர் வேலை இழக்கப் போகிறார்கள். உன் ஏரோப்ளேன் கம்பெனியில் வேலை போட்டுக் கொடு! மறுக்காதே காந்திலால். நானூறு பேரும் பெண்கள். சுறுசுறுப்பான

வர்கள். என்னையும் என் கம்பெனி ஆட்களையும் மட்டமாய் நினைக்கிறாய் போலிருக்கிறது. சரி ஒன்று செய். நாளைக் காலை என் ஆள் ஒருவனை உன்னிடம் அனுப்புகிறேன். விஸ்வநாதன் என்று பெயர். விஸ்வநாதன் என்பது ஒரு ஆணின் பெயர். பெண்ணல்ல. சிரிக்காதே. அவனிடம் உன் லாரி வழித்தடங்களைக் கூறு. உதவி செய். அவன் எப்படியாவது லாரியை அல்லது சரக்கை இங்கு கொண்டுவர முயற்சி செய்வான். அவனைக் கம்பெனி காரில் அனுப்புகிறேன். ஹெல்ப் அவனைக் ஹிம். என்ன முடியாதா? ஓ...லாரியைச் சுலபமாய்க் கண்டு பிடிக்க முடியாது என்கிறாயா? முடியாதது எதுவுமில்லை காந்திலால் மேத்தா. இம்பாஸிபிள்ஸ் ஆர் இம்மீடியட். மிரக்கல்ஸ் விட்டில் லேட்டர்.''

டக்கென்று போன் வைக்கப்பட்டுவிட்டது. அவர் பேசினது வேடிக்கையாய், கேலியாய் வெளிக்குத் தென்பட்டாலும் கண்டிப்பும் கோபமும் தெளிவாய்த் தெரிந்தன. பெரியவர்கள் இப்படித்தான் இனிமையாய்க் கோபித்துக் கொள்வார்கள். லாரிக் கம்பெனிக்கு நிறையப் போட்டி இருப்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறாய் நல்லது. என்ன அர்த்தம் இதற்கு? நீ இல்லாவிட்டால் நூறு லாரிக் கம்பெனி. ஜாக்கிரதை.

காந்தி லால் சுறுசுறுப்பானவன். தன் தோழமை லாரிக் கம்பெனிகளுக்குப்- போன் போட்டுக் கிளம்பும் வண்டிக்கெல்லாம் தன் வண்டி நம்பர் கொடுத்து விசாரிக்கச் சொன்னான். இரவு தகவல் வந்து விட்டது. இங்கிருந்து கிளம்பிய லாரிகள் பெங்களூர் சேர்ந்தன. அந்த ரப்பர் சூம்பு டிராம் ஏற்றிய வண்டி பெங்களூரில் ரிப்போர்ட் செய்து அந்த இடம் விட்டுக் கிளம்பி விட்டது. கிளம்புகையில் திருப்பதி வழியே போவேன் என்று கூலிக்காரர்களிடம் டிரைவர் சொன்னானாம். பெங்களூர் தங்காமல் கிளம்பினானாம். அரை நாள் திருப்பதியில் நின்றுவிட்டுச் சென்னை போவதாய்ச் சொன்னானாம். லாரியும் சரக்குமாய் எட்டு லட்சம் பெறுமானம். இது இந்தக் கணம் ஒரு லாரி டிரைவரிடம் அடக்கம். லாரி கம்பெனியின் தலைவிதியில் இதுவும் ஒன்று. கிளம்பிய பிறகு வந்து சேர்வது கடவுளின் கருணை. கிருஷ்ணகிரி, வாணியம்பாடி, ஆம்பூர் என்று வழக்கமான வழித்தடம் விட்டு விட்டு அனாவசியமாய்த் திருப்பதி புத்தூர் ரூட் எடுக்கிறான். யார் கேட்பது? வந்து நிற்கையில் அதட்டலாம். கூச்சல் போடலாம். மரம் மாதிரி நின்று கேட்டுவிட்டு மறுபடியும் தன் விருப்பத்துக்கு ஓட்டுவார்கள். டிரைவர்களை ரொம்பவும் முறைத்துக் கொள்ள முடியாது. லாரியோடுகாணாமல்போவார்கள். லாரியை நடுத்தெருவில் விட்டு விட்டு மறைந்து விடுவார்கள். பிடித்துவிடலாம். பிடித்து என்ன செய்ய? நஷ்டம் நஷ்டம்தான். இதோ ராவுத்தர் வண்டி எங்கோ கவிழ்ந்து கிடக்கிறதாம். டிரைவர் காணோமாம். ராவுத்தர் கார் எடுத்துக் கொண்டு ஓடியிருக்கிறார். வழி நெடுக 'கடவுளே கடவுளே' என்று பிரார்த்தனை செய்து கொண்டு போவார். எல்லா வண்டியும் உரிமையாளர்களேவா ஓட்ட முடியும்? நம்பிக்கைத் துரோகிகளைக் கடவுள்தான் தண்டிக்க வேண்டும்.

அந்த விஸ்வநாதனுக்கு இதை விவரமாய்ச் சொல்லி அனுப்பியாயிற்று. எங்கு அலைகிறானோ. வந்து என்ன கூச்சல் போடுவானோ. நம்பிக்கையான ஆட்கள் கிடைப்பது சிரமமாய் இருக்கிறது. கிடைத்தாலும் அவர்கள் லாரிகம்பெனியில் நிரந்தரமாய் வேலை செய்ய மறுக்கிறார்கள். அதுவும் இந்த மதராஸிகளுக்கு லாரி கம்பெனி வேலை மகா மட்டம் என்று நினைப்பு. மதராஸிகளுக்கு உழைப்பைவிட சொகுசு ரொம்ப முக்கியம்.

காந்தி லால் மேத்தா கடையைத் திறந்தான். விறுவிறுவென்று உள்ளே போய்த் தன் மேஜையைத் தொட்டுக் கும்பிட்டான். எதிரில் உள்ள வேங்கடாஜலபதி படத்தைக் கை கூப்பி உற்றுப் பார்த்தான். கண்களை மூடினான். பாலாஜி, பாலாஜி, பாலாஜி உள்ளே மனசு கூவிற்று. பரபரப்பாய்ப் பெரிய உருவம் தோன்றி மனசு கண் புத்தி முழுக்க வியாபித்தது. காந்திலால் மலர்ச்சியுடன் கண்களைத் திறந்தான். இப்படிப் பெரிய



இருபத்தி ஐந்து வருஷங்களுக்குமுன் கர்நாடகத்தில் உள்ள சிர்சி என்ற ஊரில் இருந்த ஒரு வாலிபர் அந்த ஊர் மக்கள் நாட்டு நடப்புக்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு செய்திப் பத்திரிகை ஆரம்பிக்க விரும்பினார். அவரிடம் போதிய பணமில்லை. ஆனால் தம் நண்பர்களிடம் முப்பது ரூபாய் வசூலித்து ''சிர்சி சமாசார்'' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார் அவர். அதற்கு அவரே ஆசிரியராக இருந்தார். அண்மையில் அந்தப் பத்திரிகை தன் வெள்ளி விழாவைக் கொண்டாடியது. அன்று அதைத் துவக்கிய அந்த வாலிபர் இன்று கர்நாடக முதலமைச்சராக இருக்கிறார். (அண்மையில் கர்நாடக முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டே ஒரு மகாநாட்டில் கூறியது.)

—அனிதா ராமச்சந்திரன்

பாலாஜிஉருவம்தோன்றி விட்டால் போதும், மனசு தெளிவாகி விடும். மீண்டும் பலம் கொள்ளும். அதிகம் குழம்பிய நாளில் இப்படி உள் மனத் தரிசனம் கிடைக்காது. இன்று நல்ல தரிசனம். பிரச்னை எதுவாயினும் நல்லபடி முடிந்து விடும். பகவான் பாலாஜி முடித்து விடுவார். இன்றைய வலிமைக்கு பாலாஜிதான் காரணம். இல்லையெனில் லாரி டிரான்ஸ்போர்ட் கம்பெனியை மனிதனு நடத்த முடியும்? அது பாலாஜிக்குத்தான் சாத்தியம். பெரும் புருஷனின் செயல். அவன் துணைதான் இந்த லாரிக் கம்பெனி.

அன்றைய தபாலை டைப்பிஸ்ட் பெண் பிரித்து வைத்தாள். முதல் கடிதம் சென்னையில் உள்ள பெரிய கம்பெனியிலிருந்து.

பம்பாய் துறைமுகத்துக்கு உள்ளேயிருந்து நூறு பெரிய பெட்டிகளைச்சென்னைக்கு எடுத்து வர முடியுமா என்று கேட்டிருந்தார்கள். ஒரு பெட்டியின் கன டன் என்று குறிப்பிட்டிருந்தார்கள். காந்திலால் கம்பெனியின் யோக்கியதையையும், லாரிகள் எத்தனை என்றும், ஒரு பெட்டிக்கு எவ்வளவு சரக்குக் கட்டணம் என்றும் கேட்டிருந்தார்கள்.

அது கார்பன் காப்பி கடிதம்தான். இது மாதிரி பல லாரிக் கம்பெனிகளைக் கேட்டிருப்பார்கள். யோக்கியதை உள்ளதை விலை படிமானமாய் இருப்பதைத் தேர்ந்தெடுப்பார்கள். காந்திலாலுக்கு அந்தக் கம்பெனி நிலவரம் தெரியும். பெரிய கம்பெனி, உடனடி பணம். தெளிவான வியாபாரம். கிடைத்தால் அதிர்ஷ்டம். பாலாஜிதான் துணை செய்ய வேண்டும். எல்லாவற்றையும் விட இந்தக் கடிதத்துக்கு முதலில் பதில் எழுத வேண்டும். பதில் கடிதத்தில் தன் டிரான்ஸ்போர்ட் கம்பெனி பற்றித் தெளிவாகவும் திடமாகவும் சொல்ல வேண்டும்.

காந்திலாலுக்கு வியாபாரம் பண்ணத் தெரியும். ஆங்கிலம் தெரியாது. உடைத்து உடைத்து ஆங்கிலம் பேசி ஒப்பேற்றிவிட முடியும். எழுதத் தெரியாது. படிக்கத் தெரியும். பதிலெழுத வராது. என்ன பதில் எழுத வேண்டும் என்று தெரியும். பாஷை வளையாது.

டைப்பிஸ்ட் பெண் சுத்தமாய் டைப் அடிப்பாள். சுயமாய்ப் பதில் எழுதத் தெரியாது. நன்கு ஆங்கிலம் தெரிந்த ஆட்கள் லாரிக் கம்பெனி வேலைக்கு வருவதில்லை. வந்தாலும் தங்குவதில்லை.

என்ன செய்வது என்று யோசித்தபடி காந்திலால் பல் குத்திக் கொண்டிருந்தான். பாலாஜி இருக்கிறார் என்று சமாதானப்படுத்திக்கொண்டான்.

தண்ணீர்த்தொட்டித்தெருவின் எல்லாக் கடைகளும் திறந்து விட்டன. கே. ஆர். வடிவேல் டிரான்ஸ்போர்ட் தவிர.

நாராயணசுவாமி வாசலில் துணிப் பையோடு உட்கார்ந்திருந்தார். பட்டணம் பரம அயோக்கியத்தனமானது என்பது காலையிலேயே விளங்கி விட்டது. வெளிக்குப் போகக் கூடக் காசு கேட்கிறார்கள். கார்ப்பரேஷன் கக்கூஸ்தானேடா நீ எதுக்குக் காசு கேக்கறே என்று சத்தம் போட்டார். காசு கொடுக்கா விட்டால் வெளியே விட மாட்டேன் என்று சொல்லி விட்டான். நின்று வாதாடிப் பார்த்தார். துர்நாற்றம்பொறுக்க முடியவில்லை. நாலணாவைக் கொடுத்துவிட்டு வழிநெடுகச் சபித்தபடி வந்தார்.

சென்னையில் நாராயணசுவாமிக்குத் தங்க இடமில்லை. லாட்ஜுக்கு இருபது ரூபாய் கொடுக்க மனசில்லை. இரவுப் படுக்கை கோயில் வாசல்தான். உடம்பு பாறுங்கல் படியில் படுத்து ரணமாய் வலித்தது. அடிவயிறு சூடேறி வலித்தது. நேற்று காலில் விழுந்தவன்தான் வடிவேலு. எழுந்திருக்கவில்லை. தினமும் இப்படித்தானும். காலையில் சரியாகி விடுமாம். விடிந்து ஒரு வார்த்தை சூடாகக் கேட்டு விட்டுப் போக வேண்டும் என்று நினைத்துக் கடை வாசலில் உட்கார்ந்திருந்தார். மணி தெரியவில்லை. எழுந்து அடுத்த கடைக்குப் போனார். குனிந்து மணி பார்த்தார். வலது கையைக் கண்களுக்கு மறைப்புக் கொடுத்தபடி உற்றுப் பார்த்தார். ஒன்பதா ஒன்பதரையா என்பது தெரியவில்லை. ஒரே முள்தான் கடிகாரத்தில் தெரிகிறது. இது என்ன கிரகச்சாரம். இந்தக் கடிகாரம் சரியில்லையா? இல்லை எனக்குத்தான் கண் போயிடுத்தா?

காந்திலால் கடை வாசலில் யாரோ ஒரு கிழவர் குனிந்து காலை வணக்கம் செய்வதைப் பார்த்தான். விபூதிக் கீற்றும் நரைத் தாடியுமாய்ப்பளிச்சென்று இருந்தார்.

''குட்மார்னிங் ஸார், வாங்கோ. என்ன வேணும்?''



1000!

கல்யாணத்தில் கலாட்டா நாடகத்தில் ஆரம்பித்த ராது பல நாடகங்களை அரங்கேற்றியுள்ளார் எனினும் ஆயிரமாவது நாடகமும் கல்யாணத்தில் கலாட்டாதான். அவரது சிரிப்பு டயலாக்குகளுக்குச் சில சாம்பிள்கள்.

நாடகம்: கல்யாணத்தில் கலாட்டா

திருமலை: ஏண்டா உனக்குப் பத்ரியைத் தெரியாது?
சிதம்பரம்: தெரியாதே!
திருமலை: முண்டம், நாம பள்ளிக்கூடத்திலே படிக்கிறபோது கடைசி பெஞ்சிலே உட்கார்ந் திருப்பானே, அந்த பத்ரி!
சிதம்பரம்: நமக்கப்புறம் ஏதடா பெஞ்சு?

நாடகம்: அவரேதான் என் கணவன்

வைரவேலு: ஏண்டா பொட்டையன் கோழியை அறுத்தியா?
வைகுண்டம்: அது பொட்டையன் கோழின்னு தெரியாதுண்ணே.
வைரவேலு: யாருடைய கோழின்னு தெரியாம ஏண்டா அறுத்தே?
வைகுண்டம்: ஒரு தடவைக்கு மூணு தடவை கேட்டேனே, யார் வீட்டுக் கோழி, யார் வீட்டுக் கோழின்னு. பதிலே இல்லே, அறுத்திட்டேன்!
வைரவேலு: யாரைக் கேட்டே?
வைகுண்டம்: கோழியை!

நாடகம்: என் கணவரின் மனைவி

பேரன்: இன்னிக்கு பேப்பர்ல என்ன தாத்தா விசேஷம்?
தாத்தா: அரிசிலே கலப்படம் செய்தவன் கைது. அபராதம் கட்டி வெளியேறும்போது திரும்பவும் கைதுசெய்யப்பட்டான்.
பேரன்: ஏன் தாத்தா?
தாத்தா: அபராதம் கட்டும்போது நல்ல ரூபாயோடு கள்ள ரூபாயும் சேர்த்துக் கட்டினான். அதனாலதான்!

தொகுப்பு: சலன்

1000-1000-1000-1000-1000-1000-1000-

''ம்ம்... குட்மார்னிங். ஒண்ணுமில்லை. மணி பார்த்தேன்.''

''நௌ இட் இஸ் நைன் ஃபார்ட்டி ஃபைவ் எக்ஸாக்ட்லி'' காந்திலால் கைக் கடிகாரம் பார்த்துத் தனக்கு ஆங்கிலம் சரியாய்ப் பேசவாவது வருகிறதா என்று டெஸ்ட் பண்ணிக் கொண்டான்.

''தேங்க்யூ வெரி மச். தேங்க் யூ. நான் கிழவன். கண் பார்வை சரியா யில்லே எனக்கு. அதுதான் கை தூக்கி உற்றுப் பார்த்தேன். மற்றபடி உங்கள் இதமான பதிலுக்கு நன்றி.''

முப்பது வருட வாத்தியார் உத்தியோகம். ரென் அண்ட் மார்ட்டின் கரைத்துக் குடித்த பிரயோகம். தெளிவான ஆங்கிலம் நாணு சாரிடமிருந்து பதிலாயிற்று.

''உள்ளே வாங்கோ சார்.'' காந்திலால் தமிழுக்குத் தாவினான்.

''சித்த குடிக்க ஜலம் தரேளா?'' நாணு சாரும் தஞ்சாவூர் தமிழுக்குப் பாய்ந்தார்.

ஜில்லென்ற பானை ஜலம் தொண்டைக் குழிக்குள் இறங்குகையில் சுகமாய் இருந்தது.

''ஹாவ் சம் டீ ஓல்ட் மேன்.''

தேனீர் இதமாய் இருந்தது.

''ஐ லைக் ஆல்வேஸ் ஓல்ட் மேன்'' காந்திலால் மறுபடி ஆங்கிலம் பேசிப் பார்த்தான். நாணு சாருக்கு அவன் காதைத் திருகித் தலையில் குட்டவேண்டும் போலிருந்தது.

''எனக்கு மன்னார்குடி. ஸ்கூல் வாத்தியாராயிருந்து ரிடையர் ஆயிட்டேன். அடுத்த கம்பெனி வடிவேல் என்கிட்டப் படிச்சவன். விசுவாசி. நல்ல குணம். வேலை போட்டுத் தரேன்னு கூப்பிட்டிருக்கான்.''

''மொள்ளப் பேசுங்கோ ஓல்ட் மேன். எனக்கு ஸ்பீட் தமிழ் புரியறதில்லே.'' காந்திலால் அவரைக் கையமர்த்தினான். எனக்கு இங்கிலீஷ் வரதில்லே. தமிழ் படிக்க வரதில்லே. தமிழ் நல்லாப் பேசுவேன். இங்கிலீஷ் நல்லா வராது. உங்க தமிழ் ரொம்ப ஸ்பீடு.''


''அதனாலென்ன வெள்ளைக்காரனுக்கே இங்கிலீஷ் நன்னா வராது. கொசக்குக் கொசக்குன்னு நிறையப் பேசுவான். எழுதச் சொல்லுங்கோ. வரிக்கு நாலு தப்பு. இங்கிலீஷ்னு அது மதராஸி பேசற இங்கிலீஷ்தான். மதராஸி எழுதற இங்கிலீஷ்தான்.''

காந்திலால் யோசித்தான். மெல்ல அந்தக் கம்பெனிக் கடிதம் நீட்டிப் பதில் எழுத முடியுமா என்றான். நாணு சார் கண்ணாடி மாட்டிக்கொண்டு படித்தார். ஸ்டெனோ டைப்பிஸ்ட் பெண்ணைக் கடிதம் எடுத்துக்கொள்ளச் சொன்னார். தேனருவியாய் சுகமாய் தம்பூர் சுருதியாய் அவர் ஆங்கிலம் பரவிற்று.

காந்திலால் மேத்தா கடிதம் படித்து முடிந்ததும் முகம் மலர்ந்தான். சட்டைப் பையில் கை விட்டு ஒற்றை நூறு ரூபாய் எடுத்துக் கவரில் வைத்து நீட்டினான்.

நாணு சார் வாய் பிளந்தார். இன்னிக்கு முழிச்ச முகம் நல்ல முகம் என்று இருவரும் நினைத்துக் கொள்கையில் கே. ஆர். வடிவேல் கடை மெல்லத் திறக்கப்பட்டது.

(தொடரும்)


சவீதா
கல்கி
17-4-83
இதழில்
ஆரம்பம்
நேசமுள்ள வான்சுடரே!

தராசு முனை சரியா?

13–3–83 இதழில் ரிசர்வ் பாங்க் ஊழியர்கள் இரத்த தானம் செய்தது பற்றி துணுக்கு இடம் பெற்றிருந்தது. இதுபோல 'சக்தி சர்க்கரை ஆலை'யில் உள்ள சுமார் 150 ஊழியர்கள் சேர்ந்து 'வாலண்டரி பிளட் டோனர்ஸ் அசோஸியேஷன்' என ஆரம்பித்துக் கடந்த இரண்டாண்டு காலமாக இரத்த தானம் செய்து கொண்டு இருக்கிறோம்.
சக்திநகர் எஸ். ரகு

58 சதவிகிதம் சுப்பிரமணியருக்கு திருச்செந்தூரில் நியாயம் கிட்டியுள்ளது என்பதை 'தராசு' முனையில் தீர்ப்பளித்த கல்கிக்கு சுப்பிரமணிய பிள்ளையின் மண்ணான இரணியல் மக்கள் சார்பில் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறோம்.
இரணியல் கலைமாறன்



வட்டமேஜை

வரவர 'தராசு' முனை சரியாக இல்லை. கோவில் அதிகாரி மரணத்தில் 'தராசு'வுக்குத் திட்டமான கருத்து இருப்பதில் ஆட்சேபம் இல்லை. ஆனால் அந்த விவகாரத்தைக் கொச்சைப்படுத்தி தி.மு.க. அரசியல் ஆதாயம் தேட முனைந்ததை எப்படி மறக்க முடியும்?.....
சென்னை-5 எஸ். வாணிசங்கர்

(சுப்பிரமணிய பிள்ளை மரணம், பால் கமிஷன் அறிக்கை, அனாதை அ.தி.மு.க. அரசு அலட்சியப் படுத்தியது ஆகிய விஷயங்களில் கல்கி ஆரம்ப முதல் ஒரே மாதிரிதான் பேசி வந்துள்ளது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடந்த தில்லு முல்லுகளைத் தம் கடிதத்தில் பட்டியல் போட்டிருக்கிறார் வாணிசங்கர். பழைய கல்கி ஏடுகளைப் புரட்டினால் தி.மு.க. செய்த தவறுகளைச் சுட்டிக் காட்ட கல்கி என்றுமே தயங்கியதில்லை என விளங்கும். ஒவ்வொரு பிரச்னையையும் தனித் தனியே பார்த்து கல்கி கருத்துத் தெரிவிக்கிறதே தவிர, கட்சியையோ அதன் தலைவரையோ மனத்தில் கொண்டு எதுவும் எழுதப்படுவதில்லை. தி.மு.க. தவறு செய்தது என்பதே அ.தி.மு.க. தவறுகள் செய்ய லைசென்ஸ் ஆகிவிடாது. -ஆர்)

சவிதாவின் தொடர்கதையா? ஹய்யா! ரொம்ப மகிழ்ச்சியா இருக்கு சார். நீண்ட காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். சித்திரைச் சிறப்பிதழில் தொடர்வது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.
கோவை ஹாலித் ஷரீஃப்

சீட்டுக் கம்பெனிகள் மோசடி பற்றி ''எச்சரிக்கை'' கொடுத்துள்ளீர்கள். அதுமட்டுமல்ல. கடந்த சில நாட்களாகப் பல வடநாட்டு முகவரிகளில் விளம்பரத்தை வைத்துக் கட்டங்களைப் பூர்த்தி செய்தால் டேப்ரிகார்டர் பரிசு என்கிறார்கள். ஆனால், அதனைப் பூர்த்தி செய்து அனுப்பிய பின் தபால் செலவுக்கு 20 அல்லது 30 ரூபாய் அனுப்பச் சொல்கிறார்கள். அவ்வாறு அனுப்பியபின்பு அந்நிறுவனங்கள் வெற்றுப் பெட்டிகளைத்தான் அனுப்புகிறார்கள். இத்தகைய விளம்பரங்களைப் பிரபல பத்திரிகைகளும் ஏமாற்று வேலை என்று அறிந்தே பிரசுரிக்கின்றன. எனவே, அரசே தலையிட்டு இவற்றைத் தடை செய்தால் நல்லது.
கோவை ஜபார் அலி

தொடர்ந்து மூன்று வருடங்களாக டேபிள் டென்னிஸில் தேசிய சாம்பியனாகத் திகழ்ந்த தமிழ்நாட்டுக்காரர் சந்திரசேகர் அளித்த பேட்டியின் மூலம் விளையாட்டு வீரர்களுக்கு விளையாடும்போது நிதானம் அவசியம் என்பதை அறிய முடிந்தது.
லால்குடி எம். இராஜேந்திரன்

டேபிள் டென்னிஸ் சந்திரசேகர் ஸ்டேட் பாங்க் ஆபீஸர். இந்தியன் பாங்கில் அல்ல.
சென்னை-4 மயிலை கோபி


'உயிருள்ள வரை உஷா'வில் உயிர் பாடல்கள்தான். அதைப் பற்றி ஒருவரிகூட எழுதவில்லையே!
திருவாரூர் என். நம்பி

'ஃபோட்டோ ஆல்பம்' பக்கங்களில் நீங்கள் வெளியிட்டிருந்த போட்டோக்களும் அவை பற்றிய செய்திகளும் அட்டகாசம்.
நெல்லிக்குப்பம் ரா. ஜோதிராமன்

அனுராதா ரமணனின் 'அசடு' சிறுகதை அருமை! உண்மை ரியலிஸக் கதை.
சீர்காழி நேசன்

எங்கள் ஊர் ராஜாபார்வி சங்குப்பிள்ளையைக் குறித்து முழு விவரத்தையும் படித்து நானும் ஆச்சரியப்பட்டேன்.
மதுரை-6 கே. ராஜகோபாலன்

பாலகுமாரன் அவர்களின் 'ராவுத்தர் சொத்து நடேச முதலி சொத்து. நடேச முதலி ராவுத்தர் சொத்து' என்னும் வாக்கியம் நமக்கும் இம் மாதிரி ஒரு ஆத்மார்த்தமான சாத்விகமுள்ள சிநேகம் கிடைக்காதா என்ற எண்ணத்தை உண்டு பண்ணியுள்ளது.
நிலக்கோட்டை வனிதா முருகன்



ஆரோக்கியம், ஆனந்தம், ஒன்றுக்கொன்று ஆதாரம்!
போர்ன்விடா பருகுங்கள்.


உங்கள் குடும்பத்தினருக்கு இன்சுவைமிக்க காட்பரிஸ் போர்ன்விடா வழங்குங்கள். கோகோ, மால்ட், பால் மற்றும் சர்க்கரையின் நற்பண்புகள் நிறைந்துள்ளது, போர்ன்விடா— உங்கள் குடும்பத்தினருக்கு அன்றுடம் இருவேளை வழங்குங்கள்.



OBM/6844/TM

காட்பரிஸ்
போர்ன்விடா உங்களோடு வளரும் நன்மை


கள்வனின்
காதலி
அமரர்
கல்கி



அத்தியாயம் 47

பூமி சிவந்தது!

''முத்தையா! நல்ல இடம் பார்த்துக் கொண்டு வந்து உட்கார்ந்திருக்கிறாய்? நீ எவ்வளவோ சரியாக அடையாளம் சொல்லியிருந்தும் கண்டு பிடிப்பதற்குத் திண்டாடிப் போய்விட்டேன். எவ்வளவு அடர்த்தியான காடு! இதில் புகுந்து வருவதற்கு ரொம்பக் கஷ்டப்பட்டுப் போய் விட்டேன்...'' என்றான் கமலபதி. பிறகும், ''இதற்குப் பொருத்தமாக ஏதோ ஒரு பாட்டு இருக்கிறதே! அது என்ன?...'' என்று சொல்லி, ஒரு நிமிஷ சிந்தனையில் ஆழ்ந்திருந்துவிட்டு, ''ஆமாம்: பாரதியின் பாட்டுத்தான்'' என்று கூறிப் பாட ஆரம்பித்தான்:

திக்குத் தெரியாத காட்டில் - உனைத்
தேடித் தேடி இளைத்தேனே! (திக்கு)

மிக்க நலமுடைய மரங்கள் — பல
விந்தைச் சுவையுடைய கனிகள்—எந்தப்
பக்கத்தையும் மறைக்கும் வரைகள்—அங்கு
பாடி நகர்ந்து வரும் நதிகள்—ஒரு (திக்கு)

''மலைகளைத் தவிர பாக்கி வர்ணனையெல்லாம் மிகவும் பொருத்தமாயிருக்கிறதல்லவா!'' என்றான் கமலபதி.

அப்போது முத்தையன் சொன்னான்: ''அந்தப் பாட்டில் இதையெல்லாம் விட அதிகப் பொருத்தமாயிருக்கும் அடி வேறொன்றிருக்கிறதே!

''பெண்ணே உனதழகைக் கண்டு—மனம்
பித்தம் கொள்ளு''தென்று நகைத்தான்—''அடி
கண்ணே எனதிரு கண்மணியே—உனைக்
கட்டித் தழுவ மனம் கொண்டேன்!''

இவ்வாறு பாடிவிட்டு முத்தையன் கமலபதியைச் சுற்றிச் சுற்றி வந்து, நாடக மேடையில் திருடன் ஆடுவதைப் போல் ஆடத் தொடங்கினான்.

''உங்களுக்கு என்ன 'கிராக்' புடிச்சுப் போச்சா?'' என்ற குரலைக் கேட்டு இரண்டு பேரும் திடுக்கிட்டுப் பார்த்தார்கள். முகம்மது ஷெரீப் சாயபுவின் கண்களில் தீப்பொறி பறந்து கொண்டிருந்தது. ''அரே! உங்களுக்குப் பிழைக்கப் போக இஷ்டமில்லை யென்று தோணுகிறது. தூக்குமேடையிலே சாகத்தான் இஷ்டமா? இந்த லயன் கரைச் சாலையில் இன்றைக்குக் கிழக்கேயிருந்து மேற்கே நூறு சிகப்புத் தலைப்பாகையும், மேற்கே யிருந்து கிழக்கே நூறு சிகப்புத் தலைப்பாகையும் போயிருக்கு. இங்கே நீங்கள் பாட்டுப் படிச்சுக் கொண்டு கூத்தடிக்கிறீங்க!'' என்றார் சாயபு.

கமலபதி அவரிடம் நெருங்கி வந்து, ''பாயி! கோபம் வேண்டாம். நாங்கள் செய்தது தப்புத்தான். நீங்க போங்க. இதோ உங்கள் பின்னாலேயே நான் வந்து விடுகிறேன்'' என்றான்.

''ஆமாம்! நான் போகத்தான் போகிறேன். நீங்கள்தான் சாகத் துணிஞ்சிருந்தால்,நான் ஏன்மாட்டிக்கவேணும்? இதோ நான் போறேன். ஐந்து நிமிஷத்தில் நீ என் பின்னோடு வந்து சேர்ந்து கொண்டாலாச்சு, இல்லாவிட்டால் 'இந்தப் பொம்பளை எனக்கு வேண்டாம்' என்று 'தலாக்' சொல்லி விட்டுப் போய் விடுவேன்'' என்றார் சாயபு. பிறகு முத்தையன் முதுகில் தட்டிக்கொடுத்து,''தேக்கோ உஷார்!'' என்று ஜாக்கிரதைப் படுத்தி விட்டு, காட்டுக்குள் புகுந்து போகத் தொடங்கினார்.

* * *

கமலபதி, ''முத்தையா! நானும் போக வேண்டியதுதான். எனக்கென்னமோ போக இஷ்டமில்லை. உன்னுடன் இந்தக் காட்டில் இப்படியே இருந்து காலம் கழித்து விடலாமென்று தோன்றுகிறது. ஆனால் முடியாத காரியத்தைப் பற்றி யோசித்து என்ன பிரயோஜனம்? நான் போகிறேன். நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கட்டும்'' என்றான்.

''கமலி! ஒருவேளை நம்முடைய 'பிளா'னெல்லாம் தவறிப் போய் எனக்கேதாவது நேர்ந்து விட்டால், நீதான் அபிராமியைக் காப்பாற்ற வேண்டும்'' என்று தழுதழுத்த குரலில் சொன்னான் முத்தையன்.

''சரிதான் போ! நம்முடைய 'பிளான்' எதற்காகத் தவறிப் போகணும்? எல்லாம் சரியாக நடக்கும். பார், இன்னும் பத்து நாளில் நீ ஷெரீப் சாயபுவுடன் போய்க் காரைக்காலில் கப்பல் ஏறிவிடப் போகிறாய். நாங்கள் உன்னைச் சென்னைத் துறைமுகத்தில் சந்திக்கப் போகிறோம். அங்கே அபிராமியைப் பார்க்கும்போது மட்டும் 'எங்கப்பா குதிருக்குள் இல்லை' என்று ஏதாவது அழுது கிழுது வைக்காதே. சரி, நான் போய் வருகிறேன்!'' என்று கமலபதி கிளம்பினான். கிளம்பினவனை முத்தையன் கையைப் பிடித்துத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கட்டித் தழுவிக் கொண்டான். ''நீ என்னமோ சொல்கிறாய். ஆனால் எனக்கு மட்டும் நம்பிக்கை ஏற்படவில்லை. உன்னை நான் பார்ப்பது கடைசித் தடவையோ என்னவோ, யார் கண்டது?'' என்று முத்தையன் சொன்னபோது அவனுடைய கண்களில் நீர் துளிர்த்தது.

அப்போது கமலபதி தன் முகத்தில் புன்னகை வருவித்துக் கொண்டு, ''அதிருக்கட்டும், முத்தையா! இப்போது ஸ்ரீமதி கல்யாணி தேவியார் நம்மைப் பார்த்தால் என்ன நினைத்துக் கொள்வார்கள்?'' என்றான். முத்தையன் கலகலவென்று நகைத்தான். ''நினைத்துக் கொள்வது என்ன?ஆபத்துத்தான்! சரி, நேரமாய் விட்டது. போய் வா!'' என்றான். ''ஓகோ! கல்யாணி வரும் நேரமாய் விட்டது என்கிறாயா? நான் அவளைப் பார்த்து விட்டுத்தான் போகிறேனே? ஒரு சக்களத்திச் சண்டை போட்டுப் பார்க்கலாம்'' என்றான் கமலபதி.

''ஐயோ! வேண்டாம்! நீ போய்வா'' என்றான் முத்தையன். கமலபதி, கோஷா அங்கியைக் கையில் சுருட்டி எடுத்துக் கொண்டு திரும்பித் திரும்பிப்

ஒருவர்: பட்ஜெட் எப்படி?
மற்றவர்: எப்பவும் துண்டுதான் விழும்! இந்த முறை துப்பட்டியே விழுகிறது.
—இ. சுந்தரேசன்



பார்த்துச் சிரித்துக் கொண்டே சென்று காட்டுக்குள் மறைந்தான்.

❋ ❋ ❋

கமலபதி போய்ச் சுமார் அரை மணி இருக்கும். முத்தையன் வழக்கம்போல் மரத்தின் வேரில் தலையை வைத்துப் படுத்துக் கொண்டிருந்தான். "இன்றைக்கு ஏன் கல்யாணி இன்னும் வரவில்லை?" என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தான். நிஜமாகவே கமலபதி சொன்னது போல் நேர்ந்திருந்தால்—அதாவது கமலபதி தன்னுடன் பேசிக் கொண்டிருக்கும்போது கல்யாணி வந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்று எண்ணியபோது அவன் முகத்தில் புன்னகை உண்டாயிற்று. தன்மேல் அவளுக்குச் சந்தேகம் உண்டாகியிருக்குமா? கோபித்துக் கொள்வாளா? அல்லது அழுவாளா? சாதாரண விஷயங்களிலேயே அவளுக்கு ஆத்திரம் வந்துவிட்டால் ரகளைதானே? இந்தச் சமாசாரத்தில் கேட்க வேண்டுமா? அப்புறம் நிஜம் வெளியாகும்போது என்ன செய்வாள்? கோபம் எல்லாம் பறந்து போய்ச் சிரிப்பாள் அல்லவா? "நல்ல வேடிக்கை!" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான் முத்தையன்.

ஆ! அது என்ன, அந்தப் புதர்களுக்கிடையில் சிகப்பாய்த் தெரிகிறது?-முத்தையனுடைய நெஞ்சு கோவில் நகராவைப் போல் அப்போது அடித்துக் கொண்டது. இதோ இந்த மரத்தின் மறைவில்? அதோ, அதோ, அதோ, அவ்வளவும் சிகப்புத் தலைப்பாக்கள்? இது நிஜமா? சித்தப் பிரமையா, அல்லது கனவா? முத்தையன் கண்ணைக் கசக்கி விட்டுப் பார்த்தான். கனவில்லை பிரமையுமில்லை — நிஜந்தான். போலீஸ்காரர்கள் தன்னை நாலாபுறமும் சூழ்ந்து கொண்டிருப்பதை முத்தையன் உணர்ந்தான்.

இது சந்தேகமறத் தெரிந்தவுடனே முத்தையனுடைய உள்ளமும் தெளிந்து விட்டது. அந்த உள்ளத்தில் இப்போது அணுவளவும் குழப்பமில்லை. சென்ற இரண்டு மூன்று வருஷ காலமாய் எதிர்பார்த்த விஷயம்தானே? முத்தையனுடைய உடம்பு ஒரு தடவை சிலிர்த்தது. அன்றைய தினம் இரண்டாவது தடவையாக அவன் கையில் ரிவால்வருடன் துள்ளிக் குதித்து எழுந்தான். ஆனால் இந்தத் தடவை ரிவால்வரைக் கீழே போடவில்லை. அதிலிருந்து வேட்டுக்கள் கிளம்பி அந்த வனப் பிரதேசமெல்லாம் எதிரொலி செய்தது.

அதே சமயத்தில் போலீஸ்காரர்களும் சுட்டார்கள். இருடனுடைய முழங்காலுக்குக் கீழே சுடும்படிதான் அவர்களுக்கு உத்தரவு. அதன்படியே அவர்கள் சுட்டார்கள். முதலில் பல குண்டுகள் அவன் மேல் படாமல், சிதறி விழுந்தன. கடைசியாக ஒரு குண்டு முத்தையனுடைய காலில் பட்டது. அதனால் அவன் கீழே விழுந்த சமயத்தில் இன்னும் நாலு குண்டுகள் அவன் மீது பாய்ந்தன. ஒன்று தோளின் மேல், ஒன்று விலாவில், ஒன்று தொடையில்— இப்படி. முத்தையனுடைய தேகத்தில் இரத்தம் பீறிட்டு அடித்தது. அவன் விழுந்த இடத்தில் பூமி நெடுந்தூரம் ரத்தத்தினால் சிவந்தது!

அடுத்த கணத்தில் பத்துப் பன்னிரண்டு போலீஸ்காரர்கள் சேர்ந்தாற் போல் ஓடிவந்து முத்தையனைப் பிடித்துக் கட்டினார்கள்.

அத்தியாயம் 48

நெஞ்சு பிளந்தது

இராஜன் வாய்க்காலில் மூங்கில் பாலத்தைத் தாண்டிச் சென்ற கல்

யாணி தயங்கித் தயங்கி நடந்தாள். ஏனோ அவளுக்கு வீட்டுக்குத் திரும்பிச் செல்ல மனம் ஒப்பவில்லை. அவளுடைய கால்கள் பூங்குளம் கிராமத்தை நோக்கிச் சென்றனவாயினும், அவளுடைய இதயம் அந்தப் பாழடைந்த கோவிலிலிருந்து வரவே மாட்டேனென்று பிடிவாதம் பிடித்தது.


அந்த நாவல் மரத்தடியில் தான் கண்ட காட்சியை நினைக்க நினைக்க அவளுடைய இரத்தம் கொதிப்படைந்தது. அவளுடைய நெஞ்சு பிளந்து இரண்டாகி விடுவது போன்ற ஒரு வேதனை உணர்ச்சி அவளைச் சித்திரவதை செய்தது. அப்படிப் பிளந்து விடாமல் இருக்கும் பொருட்டு நெஞ்சை ஒரு கையினால் அமுக்கிப் பிடித்துக்கொண்டு நடந்தாள்.

பல வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் அதே நாவல் மரத்தடியில் நடந்த ஒரு சம்பவம் அவள் நினைவுக்கு வந்தது. முத்தையன் அப்போது ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தான். அவன் ஊருக்கு வந்துவிட்ட செய்தி தெரிந்து கல்யாணி குதூகலமடைந்திருந்தாள். வழக்கம் போல் அவனை எதிர்பார்த்து அவள் அப்பாழடைந்த கோவிலுக்குப் போனாள். முன்னாலேயே அவன் அங்கு வந்து இவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். இன்றைய தினம் அவன் உட்கார்ந்திருந்த இடத்திலேயே அன்றும் உட்கார்ந்திருந்தான். கல்யாணி அருகில் சென்றதும், இன்று அந்தத் தேவடியாளைக் கட்டித் தழுவிக் கொண்டானே பாவி, அதே மாதிரி இவளைக் கட்டித் தழுவிக் கொண்டானே!

நீதிபதி: என்ன இது! திரும்பத் திரும்ப கோர்ட்டுக்கு வந்துகிட்டே இருக்கே!

கைதி: அப்படின்னா ரெகுலர் கஸ்டமருக்குக் கொஞ்சம் கன்செஷன் கொடுங்க எசமான்!

—சிவசக்தி



அன்று நடந்த பேச்சு முழுவதும் அப்படியே கல்யாணிக்கு நினைவு வந்தது. அந்தப் பாழடைந்த கோவிலுக்குள் ஸ்வாமி ஒன்றும் இல்லையல்லவா? இவர்கள் பெரியவர்களான பிறகு அந்தக் கோவிலைப் புதுப்பித்துக் கட்டி அதற்குள்ளே ஸ்வாமி பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்று இரண்டு பேரும் சேர்ந்து முடிவு செய்தார்கள். ஆனால் கோவிலுக்குள் என்ன ஸ்வாமி வைப்பது? முத்தையன் ஒவ்வொரு ஸ்வாமியாகச் சொல்லிக் கொண்டு வந்தான். ''கிருஷ்ண விக்ரகம் வைப்போம்'' என்றான். ''கூடவே கூடாது'' என்றாள் கல்யாணி. ''கிருஷ்ணன் மேல் உனக்கு என்ன கோபம்? போனால் போகட்டும் சுப்பிரமணிய சுவாமியை வைப்போமா?'' என்றான் முத்தையன். ''அதுவும் வேண்டாம்!'' என்றாள் கல்யாணி. இப்படி ஒவ்வொரு சுவாமியாகத் தள்ளிக் கொண்டு வந்து கடைசியில் முத்தையன் ''எல்லா சுவாமியும் ஆகிவிட்டது. இராமர் ஒருவர்தான் பாக்கி, அவரையும் வேண்டாம் என்று நீ சொல்லி விட்டால், நாம் இரண்டு பேருமே, சுவாமியும் அம்மனுமாய் உட்கார்ந்து விட வேண்டியதுதான்'' என்றான். ''இராமரை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. இராமரையே வைக்கலாம்'' என்றாள் கல்யாணி. மற்ற ஸ்வாமியை யெல்லாம் வேண்டாம் என்று சொல்லி, இராமரை வைக்க மட்டும் சம்மதித்ததற்கு என்ன காரணம் என்று முத்தையன் விசாரித்தான். கல்யாணி முதலில் இதற்குச் சரியான பதில் சொல்லவில்லை. கடைசியாக வற்புறுத்திக் கேட்டதின் பேரில் ''இராமருக்குத்தான் ஒரே பெண்டாட்டி; ஆகையால்தான் அவரை எனக்குப் பிடிக்கிறது. மற்ற சுவாமிகளுக்கு எல்லாம் இரண்டு பேரும், அதற்கு மேலும் கூட இருக்கிறார்கள். அவர்களை எனக்குப் பிடிக்கவில்லை'' என்றாள் கல்யாணி. உடனே முத்தையன் கல்யாணியைத் தூக்கித் தன் மடியில் உட்கார வைத்துக் கொண்டு, ''என் கண்ணே! நான் இராமரைப் போலிருப்பேன். உன்னைத் தவிர வேறு ஸ்திரீயை நிமிர்ந்து கூடப் பார்க்க மாட்டேன்'' என்றான்.

அன்று அப்படி வாக்குறுதி செய்த முத்தையன் இன்றைக்கு எப்படியாகி விட்டான்! அடப்பாவி! ரயில்வே ஸ்டேஷனில் உன்னைப் பற்றி ஜனங்கள் பேசிக் கொண்டதெல்லாம் நிஜந்தானா? ஐயோ! மோசமல்லவா போய் விட்டேன்? நான் இருக்கிறேனே உன்னைத்

தவிர உலகில் வேறு நினைவே இல்லா மல் — அப்படியே நீயும் இருப்பாய் என்றல்லவா எண்ணி விட்டேன்? உனக் காகவா நான் இந்தச் சொத்து, சுதந் திரம், வீடு, வாசல் எல்லாவற்றையும் விட்டு விட்டுக் கப்பலேறி வரத் தயாரா யிருந்தேன்? ஐயோ! என்ன அசட்டாய்ப் போனேன்? — ஆகா! இது என்ன உல கம்? சூதும் வாதும் பொய்யும் புனை சுருட்டும் நிறைந்த உலகம்? — இதை யெல்லாம் நினைக்கும்போது இறந்து போனாரே, அவர் எப்படிப்பட்ட உத்த மர்? அவர் புண்ணிய புருஷரானபடி யால் இந்தப் பாவியுடன் எத்தனை நாள் வாழ்வது என்று போய்விட்டார் போலிருக்கிறது!....

* * *

இப்படி எண்ணமிட்டுக் கொண்டே போன கல்யாணிக்குக் காலிலே ஒரு கல் தடுக்கி விட்டது. கட்டை விரலில் இரத்தம் வந்தது. தலை கிறுகிறு வென்று சுற்றுகிறாற் போலிருந்தது. பாதை ஓரத்தில் சற்று உட்கார்ந்தாள். அவள் உட்கார்ந்த இடத்தில் ஒரு தும்பைச் செடி பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தது. கல்யாணி ஒரு தும் பைப் பூவைப் பறித்தாள். ''என் னுடைய அன்பு இந்தத் தும்பைப் பூவைப் போல் அவ்வளவு பரிசுத்தமா யிருந்தது. அதை இப்படிக் கசக்கி எறிந்து விட்டானே பாவி!'' என்று எண்ணிய வண்ணம் அந்தப் பூவைக் கசக்கினாள்.

திடீரென்று அவளுடைய உள்ளத்தின் எந்த மூலையிலிருந்தோ ஓர் எண்ணம் உதயமாயிற்று. ''ஒருவேளை நாம் பார்த்தது பொய்யோ? வெறும் பிர மையா யிருக்குமோ?'' என்ற சந் தேகம் தோன்றிற்று. நிமிஷத்துக்கு நிமிஷம்அந்தச்சந்தேகம் அதிகமாயிற்று. ''அந்த ஸ்திரீ யார்?'' அவள் எப்படி அங்கே வந்திருப்பாள்? என்ன தப்பு பண்ணி விட்டோம்? மளமளவென்று அருகில் போய் உண்மையைக் கண்டு பிடிக்காமல், தூர இருந்தபடியே வந்து விட்டோமே?'' என்று எண்ணிக் கல்யாணி தவித்தாள். ''மோகினிப் பிசாசு என்கிறார்களே அது நிஜந்- தானோ என்னமோ? பிசாசு இப்படி உருவம் எடுத்து வந்தாலும் வந்திருக் கலாம் அல்லவா! இல்லாவிட்டால், அப்படித் தளுக்கும் குலுக்குமாக ஒரு பெண் பிள்ளை அந்தக் காட்டில் எப்படி வந்தாள், எங்கிருந்து வந்தாள்?...'' இம்மாதிரி விபரீதமான சந்தேகங்கள்



நிருபர்: தேர்தலில் வெற்றி பெற்ற நீங்கள் மக்களுக்கு என்ன நன்மைகள் செய்வீங்க?

எம். எல். ஏ.: மூத்த பையனுக்குப் பங் களா, இளைய பையனுக்கு கார், என் பெண்ணுக்கு வைர நெக்லஸ்...!''

நிருபர்: நான் கேட்டது, தொகுதி மக்களுக்கு! —ஆர். சுப்பு

எல்லாம் கல்யாணிக்குத் தோன்றின. அப்படி இருந்தால்முத்தையனைப் பற்றித் தான் எண்ணியதெல்லாம் அநியாய மல்லவா?அநியாயத்தோடேயா?ஐயோ! அந்தப் பிராமணன்! அவன் யாரோ என்னமோ தெரியவில்லையே? பார்த் தால் போலீஸ்காரன் மாதிரி இருந் ததே? அவனிடம் முத்தையன் இருக்கு மிடம் சொல்லி விட்டோமே? — என்ன நேருமோ, என்னமோ? ஸ்வாமி பக வானே!

* * *

உடனே திரும்பி முத்தையன் இருக் கும் இடம் போக வேண்டும் என்ற அடங்காத தாபம் அப்போது கல்யா ணிக்கு உண்டாயிற்று. அவன் தனக்குத் துரோகம் செய்திருந்தாலும் சரி செய்யா விட்டாலும் சரி, அவனை அந்த இடத்தில் இனிமேல் இருக்க வேண் டாம் என்று எச்சரிப்பது தன்னுடைய கடமை என்று கல்யாணி கருதினாள். எனவே, திரும்பிக் கொள்ளிடக் கரை நோக்கி நடக்கத் தொடங்கினாள். அவள் ஐந்தாறு அடிதான் நடந்திருப்பாள். 'டுமீல்' டுமீல்' என்ற துப்பாக்கி வேட் டுச் சத்தம் கேட்டது. ஒன்றன் பின் ஒன்றாகச் சுமார் மூன்று நிமிஷ நேரம் வெடிகள் தீர்ந்த வண்ணம் இருந்தன.

அந்தச் சத்தம் திக்குத் திகாந்திரங்களில் எல்லாம் பரவி எதிரொலி செய்து முழங்கிற்று.

வெடி தீர்ந்து கொண்டிருந்தவரையில் கல்யாணி ஸ்தம்பித்துப் போய் நின்றாள். சத்தம் நின்றதும் அவளுடைய வாழ்க்கையிலேயே என்றும் அறியாத பதை பதைப்புடன் லயன் கரைச் சாலையை நோக்கி நடந்தாள்.

* * *

துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டு, அங்கங்கே வயல்களில் வேலை செய்து கொண்டிருந்த குடியானவர்களும், குடியானவ ஸ்திரீகளும் வேலையை அப்படி அப்படியே போட்டுவிட்டு ஓடி வந்தார்கள். ஆகவே, கல்யாணி மூங்கில் பாலத்தை அடைந்தபோது லயன் கரைச் சாலையில் ஏகக் கூட்டம் கூடியிருந்தது. எல்லாரும் அவரவர்களுக்குத் தோன்றியபடி பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, கிழக்கே நூறு கஜ தூரத்தில் படுகைக் காட்டிலிருந்து பத்துப் பன்னிரண்டு போலீஸ்காரர்கள் சாலையில் ஏறுவது தெரிந்தது. ஜனங்கள் அந்தப் பக்கம் நோக்கி ஓடினார்கள். ஆனால் போலீஸ்காரர்கள் இரண்டு பேர் கையில் பிடித்த துப்பாக்கியுடன் நடுச் சாலையில் நின்று அவர்களைச் சுட்டு விடுவதாகப் பயமுறுத்தவே ஜனங்கள் தயங்கி நின்று விட்டனர். பெரும்பாலான போலீஸ்காரர்கள் விரைந்து கிழக்கு நோக்கிச் சென்றார்கள். கும்பலாகச் சென்ற அவர்களுக்கு மத்தியில் நாலு சேவகர்கள் காயம் பட்ட மனிதன் ஒருவனைத் தூக்கிக் கொண்டு போவது தெரிந்தது.

கல்யாணி இதை யெல்லாம் பார்த்தாள். ''செத்துப் போய்விட்டான்'' என்று சிலரும், ''இல்லை, சாகவில்லை. காயம் மட்டும் பலம்'' என்று சிலரும் பேசியதெல்லாம் அவள் காதில் அரைகுறையாய் விழுந்தது. குடியானவ ஸ்திரீகள் சிலர் வந்து கல்யாணியைச் சூழ்ந்து கொண்டனர். ''ஆச்சி! இந்தக் கொள்ளிடக்கரையிலே நீங்க பாட்டுக்குத் தினமும் போய்க் கொண்டிருந்தீர்களே! இங்கேயே இத்தனை நாளும் திருடன் இருந்திருக்கிறானே ஆச்சி! ஏதோ உங்க பெரியவங்க பண்ணிய புண்ணியந்தான் உங்களுக்கு ஒன்றும் நேரவில்லை'' என்றார்கள்.

கல்யாணி அவர்களுக்குப் பதில் ஒன்றும் சொல்லாமலும், குனிந்த தலை நிமிராமலும் வீட்டை நோக்கி நடக்கலானாள். அவளுடைய முகத்தை மட்டும் அந்தச் சமயம் மற்றவர்கள் பார்த்திருந்தால், ஐயோ! எவ்வளவு கலவரம் அடைந்திருப்பார்கள்! (தொடரும்)

பல் டாக்டர்: ஏன்யா பல்லையே இன்னும் பிடுங்கலே? அதுக்குள்ள இப்படிக் கூச்சல் போடுறியே?

பேஷண்ட்: அது வந்து... நீங்க பிடுங்க வேண்டிய பல் மேல் வரிசையில் இருக்கு சார்!

பட்டுக்கோட்டை ரவி





அற்புதமான ஸுமீத்! இதன் வகையில் இந்தியாவிலேயே முதலாவது. நாடெங்கிலும் மேன்மேலும் அதிக இல்லத்தரசிகளுக்கு வியப்பூட்டி வருகிறது.


ஸுமீத்தில் மட்டுமே, எல்லா வேலைகளுக்கும் பயனுறும், விசேஷமாக வடிவமைக்கப்பட்ட, பல-பயனுள்ள ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜாடி. அதன் மீது உள்ளே பார்க்கக் கூடிய அக்ரிலிக் மூடி. எனவே ஸுமீத் இயங்குவதைக் கண்ணெதிரில் காணலாம்.

பல்வேறு வேலைகளை விரைவிலும் எளிதிலும் செய்து முடிக்க, இப்போது இதில் 4 அலகு அமைப்பு பாகங்கள் :

ஈரப் பண்ட அரைவைக்காக.
உலர் பண்ட அரைவைக்காக.
கடைய, கலக்க, சாறு பிழிய.
மாமிசத்தை அரிக்க.
காய்கறிகளை நறுக்க.

இவை மட்டுமா? ஸுமீத்தில் 30 நிமிடங்கள் வரை நிற்காமல் ஓடக்கூடிய ஹெவி ட்யூட்டி மோட்டார்.


அற்புதமான ஸுமீத் ஒன்றுதான் முழுமையான கிட்சன் மெஷின். இதை அடைய எத்தனை நாள் வேண்டுமானாலும் காத்திருக்கலாம்.




ஈர அரவை—
வடை, இட்லி, தோசைக்காக உளுந்தம் பருப்பு மற்றும் அரிசியை அரைக்க 3½ நிமிடங்களில்.



உலர் அரவை—
எல்லாவித மசாலாக்கள், மிளகாய் வற்றல், மிளகு, மஞ்சள், கொத்துமல்லி விதை ஆகியவற்றை அரைக்க.



பொடிக்க—
1 நிமிடத்தில் மாமிசத்தை பொடிக்க, காரெட், வெங்காயம், தேங்காய் மற்றும் கொட்டைகளை நறுக்க— விநாடிகளில்.



அரைக்க—
2 நிமிடங்களில் தேங்காய் சட்னி அரைக்கலாம் அல்லது விநாடிகளில் கொத்துமல்லிச் சட்னி அரைக்கலாம்.



கடைய—
லஸ்ஸி, மில்க் ஷேக் ஆகியவற்றை ஒரே நிமிடத்தில் தயாரிக்க அல்லது நிமிடங்களில் மயோனைஸ் தயாரிக்க. வீட்டிலேயே வெண்ணெய் கடையலாம்.

விருப்பத் தேர்வு : ஒப்பற்ற நீடிங் இணைப்பு





மாவு பிசைய— சப்பாத்தி, பூரி, நான் தயாரிக்க 2 நிமிடங்களில் மாவு பிசையலாம். கேக் மாவை மிகவும் சன்னமாகப் பிசையலாம்— 3½ நிமிடங்களில்.

ஸுமீத்®

உங்கள் முழுமையான கிட்சன் மெஷின்

அற்புதமான ஸுமீத் பலவகைப் பல்வேறு பணிகளைச் செய்கிறது— மற்ற எல்லா வீட்டுபயோக மிக்ஸர்களைவிடச் சிறப்பாக. எப்போது நாங்கள் இவைகளை இயக்கிக் காட்டுகிறோம் என்பதைக் கவனித்து வாருங்கள். உங்களுக்கெனவே ஸுமீத் சிறப்பாக இயங்குவதைக் காணுங்கள்!

தயாரிப்பாளர்கள் : பவர் கண்ட்ரோல் அண்ட் அப்ளையன்ஸஸ் கம்பெனி
F/11 இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 600 058 இந்தியா, போன் : 633340

சர்வீஸ் சென்டர்கள் :
சென்னை : ரெப்ரிஜிரேட்டர்ஸ் & என்ஜினியர்ஸ், தொலைபேசி : 445700/442055 ● விவேக் ஏஜென்ஸீஸ், தொலைபேசி : 76923/75661 ● விவேக் & கம்பெனி, தொலைபேசி : 444129 ● விவேக் & கம்பெனி, தொலைபேசி : 663545 ● வி. நி. பன்னீர்தாஸ் & கம்பெனி, தொலைபேசி : 812121/88184.
மதுரை : ஜே. என்ஜினியரிங் கார்ப்பரேஷன், தொலைபேசி : 24028.
கோயம்புத்தூர் : ஜே. என்ஜினியரிங் கார்ப்பரேஷன், தொலைபேசி : 24579/25566.
திருச்சி : ஸ்டாண்டர்ட் எலெக்ட்ரிக் கம்பெனி, தொலைபேசி : 24343.

ஒரு சுமைதாங்கி சுமையாகிறது!...



-பட்டுக்கோட்டை ராஜா-

இளஞ் சூரியனை முன்னால் அனுப்பி விட்டு இன்னொரு புதுநாள் துவங்கியிருந்தது.

ஏழை மனங்கள் ஏன்தான் இன்று விடிந்தது என்று ஏங்கிக் கொண்டிருக்க, இன்றைய தினத்தை யாரோடு – எப்படிக் கழிப்பது என்று சீமான்களின் மனங்கள் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தன.

எந்தவித நினைவும் இல்லாத வெற்று மனத்தோடு எழுந்த சங்கரன், சூட்டினால் கண்கள் தள்ளியிருந்த கசட்டைத் துடைத்து விட்டுக் கொண்டான். மிச்சமிருந்த தூக்கத்தைக் கொட்டாவி விட்டுக் கழித்தான். இன்னொரு இரவைத் தன் அடியில் நிம்மதியாகக் கழிக்க இடம் கொடுத்த அந்தப் பூவரச மரத்தை நன்றிப் பெருக்கோடு அண்ணாந்து பார்த்தான். புள்ளினங்கள் புதுநாளின் பிறப்பைச் சந்தோஷித்துக் கொண்டாடிக் கொண்டிருந்தன.

'எத்தனையோ பறவைகளுக்குச் சரணாலயமாய்த் திகழும் இந்த மரம் எனக்கும் இடம் கொடுத்து உதவுகிறதே... என்னையும் பறவை என்று நினைக்கிறதா?' என்ற நினைப்பு என்றுமில்லாமல் இன்று வந்தது. சிரித்துக் கொண்டே எழுந்தவன் செங்கல் மண்ணால் பல் தேய்த்தான். குழாய்த் தண்ணீரில் வாய் கொப்பளித்து முகம் கழுவினான். இப்போது பிறந்த ஓர் இருமல் சங்கிலியாகத் தொடர்ந்து அவனை அவஸ்தைப் படுத்தியது. 'நாயர் கடை டீயைச் சாப்பிட்டால் சரியாகி விடும்!' – நடந்தான்.

எதிர்ப்பட்ட நர்ஸிடம், ''வணக்கம் நர்ஸம்மா'' என்றான்.

''என்ன சங்கரா, டீ சாப்பிடப்போறியா?'' என்று ஒப்புக்குக் கேட்டுவிட்டு அந்த நர்ஸ், நடந்தாள்.

அதிகாலை நேரத்திலேயே அந்த மருத்துவ மனை அதிகமாய் விழித்துக் கொண்ட மாதிரி தெரிந்தது. இயந்திர கதியில் இயங்கும் டாக்டர்களின் பின்னே வெண் புறாக்களாய் நர்ஸ்கள்!

''இங்கே பாருமம்மா, இருநூறு ரூபாய்ல ஒரு பைசாக் குறைஞ்சாலும் வண்டி நகராது... பிணத்தை ஏத்தறது என்ன சாதாரண விஷயமா?'' — டீ சாப்பிட்டு விட்டுத் திரும்பிய சங்கரனை டாக்ஸி டிரைவரின் தர்க்கக் குரல் ஈர்த்தது!

''நூறு ரூபாதான்யா இருக்கு... இதுவே நான் கடன் வாங்கின பணம்தான்... ஏழைகளுக்குக் கொஞ்சம் இரக்கம் காட்டக் கூடாதா?'' — அந்த ஏழைத் தாய் பரிதவித்தாள் — 'தன் மகன் இறந்துவிட்ட துக்கத்தைத் தாங்குவதா...இந்த டிரைவருடன் பேரம் பேசிக் கொண்டிருப்பதா!' என்ற தவிப்பு அவள் முகத்தில்.

''நானும் ஏழைதாம்மா...எனக்கும் புள்ளை குட்டிகள்ளாம் இருக்குது. அதுங்க வயிறு நனைய வேண்டாமா?'' — அந்த டிரைவர் தன் மனம் கல் என்பதை நிரூபித்தான்.

சங்கரன் அவர்களை நெருங்கி டாக்ஸிக்குள் பார்த்தான். உடம்பு முழுக்கத் திட்டுத் திட்டாவதிக்காயங்களுக்கு 'ஜி.வி.பெயின்ட்' தடவப்பட்ட ஒரு பெண்ணின் பிணம். நேற்றிரவு கேஷுவாலிடி வார்டில் அட்மிட் செய்யப்பட்ட கேஸ் —உறங்கிக்கொண்டிருந்த சங்கரனை அந்த அம்மாளின் கதறல்தான் நேற்று உசுப்பியது!

சங்கரனைப் பார்த்ததுமே அந்த டிரைவரின் முகம் கூம்பிப் போனது.

''ஏம்மா, ஒங்க வீடு எங்க இருக்கு?''

''இங்கதான். பேகம் சாகிப் தெரு தம்பி. இங்கிருந்து ரெண்டு பர்லாங் தூரமிருக்கும். அதுக்குப் போயி இவரு இருநூறு ரூபா கேட்கிறாருங்க.... நீங்க கொஞ்சம் சொல்லுங்க தம்பி!''

சங்கரன் டிரைவரை உக்கிரத்தோடு பார்த்தான். அவன் வெட்கி முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான். ''எம்ப்பா இப்படிப் பகற் கொள்ளை அடிக்



கிறீங்க?'' என்று முணுமுணுத்த சங்கரன் அந்த அம்மாவிடம் திரும்பி ''இதைப்பாருங்கம்மா, உங்களுக்கு ஆட்சேபனை இல்லேன்னு நானே என் தோளில் போட்டுக் கொண்டு வந்து இந்தப் பிணத்தை உங்க வீட்ல சேத்திடுறேன்... உங்களால முடிஞ்ச பணத்தைக் கொடுங்க போதும்.... சரியா?''

''சரிங்க தம்பி... நல்ல சமயத்தில அந்த ஆண்டவன்தான் உங்களை அனுப்பி வச்சிருக்கார்,... நீங்க நல்லா இருக்கணும் தம்பி!'' தன் மகள் இறந்து போன துக்கத்தையும் மறந்து அந்த ஏழைத் தாய் மனதார வாழ்த்தினாள்.

டாக்சியிலிருந்த அந்தப் பிணத்தை அநாயாசமாய்த் தூக்கித் தன் தோளில் கிடத்தி ஒரு துணியால் மூடிக் கொண்டான். ''அம்மா ரோட்டு நெடுக அரற்றாமல் வரணும்!'' என்று சொல்லிவிட்டு நடந்தான். டாக்ஸி டிரைவர் 'வர இருந்த வருமானம் அநியாயமாய்ப் பறிபோய் விட்டதே... இவன் செத்தொழிய மாட்டானா?' என்று கறுவியபடி நின்றிருந்தான்.

சங்கரன் சிறு வயதிலேயே தாயை இழந்தவன். ஒவ்வொரு தினமும் டீக்கடையில் கிளாஸ் கழுவி இவன் சம்பாதித்து வந்த இரண்டு ரூபாய்க்காகக் காத்திருந்து, நாளைக்கு ஒருவேளை மட்டுமே உண்டு வந்த அந்த ஆத்மா ஒரு நாள் இவனிடம் சொல்லிக் கொள்ளாமலேயே பிரிந்து போனது.

ஆரம்பத்தில் அவளது பிரிவு இந்தச் சின்ன இதயத்தை அவ்வளவாகப் பாதித்து விடவில்லை. நாளாக ஆகத்தான் அவளின் அருமை இவனுக்குப் புரிய ஆரம்பித்தது. 'அநாதை' என்ற பட்டம் இவனை வந்தடையாமல் அதுவரை காத்தது அந்த ஓர் ஆத்மாதான் என்பது தெரிந்தபோது இதயம் வலித்தது.

கிளாஸ் கழுவிக் கொண்டிருந்தபோது, கைநழுவிக் கீழே விழுந்து உடைந்துபோகவே இவன் முதலாளி இவனை நையப் புடைத்ததோடு நில்லாமல் அ... ..ய சம்பளத்தையும் கொடுக்காது விரட்டினார். அந்தக் கிராமத்து வாழ்க்கையை அன்றோடு முடித்துக் கொண்டு இந்தப் பிஞ்சு மனம் திருட்டு ரயிலில் சென்னைக்குப் பயணம் வந்தது.

கூலியாய் — பேப்பர் போடும் சிறுவனாய், லாட்டரி டிக்கட் விற்பவனாய், தியேட்டரில் டிக்கட் கொடுப்பவனாய், போர்ட்டராய்— எப்படி யெல்லாமோ வளர்த்து இந்தச் சென்னைதான் சங்கரனை ஆளாக்கியது. இறுதியாக வந்தடைந்த இடம்தான் இந்த மருத்துவ மனை. பகலில் டாக்டர் நர்ஸ்களுக்கு எடுபிடியாய், இரவில் அந்தப் பூவரச மரத்துப் பறவையாய்த் தனது வாழ்க்கையை இந்த மருத்துவ மனையோடு ஐக்கியப்படுத்திக் கொண்டான்.

'யாருக்காக வாழ்வது?' என்று முதலில் நினைத்தவன், உறவினரைப் பறிகொடுத்துப் பரிதவிக்கும் ஏழைகளுக்காக வாழ்வது என்ற முடிவுக்கு வந்தான். பிணங்களை ஏற்றிச் செல்ல அநியாயமாய்ப் பணம் பறிக்கும் டாக்சி டிரைவர்களுக்கு இவன் சரியான எதிரியாய் வந்து சேர்ந்தான். ஏழைப் பிணங்களைத் தோளில் வீடுவரை சுமந்து சென்று, அவர்கள் கொடுக்கும் ஐந்தோ, பத்தோ பணத்தில் — இவன் ஜீவனத்தைச் சுருக்கிக் கொண்டான்.

எத்தனையோ முறை இவனை விரட்டியடிக்க டாக்சி டிரைவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி, டாக்டர்களின் தயவினால் முறிந்து போனது.

என்றும்போல் அன்றிரவும் சங்கரன், பூவரச மரத்து வேரைத் தலையணையாக்கிப் படுத்திருந்தான். அசைந்து கொண்டிருந்த மரத்து இலைகளுக்கிடையில் நிலவு மகள் ஒளிந்து பிடித்து விளையாடினாள்.

'நிலவே, நீயும் என்னைப் போல் அநாதை தானே? உன்னால் மட்டும் இவ்வளவு மகிழ்ச்சியாய் எப்படி இருக்க முடிகிறது?'

'என்னை எவன் அநாதை என்பது? இந்தத் தாரகைகள், நான் பெற்றெடுத்த புத்திரர்கள்' என்றபோது நிலவை எங்கிருந்தோ வந்த ஒரு கருமேகம் மூடியது.

இவனது நுரையீரலுக்குள் புகைப் பந்தாய் நுழைந்த ஏதோ ஒன்று இவனைத் தொடர்ச்சியாய் இரும வைத்தது. ஒவ்வொரு இருமலுக்குமிடையில் நீளமான கேவலெடுத்து இவனைச் சித்திரவதை செய்தது. முன்பெல்லாம் எப்போதாவது வரும் இந்த இருமல் சென்ற ஒரு மாத காலமாய் அடிக்கடி வந்து சங்கரனை அவஸ்தைப் படுத்தியது.

இவன்மேல் கரிசனம் கொண்ட டாக்டர் ஒருமுறை இவனைப் பரிசோதித்து விட்டு, ஏதோ ஒரு மாத்திரை கொடுத்து இருமல் வரும்போதெல்லாம் சாப்பிடப் பணித்தார். முதலில் அந்த மாத்திரை இருமலை நிறுத்தியது உண்மைதான். காலம் செல்லச் செல்ல இருமல், மாத்திரைக்குச் சவால் விட்டது!

இருமல் நிற்காததால் எழுந்து அமர்ந்தான். உள்ளே இழுத்த மூச்சுக் காற்று வெளியே வராதபடி தொடர்ச்சியாய் இருமியது. மூச்சு விடத் திணறினான். மூக்கு மடல்கள் அநிச்சையாய் விரிந்து மடங்கியது.

சாப்பிடுபவர்: சாம்பாரிலே என்ன ரொம்ப நாழியா தேடறீர்? எனக்குத் தான் வேண்டாம். வெறும் சாம்பார் போதும்.

சர்வர்: என் காதிலே சொருகியிருந்த கட்டைப் பென்சில் சாம்பாரிலே விழுந்திருச்சி. அதைத்தான் தேடிட்டிருக்கேன்!

கே.ஆர்.எம்.



நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டான். இருமல் நிற்கவில்லை.

யதார்த்தமாய் வெளியே வந்த ஸ்டாஃப் நர்ஸ் இவனின் இருமல் சத்தம் கேட்டு ஓடி வந்து நாடி பிடித்துப் பார்த்தாள். துடித்தவளாய் உள்ளே ஓடினாள்! கொஞ்ச நேரத்தில் ஸ்ட்ரெச்சரோடு வந்த இரண்டு ஊழியர்கள் சங்கரனைத் தூக்கிச் சென்று ஆஸ்பத்திரி கட்டிலில் கிடத்தினர்.

ஒருவித பரிதவிப்போடு பரிசோதித்த டாக்டர் உதட்டைப் பிதுக்கினார். ஸ்டெதாஸ் கோப்பை நெஞ்சில் அழுத்திப் பிடித்தபோது சூறாவளிக் காற்றின் சத்தம்.

''பாவம் டாக்டர்... எத்தனையோ ஏழை மக்களுக்கு ஹெல்ப் பண்ணியிருக்கான்.! இப்ப இவனுக்கே இப்படியா?'' என்ற மேரி நெஞ்சுக்கு முன் சிலுவையைப் போட்டாள்.

சங்கரனின் விலா எலும்புகள் புடைத்துக் கொண்டிருந்தன. உள்ளே நுரையீரல்கள் காற்றுக்குத் தவிப்பதைத் துல்லியமாய் உணர்ந்தான்.

''கடைசி முயற்சி... இந்தாப்பா நீ ஆக்ஸிஜன் சிலிண்டர் அட்டாச் பண்ணு... நர்ஸ், நீங்க டெரிப்ளின் ஐ. வி. இன்ஜெக்ஷன் லோட் பண்ணிட்டு வாங்க... இந்தாப்பா நீ அம்'ஷ்ஷ்பிலின் ட்ரிப் போடு!'' — டாக்டர் பரபரத்தார்.

டாக்டரின் கட்டளைகள் ஐந்தே நிமிடத்தில் நிறைவேற்றப்பட்டன. ஐ. வி. இன்செக்ஷனைச் சங்கரனின் உடலில் செலுத்திய டாக்டர் பணம் முழுக்கத் துடிப்போடு காத்திருந்தார். அருகிலிருந்த நர்ஸ் இன்னொரு முறை ஏசுவை அழைத்தாள் —

அடிக்கொரு தரம் அவனுடைய நாடித் துடிப்பை டாக்டர் பரிசோதித்துக் கொண்டிருந்தார். சங்கரன் ஒவ்வொரு முறை மூச்சு விட்டு இழுக்கும்போது மெல்லிய விசில் சத்தம் கேட்டது. லேசாய்க் கண்களைத் திறந்து எதிரே நிற்பவர்களைப் பார்த்தான்— பார்வை மங்கிப் பிம்பங்கள் கலங்கலாய்த் தெரிந்தன. கண்களில் நீலம் படர்ந்திருந்தது.

''ஸ்டேட்டஸ் ஆஸ்மாட்டிகஸ்' ஸ்டேஜ் வந்திருச்சி... நோ யூஸ்!'' என்ற டாக்டர் எழுந்து தம் சீட்டுக்கு நகர்ந்தார். சங்கரனின் ஆத்ம சாந்திக்குக் கடைசியாய்க் கர்த்தரிடம் விண்ணப்பித்து விட்டு நர்ஸ் மேரியும் நகர்ந்தாள்.

பல வருடங்களாய் இயங்கிக் கொண்டிருந்த சங்கரனின் அவயவங்கள் அத்தனையும் அடுத்த ஒரு நிமிடத்தில் ஓய்ந்து போயின.

எத்தனையோ ஏழைப் பிணங்களுக்குத் தோள் கொடுத்த சங்கரன் அனாதைப் பிணமாய்க் கிடந்தான். அனுதாபம் கொண்ட டாக்டரும் நர்ஸும் பிணத்தை மயானம் கொண்டு செல்ல வாகனம் தேடினர்.

''முந்நூறு ரூபாய்க்கு ஒரு பைசா குறைஞ்சாக் கூடப் பிணத்தை வண்டியில் ஏற்ற மாட்டேன்!'' என்று டாக்சி டிரைவர் டாக்டரிடம் வாதிட்டான்.

அவனைத் தட்டிக் கேட்க இன்னொரு சங்கரன் பிறக்கவா போகிறான்?



அருள் வாக்கு

அவிபக்த குடும்ப முறை(Joint Family System) போன பின் அண்ணன் தம்பி என்பதே போய் விட்டது. முன்பெல்லாம் இப்படி ஜாயிண்ட் ஃபாமிலியாக இருக்கும்போது தாயார் — தகப்பனார், சித்தப்பா, பெரியப்பாமார்கள் அவர்களுடைய பத்னிகள், பிள்ளைகள், மாட்டுப் பெண்கள், பேரக் குழந்தைகள், என்று ஒரு வீட்டிலேயே 20, 25 பேர் இருப்பார்கள். இவ்வளவு பேர் இருக்கிறபோது, அநாதரவான தூர பந்துக்கள் நாலைந்து பேரைக்கூட வைத்துக் கொண்டு சோறு போடுவது ஒரு பாரமாகவே தெரியவில்லை. இப்போதோ அவனவனும் பெண்டாட்டியோடு கத்தரித்துக் கொண்டு தனிக் குடித்தனம் என்று போவதால், கூட ஒருத்தரை வைத்துக் கொள்வது என்றால் கூடச் சுமையாய்த் தெரிகிறது. எத்தனையோ ஆயிரம், பதினாயிரம் வருஷங்களாக இருந்து வந்த ஏற்பாடுகள் இந்த இரண்டு மூன்று தலைமுறைகளில் விணுகப்போய் இங்கிலீஷ் பாஷன் வந்ததில், உயர்ந்த தர்மங்கள் எல்லாம் நசித்துப் போய் விட்டன.

முதலில் ஏழையான பந்துக்களைக் கவனிக்க வேண்டும். சுபாசுப காரியங்களுக்கு நாம் செலவழித்துக் கொண்டு நேரில் போக வேண்டும் என்பது கூட இல்லை. இந்தச் செலவையும் சேர்த்து அந்த வசதியில்லாத உறவுக்காரனுக்கு அனுப்பி வைத்தால் அவனுக்கு எத்தனையோ உதவியாக இருக்கும்.

கல்யாணத்தில் நாம் பண்ணுகிற ஆடம்பரங்களை யெல்லாம், 'வேஸ்ட்'களை யெல்லாம் குறைக்க வேண்டும். இப்போது ஒரு கல்யாணம் என்றால் அதற்கு அவசியமான வைதிக தட்சிணைகளுக்குக் கொடுப்பதில்தான் கஞ்சம் பிடிக்கிறோம். பாட்டுக் கச்சேரி, டான்ஸ் கச்சேரி, நாயனம், பாண்ட், ஊர்வலம் என்று வேண்டாத விஷயங்களுக்கு வாரி விடுகிறோம்.

— ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திர சேகரேந்திர சரஸ்வதி
சங்கராசார்ய சுவாமிகள்







குடிப் பழக்கமுள்ள அவுரை ஏப்ரல் முட்டாளாக்க இது நான்வழி!



• என்ன, மிஸ் ஸில்க், இப்படி அலங்கோலமா டிரஸ் பண்ணிக்கிட்டு?

• ரசிகர்களுக்கு 'ஏப்ரல் முட்டாள்' வாழ்த்து என் ::போட்டோவோடு அனுப்பப் போறேன்!


லேசா சாரல்
போட்டு
ஏப்ரல் முட்டாள்
ஆக்குவோமா?


சாராயம் குடிக்க வெச்சு என்னை
ஏப்ரல் முட்டாளாக்கப் பார்த்தாங்க
எங்கிட்ட அவங்க பாச்சா
பலிக்குமா?


ஏப்ரல் முட்டாள் நிகழ்ச்சியில்
தடங்கல் ஏற்படவில்லை
என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கிறோம்!


அரசியல்வாதிங்க கிட்ட சிக்கிட்ட
நாம வருஷம் 365 நாளும்
முட்டாள்கள் தான்!

ஒரு சங்கமத்தைத் தேடி

வாஸந்தி

''ஈசனடி போற்றி! எந்தையடி போற்றி! தேசனடி போற்றி! சிவன் சேவடி போற்றி!''

விருட்டென்று கார்த்திக் எழுந்து உட்கார்ந்தான். தூக்கக் கலக்கத்தில் எங்கே இருக்கிறோம் என்று குழப்பமாக இருந்தது. கும்மிருட்டாக இருந்த சுற்றுப்புறத்தில் பார்வை பழகச் சற்று நேரம் பிடித்தது. கொஞ்சம் தள்ளி அத்தை வெறும் தரையில் தலைக்கு மட்டும் எதையோ வைத்துக் கொண்டு படுத்திருப்பது நிழலுருவாய்த் தெரிந்தது.

''நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி! மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!''

ஓதுவாரின் குரல் போல் இருந்தது. அவர் எங்கே இங்கே வந்தார் என்று ஒரு திகைப்பு ஏற்பட்டது.

மெல்ல மெல்லப் புலன்கள் விழித்துக் கொண்டதும் அவன் எழுந்து மூலையில் ஈர மணல் மேல் வைத்திருந்த பானையிலிருந்து நீரை எடுத்துக் குடித்தான். சமையலறை விளக்கை ஏற்றிக் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி நாலு பத்து. தூக்கம் நன்றாகக் கலைந்து விட்டது. மறுபடியும் படுத்துக் கொள்ளப் பிடிக்காமல் திறந்த முற்றத்தின் குறட்டின் மேல் உட்கார்ந்து கொண்டான். கரிய ஆகாசத்துக்கு இன்னும் விடியவில்லை. நட்சத்திரப் போர்வை போர்த்திக் கொண்டிருந்தது. நீளப் படர்ந்திருந்த கொல்லைத் தோட்டத்திலிருந்து குளுமையான காற்று அவனது வெற்று மார்பைத் தழுவும்போது ஒரு நூதன உணர்வு ஏற்பட்டது. இந்தக் காற்றுக்கும் மண்ணுக்கும் ஒரு தனிப்பட்ட வாசனை இருந்தது. டில்லிக்கும் இந்த ஊருக்கும் எத்தனை வித்தியாசம்! அவன் செவ்வரளியும் முல்லையும், நந்தியாவட்டையுமாக வீசிய காற்றை ஆர்வத்துடன் இழுத்துக் கொண்டான்.

''என்னடா தூங்கலியா?''

இன்னும் தூக்கம் கலையாத அத்தையின் குரலைக் கேட்ட உடனேயே அவனுள் ஓர் உற்சாகம் கிளம்பிற்று.

''தூங்கறதாவது? எழுந்திருக்கிற நேரமாச்சு. எழுந்திருங்கோ. ஊர் எழுந்து சிவ புராணம் சொல்றது. கருகருப்பான பொம்மனாட்டிகள் வாசல் தெளிச்சிண்டிருக்கா. இது டில்லி இல்லே அத்தே. திருநாகேச்வரம்!''

அத்தை சிரித்துக் கொண்டே அவன் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

''நான் டில்லியிலே இருந்தாலும் நாலரை மணிக்குத்தான் எழுந்திருப்பேன். போர்வைக்குள்ளேயே மூக்கை நுழைச்சுண்டு இந்த அப்பா மெதுவா பூஜை பண்ணக் கூடாதோ'ன்னு முணுமுணுக்க மாட்டேன்!''

''ஏன்னு அது உங்கப்பா இல்லே!''

அவன் தலையில் லேசாகக் குட்டிவிட்டு அத்தை எழுந்தாள். 'பல் தேய். இப்ப பால் வந்துடும்.''



''இந்த ஊர்லயே இருந்துடலாம் போல இருக்கு அத்தே. எழுந்துண்டதும் பால் பூத்துக்கு ஓட வேண்டாம். பாலுக்காகச் சீக்கிரம் எழுந்திருக்க வேண்டாம்.''

''ஓ இருக்கலாமே! அந்த நாச்சாமி மாதிரி குண்டு சட்டியிலே குதிரையை ஓட்டிண்டு!''

அத்தை கொல்லைக் கதவைத் திறந்து கொண்டு போனாள்.

நாச்சாமிக்கு அவன் வயசு இருக்கும். செக்கச் சிவக்க வாட்ட சாட்டமாய் இருந்தான். கோடி வீட்டு சுந்தரமூர்த்தியின் மகன். கும்பகோணத்தில் காலேஜ் படிப்புப் படிக்க வசதி ஏற்படுத்திக் கொடுத்தும் படிப்பு ஏறாமல் பெரியவர்களுக்குச் சமதையாக வெற்றிலைப்பாக்கைக் குதப்பிக் கொண்டு திண்ணையில் சீட்டாடிக் கொண்டிருப்பான். அவனுடைய பேச்சும் பார்வையும் நாணயமும் கத்தி வீச்ச மாதிரி இருக்கும். இத்தனை தீர்க்கமாக இருப்பவன் எத்தனை அநியாயமாகப் பொழுதைக் கழிக்கிறான் என்று ஆச்சரியமேற்படும். ஆனால் அவன்தான் அந்தக் கிராமத்தில் ஹீரோ என்று தோன்றிற்று. இரண்டு நாள் ஆற்றங் கரைக்குக் குளிக்கப் போனபோது அவன் பேச்சுக்கெல்லாம்



பெண்கள் படித்துறையிலிருந்து வந்த கிளு கிளுத்த சிரிப்பு அவனுடைய மவுசைத் தெரி வித்தது. இந்த விஷயத்துக்காகவே அவன் இங்கு குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டு கிறானோ என்று தோன்றிற்று. இங்கு அவ னுக்குக் கிடைக்கும் முக்கியத்துவம் பட் டணத்தில் எங்கே கிடைக்கும்?

கொல்லைக் கிணற்றடியில் பல் தேய்த்து விட்டுப் பூவரச மரத்தில் சல்லாபித்த பட்சி களின் ஆரவாரத்தை ரசித்தபடி உள்ளே நுழைவதற்குள் அத்தை காப்பி கலந்து வைத் திருந்தாள்.

''காப்பி ஏ ஒன் அத்தை!''

''இது கறந்த பால் ஸ்வாமி!''

''ஓகோ மறந்து போய் உங்களுக்கு ஸர்டிஃபிகேட் கொடுத்திட்டேன்! இங்கே எல்லாத்துக்குமே இயற்கையா ருசி இருக்கு. நீங்க டிகாக்ஷனைக் குறைச்சாலும், சர்க் கரையை அள்ளிப் போட்டாலும் காப்பி நன்னா இருக்கும்!''

''போடா அரட்டை! இங்கே உன் வாய்க்கு மட்டுமே வேலை கொடுத்து அதை நன்னா நீட்டியாச்சு. வரீயா ஆற்றுக்குப் போகலாம் குளிக்க?''

விசாலமும் அவனும் வீட்டைப் பூட்டிக் கொண்டு தெருவில் இறங்கியதும் சாணம் தெளித்து மெழுகிய வாசல்கள் வெற்றுக் காலில் தண்ணென்று பட்டன. பனிச்சென்று விரிந்திருந்த கோலங்களை மிதிக்காமல் அவன் ஜாக்கிரதையாக நடந்தான். தெரு முழு வதும் விழித்துக் கொண்டு விட்டது தெரிந் தது. டிரான்ஸிஸ்டர்களில் சுப்ரபாதங்கள் திறந்த வாயில்கள் வழியாகப் பலமாகக் கேட்டன. அம்மணமாகக் குழந்தைகள் வாயிற்படியில் உட்கார்ந்திருந்தன. கிரா மத்துக்கு வந்ததிலிருந்து தினமும் பார்க் கும் காட்சிகள் — அவனுள் ஏற்படுத்தும் ஆச்சரிய அனுதாபங்கள்....

''என்ன விசாலம்? குளிக்கக் கிளம்பி யாச்சா?''

பஸ் கண்டக்டர்: டிக்கட்! டிக்கட்!
பயணி: பின்னால மீசை வச்சவரு வாங்குவாரு.
பஸ் கண்டக்டர்: அது யாருய்யா, பின்னால மீசை வச்சவரு?
—அன்னியூர் ஆர். பகவதி



கோடி வீட்டு சுந்தரமூர்த்தி திண்ணையில் வெற்றிலையைக் குதப்பியபடி சிவந்த பற் களைக் காட்டிச் சிரித்தார்.

விசாலம் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டாள். நடந்து கொண்டே பதில் சொன்னாள்.

''ஆமாம் வெயில் ஏறறதுக்கு முன்னாடி வீடு திரும்பணும். இப்போதைக்கு ஆற் றிலே தண்ணி இருக்கே! அது வரண்டு போற துக்குள்ளே... நல்ல வேளை, கிளம்பிப் போயிடு வோம்!''

'' டில்லிக்காரியோன்னோ மெதப்பாப் பேசறே!''

அத்தை ஒரு விநாடி நின்றாள். சுந்தர மூர்த்தியைத் தீர்க்கமாகப் பார்த்தாள்.

''இந்த மெதப்பு எனக்கு எப்பவுமே உண் டுன்னு தெரியாது?''

சுந்தரமூர்த்தி பகட்டாகச் சிரித்தாலும் சட்டென்று முகம் இறங்கிப் போனது வியப்பை அளித்தது. அத்தையின் போக்கு வேடிக்கையாக இருந்தது.

விருவிருவென்று நடக்கும் அவளுடன் நடக் கையில் அவன் மெல்லக் கேட்டான்.

''அவர் என்னவோ சாதாரணமாகத்தானே அத்தை சொன்னார்?''

அத்தையின் முகம் சிவந்திருந்தது. ''சாதா ரணமாத்தான் சொன்னான். அந்த வார்த்தை பழைய ஞாபகத்தைக் கிளப்பி விட்டது. இவன் இலேசுப்பட்டவன்னு நினைக்காதே!''

அவள் மௌனமாக நடந்தாள். ''இந்த ஊர்ல முப்பது வயது வரைக்கும் இருந்தேன். என் மாமியார் வீட்டிலே. அதுக்கப்புறம் இருக்க முடியாமப் போனது இவனாலதான். ஆத்தங்கரைக்குக் குளிக்கப்போகும்போதெல் லாம் தொந்தரவு பண்ணுவான். ஒரு நாளைக்கு ஏடா கூடமா நடந்துண்டான். கன்னத்திலே நன்னாப் போட்டேன். 'உன் உடம்பு பூராத் திமிர். திண்ணையைத் தேய்ச்சுண்டிருக்காம வேலை வெட்டி பார். திமிர் அடங்கும்'னேன்.

''அதற்கு அவன் என்ன சொன்னான் தெரி யுமா? 'போக்கிடமத்த கம்மனாட்டிக்கு இத்தனை மெதப்பான பேச்சா?'ன்னான்.''

கார்த்திக் அதிர்ச்சியுடன் முகத்தைச் சுளித்துக் கொண்டான். இத்தனை அநாகரிக மாக மனிதர்கள் பேசுவார்களா?

''அன்னிக்கே தீர்மானிச்சேன். இந்த ஊரை விட்டுப் போயிடணும்னு. மாமி யாருக்கெல்லாம் வருத்தம்தான். ஆனாலும் பிடிவாதமாப் பழனிக்குக் கிளம்பிட்டேன்!''

அத்தையின் மெல்லிய குரலில் இன்னும் கசப்புத் தொனித்தது.

'நான் ஒரு தனி மனுஷின்னு காண்பிக்க எத்தனை போராட வேண்டியிருந்தது தெரி யுமோ?'

அத்தையின் வார்த்தைகள் ஞாபகத்துக்கு வர அவன் புதிய அனுதாபத்துடன் அவளைப் பார்த்தான். சிவந்த முகத்தில் பளபளத்த தேஜஸுக்கு இவளது அந்த நிருபணம் தான் காரணம் என்று தோன்றிற்று. பதி னாறு வயசிலிருந்து தபஸ்வினியின் வாழ்க்கை வாழ்ந்து வந்திருக்கிறாள். சுந்தரமூர்த்திஇந்த வயசிலும் வாட்ட சாட்டமாக நன்றாக இருக்

றார். 'நாச்சாமி என்னைத்தான் கொண்டிருக்கிறான்' என்று பறைசாற்றுகிற மாதிரி. அத்தைக்கு அந்த வயசில் சலனமே ஏற்பட்டிருக்காதா?

''எல்லாரும் போய், இந்த வீடும் கொஞ்சம் நிலமும் எனக்குன்னு வந்து சேர்ந்ததும் வருஷத்துக்கு ஒரு நடை வரவேண்டியிருக்கு இங்கே.''

அத்தையின் குரலில் இன்னமும் அலுப்புத் தெரிந்தது. தினசரி மானசீகப் போராட்டங்களுக்குச் சுந்தரமூர்த்தி போன்ற திமிர் பிடித்தவர்களினால் ஆளாக்கப்பட்டதின் ஞாபகங்கள் ஏற்படுத்திய அலுப்பு. வெறும் ஞாபகங்களுக்கு இப்படிப்பட்ட சக்தி இருந்தால் உண்மையான சம்பவங்கள் எப்படி இருந்திருக்கும்?

''தோப்புவழியாப் போயிடலாம் அத்தை! சீக்கிரம் போயிடலாம்!''

''எனக்குக் குறுக்கு வழி பிடிக்காது. இன்னிக்குப் போகலாம் வா, நாழியாயிடுத்து!''

அடர்த்தியான தோப்பில் லேசான இருள் சூழ்ந்திருந்தது. கொஞ்ச தூரம் நடந்ததும் மெல்லிய சிரிப்பும் பேச்சும் கேட்கிற மாதிரி இருந்தது. அத்தை திடீரென்று வாய் விட்டுப் பாட ஆரம்பித்தாள்.

''சதுரம்பல கோலால பூஜையும்
ஒதலுங்குண ஆசார நீதியும்....''

அவனுக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது. டில்லியில் இருக்கும் அத்தையை விட கிராமத்தில் இருக்கும் அத்தை சுவாரஸ்யமாகத் தோன்றினாள். சற்றுப் பொறுத்துத் தோப்பின் வெவ்வேறு திசையிலிருந்து நாச்சாமியும்ஒரு பெண்ணும் வெளிப்பட்டார்கள். ஆற்றை நோக்கித் தனித் தனியாகச் சென்றார்கள்.

''அத்தை அவா கிளம்பிப் போயாச்சு. பாடினது போறும்!''

அத்தை சிரித்தாள். முகத்தில் இன்னும் கடுமை இருந்தது.

''யார் அத்தை அது?''

''எதிர்த்தாத்துராமமூர்த்தியுடைய பெண் எச்சுமி. புருஷன் செத்துப் போய் ரெண்டு வருஷம் ஆறது. ஏற்கனவே அலையற மனசு. நாச்சாமி மாதிரி ஆசாமிகள் சுத்தி இருந்தா சும்மா விடுமா?''

அத்தையின் குரலிலும் பார்வையிலும் பச்சாத்தாபம் தெரிந்தது.

''கஷ்டம்!'' என்று முணு முணுத்துக் கொண்டான்.

அவன் பதிலேதும் பேசாமல் நடந்தான். எது கஷ்டம்? இன்று காண நேர்ந்த விஷயமா, இல்லை புலனடக்கமா?

பெண்கள் படித்துறையை நோக்கி அத்தைசென்றதும்அவன் குளிக்கச்சென்றான். கரனை கரனையான தன் புஜங்களுக்கு எண்ணெய் நீவியபடி நாச்சாமி நின்றிருந்தான். இளம் காலை வெய்யிலில் அவன் உடம்பு பொன்னிறமாய்ப் பளபளத்தது. இந்த மாதிரி ஒரு ஆகர்ஷிப்பு ஒரு உடம்புக்கு இருந்தால் எந்தப் பெண்ணாக இருந்தாலும் ஏன் மயங்க மாட்டாள் என்று கார்த்திக் நினைத்துக் கொண்டான். அது உடம்பில் தான் இருக்க வேண்டும் என்பதில்லை. அது வாலியாளின் தாடியில் இருந்தது. கணேசனின் பார்வையில், சிரிக்கும் சல்லாப உதடுகளில் இருந்தது. அந்தப் 'பிறவி ஞானி'க்கும்—! இவர்களிடமிருந்து வித்தியாசமாக இருக்க வேண்டும் என்று நினைக்கும் அவனுக்குத்தான் இல்லை—

'ஹேலோ' 'தேஜஸ்' என்கிற சாரமற்ற அடைமொழிகளைத் தவிர அவனைக் குழப்பும் சங்கடப்படுத்தும் இந்த உபமானங்களைத் தவிர —

'மத்த பசங்களுக்கும் உனக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு! உன்னை எனக்குப் பிடிக்கிறது!'

'ஐ லைக் யூ யார்!'

அவனுக்குச் சட்டென்று ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது. தாரா உண்மையைச் சொல்லியிருப்பாளா?

அவன் படிக்கட்டில் உட்கார்ந்தபடி நீரில் தன் பிரதிபிம்பத்தைப் பார்த்தான். மற்றவர்களின் நீச்சலில் நீர் ஊஞ்சலாடிற்று. பிம்பம் பயங்கரமாகப் பூதம் காண்பித்தது.

பரிகாசம் செய்கிறாள்! நிச்சயம் வெற்று மார்பும் விபூதி சம்புடமுமாக நின்றவனைப் பரிகாசம் செய்ய இதுதான் சரியான அவஸ்திரம் என்று அந்தப் பொல்லாதவள் நினைத்திருக்க வேண்டும். 'ஏலிஸ்' ஜீன்ஸும் டீ. ஷர்ட்டுமாக மார்க்ஸிஸம் பேசிக் கொண்டு காரை ஓட்டுபவள் அவனைப் பார்த்து அப்படி ஒரு வார்த்தை சொன்னாள் என்றால் அதற்கு என்ன அர்த்தம்?

ஆற்றின் மேலாக நன்ருக விரிந்திருந்த சூரியனின் ஒளியில் நாச்சாமியின் உடம்பு தகதகவென்றிருந்தது. தன் உருவத்தைக் கண்டு தானே சந்தோஷிப்பவன் போல ஒரு நார்ஸிஸ எக்களிப்புடன் நீரில் தன்னைப் பார்த்துப் பிறகு பெண்கள் படித்துறைக்கு ஒரு கண் வீச்சடித்து, கையை நீள முன் புறம் நீட்டிக் குபுக்கென்று நீரில் அவன் பாய்ந்தபோது கார்த்திக்குக்குச் சிரிப்பு வந்தது. இந்த உடம்புதான் இவனுக்கு மூலதனம்.... அதையும் எப்படி விரயப்படுத்துகிருன்....!

''கார்த்திக் குளிச்சாச்சா?''

அத்தையின் குரல் தொலைவிலிருந்து கேட்டது.


''இதோ!''

ஆற்றில் அதிக நீர் இல்லை. இதுவும் வற்றிவிட்டால் இந்த ஊர் ஜனங்கள் என்ன செய்வார்கள்? குன்னக்குடியைக் கூப்பிட்டு அமிர்தவர்ஷிணியை வாசிக்கச் சொல்வார்களா? என்ற நினைப்புடன் அவன் தனக்குள் சிரித்தபடி கரையேறினான். சற்றுத் தள்ளி எச்சுமி ஈரப் புடவையில் தோளின் மேல் முறுக்கிப் போட்ட துணிகளுடனும் நிதானமாக வந்து கொண்டிருந்தாள். அவனைப் பார்த்து லேசாகச் சிரித்தாள். கூச்சமில்லாத அந்தச் சிரிப்பும் பார்வையும் மதர்த்த ஈர உடம்பும் அவனுள் ஒரு திகைப்பை ஏற்படுத்தியது.

கடவுளே, இதை விட ஜீன்ஸிலும், பிளவுஸிலும் டில்லிப் பெண்கள் பதவிசாகத் தெரிகிருர்கள். இவள் நிச்சயம் வடிகால்களுக்கு அலைகிருள்....

'கஷ்டம்' என்று அத்தை சரியான வார்த்தைதான் சொன்ருள். திருப்புகழ் பாடித் திசை திருப்பக் கூடிய பார்வை இல்லை அது....

கணவன்: அப்பளம் பாயசத்தோடு சமையல் தடபுடலா இருக்கே! உன் சொந்தக்காரங்க யாரும் வந்திருக்காங்களா?
மனைவி: இல்லே, உங்க சொந்தக் காரங்கதான்!
கணவன்: எங்க அம்மாவா?
மனைவி: இல்லே, உங்க மாமியார்!
—ஆர். சுப்பு



வீட்டிற்குள் காலடி வைத்தபோது அத்தை பூஜை அலமாரிக்கு முன் கண் மூடி நின்றிருந்தாள்.

'மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற
மெய்ச்சுடரே!
எஞ்ஞான மில்லாதேன்
இன்பப் பெருமானே!
அஞ்ஞானந் தன்னை
அகல்விக்கும் நல்லறிவே!

வார்த்தைகளுக்கும் அவற்றின் ஒலிக்கும் ஏதோ சக்தி இருந்தது. உள்ளர்த்தம் முழுவதும் புரியாமல் நெஞ்சில் ஒரு பரவசம் பொங்கிற்று. அருள் சுரந்தாற் போல. அத்தை மாதிரி எல்லோராலும் இருப்பது அசாத்தியமான காரியம் என்று தோன்றிற்று. புலனடக்கம் இவளது இயல்பான குணம். அதனால்தான் இப்பவும் சுந்தரமூர்த்தி இவளைக் கண்டு உள்ளூரப் பயப்படுகிருர். இவள் வார்த்தையால் கொடுக்கும் சவுக்கடிக்கு மழுப்பலாகச் சிரிக்கிருர்.

உண்மையில் எச்சுமியைக் கண்டு தான் பயப்பட வேண்டும் என்று அவன் நினைத்துக் கொண்டான். அவளைப்பார்க்கவே கண் கூசிச் சிரம் தாழ்ந்து போகிறது. பார்த்ததே குற்றமாகிப் போன மாதிரி...

அத்தை கண் திறந்தாள்.

''எத்தனை நேரம்டா குளிச்சுட்டு வர? வெய்யில் ஏறிப் போயிடுத்து. பசி காதை அடைக்கிறது! இதப்பார். தந்திச் சேவகன் வந்தான். என்ன சேதி படி!'' என்று ஒரு தந்தியைக் கொடுத்தாள்.

இதயம் வெளியில் வந்துவிடும் போல் அவனுக்கு மார்பு படபடத்தது. செய்தியைப் படிப்பதற்குள். அதை அனுப்பியவரின் பெயரைப் படித்துத் தூக்கி வாரிப் போட்டது.

''என்னடா?'' அவன் சுய நினைவு வந்து கூச்சத்துடன் சிரித்தான். ''உங்களுக்குத் தான் காது அடைச்சிருக்கே!''

''சொல்லுடா அரட்டை!''

அவன் சட்டென்று அத்தைக்கு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான்.

''என்னடா கண்ணு?''

''நான் பாஸ் பண்ணிட்டேன் அத்தை ஃபர்ஸ்ட் க்ளாஸிலே!''

திடீரென்று கிளம்பிய இனம் புரியாத ஓர் உணர்ச்சிக் கொந்தளிப்பில் அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாமல் அந்தத் தோல் சுருங்கிய பழுப்புப் பாதங்களைப் பிடித்துக்கொண்டுக் குலுங்கக் குலுங்க அழ ஆரம்பித்தான்.

அத்தை கலங்கிய கண்களுடன் குனிந்தாள். முதுகை வருடினாள்.

''சந்தோஷ சமாசாரம்னு ஏன் அழறே? தந்தி யார் அடிச்சிருக்கா?''

அப்பொழுதுதான் அவனுக்கு நினைவுக்கு வந்தது. மறுபடி திகைப்பேற்பட்டது. தன்னைச் சமாளித்துக் கொண்டு ''ஒரு சிநேகிதன்'' என்ருன். (தொடரும்)



ஆகா! பருவ அழகு ஜொலிக்குது! ஆனால், பரு முகத்தைக் கெடுக்குது!
அது பரு இல்லேடா மண்டு! கொசுக்கடியால் வந்த குன்று!
கொசுக்கடிக் கொடுமை இன்றி குன்றாத அழகுடன் திகழ்ந்திட ஒரேவழி டார்டாய்ஸ்.
உள்ளே என்ன ரொம்ப ஜாலியா?
ஜாலியா... ராத்திரி முழுதும் கொசுவை அடிச்சு விரட்டுறதிலேயே அவுங்க பொழுது போயிடுச்சு ...பாவம்.
JUST MARRIED DON'T DISTURB
கொசுத் தொல்லை இல்லாவிட்டால் வாழ்க்கையே ஜாலிதான். உபயோகியுங்கள் டார்டாய்ஸ்.
நமது ஆசிரமத்தில் நாம் எப்போதுமே முழுமையான அகிம்சைத் தத்துவத்தையே பின்பற்றுகிறோம். அதே முறையில்தான் நாம் கொசுக்களை இம்சிக்காமல் விரட்டுவதற்கு டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருளை உபயோகிக்கிறோம்.
கொசுக்களை விரட்டியடிப்பதற்கான சரியான தத்துவம் டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்.
உங்களுக்கு 11 குழந்தைகள் இருக்கிறதா சொன்னீங்களா!! ! அதைப் பார்த்தா நீங்க திருமணமானதிலிருந்து தூங்கவே இல்லே போலிருக்கே!
எப்பவுமே கொசுத் தொல்லை இருக்கிறபோது ஒருத்தர் எப்படிங்க தூங்க முடியும்!
டார்டாய்ஸ் மூலம் நல்லிரவுத் தூக்கத்திற்கு நலமாகத் திட்டமிடுங்கள்.
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
Tortoise
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
போர்ட், பம்பாய்-400 023. போன்: 273831
everest/80/BCL/66-tm

சிவநேசனுக்குப் படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போதே அன்று மனத்தில் மகிழ்ச்சி நிறைந்திருந்தது. காரியாலயம் போய்ச் சேர்ந்து அரை மணி நேரத்துக்குள்ளாகக் கையில் வள்ளிசாக ஐந்நூறு ரூபாய் கிடைத்து விடும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அவன் நேற்றே செய்து விட்டிருந்தான்.

கண்ட்ராக்டர் சுப்பையா பிள்ளையின் பில் பாஸாகாதபடிக்கு என்னென்ன செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்து, அவரை அலைக்கழித்து, கடைசியாகத்தன்னிடம் மண்டியிடச் செய்து ''எப்படியாச்சும் என் பில் சீக்கிரம் பாஸாறதுக்கு வழி பண்ணுங்க ஸார். நான் என்னால முடிஞ்சதை உங்களுக்குச் செய்யறேன்'' என்று சொல்லும்படி செய்தான்.

''அந்த வழவழாக் கொழகொழாப் பேச்செல்லாம் வேண்டாம். சின்ன பில்லா என்ன? முப்பத்தையாயிரம் ரூபாயாச்சே? ஐந்நூறு ரூபாய், கொடுக்கிறீங்களா சொல்லுங்க. நாளைக்கே உங்க பில் பாஸாக்கித் தரேன்'' என்றான்.

''முந்நூறு ரூபாய் குடுத்திடறேனுங்க. முப்பத்தையாயிரம் பில்லானாலும் லாபம் ரொம்பக் கம்மிங்க.''

''அந்தப் பேரமெல்லாம் வேண்டாம். ஐந்நூறு ரூபாய்க்குக் குறைஞ்சு நான் வாங்கறது கிடையாது.''

''சரிங்க. நாளைக்குக் குடுத்திடறேன்.''

''சரி, போங்க. இப்பவே நான் அதுக்கான ஏற்பாடுகளை ஆரம்பிக்கிறேன்.''

''காலைல பதினொரு மணிக்கு வந்துர்றேனுங்க. காஷாவே கொண்டுட்டு வந்துடறேனுங்க.''

''ரைட்.''

சுப்பையா பிள்ளை போனதும் உடனே அவர் பில்லைத் தேடி எடுத்து, எப்படி எழுத வேண்டுமோ எழுதி, தானே எக்ஸிக்யூடிவ் இன்ஜினியரிடம் எடுத்துச் சென்று குழைய டித்துப் பில்லை பாஸாக்கிக் கொண்டு வந்து வைத்துக்கொண்டான்.

ஹேமா ஆனந்ததீர்த்தன்



லஞ்சம் லாவண்யமாகிறது!

இன்று ஆபீசுக்குப் போவதும் முதல் வேலை சுப்பையா பிள்ளையின் வரவையும் அவர் கொண்டு வரப் போகும் தடித்த கவரையும் எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டியதுதான்.

படுக்கை அறையை விட்டு வெளியே வந்த சிவநேசன் முதலில் கவனித்தது வீட்டின் முற்றத்தில் வழக்கமான இடத்தில் தன் மகன் நமச்சிவாயத்தின் மோட்டார் சைக்கிள் இல்லாதிருப்பதுதான்.

புழக்கடைப் பக்கம் சென்ற சிவநேசன் அங்கே நமச்சிவாயம் பல் தேய்த்துக்கொண்டிருப்பதைக் கண்டதும், ''மோட்டார் பைக் எங்கேடா காணும்?'' என்று கேட்டார்.

''வின்செண்ட் எடுத்துட்டுப் போயிருக்கான்.''

''எப்பக் குடுத்தே?''

''விடிகாலைலவந்து எடுத்துட்டுப் போனான். அஞ்சரை மணிக்கு.''

''எதுக்கு?''

''நங்கநல்லூர் வரைக்கும் போயிட்டு வரோணும்னான்.''

''பஸ்ஸுலே போகச் சொல்றதுதானே?''

''பஸ்ஸுலே போறதானா அவனே போய்க்க மாட்டானா? நாம சொல்லணுமா? நாம குடுப்போம்கிறநம்பிக்கையினாலதானேநம்மை வந்து கேக்கறான்?''

''நீ ஆபீசுக்குப் போறதுக்கு என்ன பண்ணுவே?''

''அதுக்குள்ள வந்துருவான். வராட்டி நான் நடந்து போய்க்கிறேன். எனக்கு ஆபீஸ் பக்கத்துலதானே?''

''நீ சரியான இளிச்சவாயன்னு தெரிஞ்சுதான் எல்லாரும் இப்படி உன் தலைல மொளகாய் அரைக்கிறான்! ஊருல இருக்கிறவனுக்கெல்லாம் வண்டியைக் குடுத்துட்டு நீ நடந்து போறேங்கிறயே? இவனுக கிட்டல்லாம் உனக்கு என்னடா தாட்சண்யம் வேண்டிக் கெடக்குது? பட்டுன்னு குடுக்க முடியாதுன்னு சொல்ல வேண்டியதுதானே? உனக்கு நான் இந்த வண்டி வாங்கிக் குடுத்ததே முட்டாள்தனம்.''

''தினமுமா அப்பா குடுக்கறேன். இன்னிக்கு ஏதோ ஒரு அவசரம்னு கேட்டதனால தானே குடுத்தேன்?''

''எப்படியோ போ, எனக்கென்ன வந்தது? புத்தி இருந்தாப் பிழைச்சுக்கிறே. இல்லேன்னா இருக்கிறதை யெல்லாம் வாரிக் குடுத்துட்டுத் தெருவுல நிக்கப் போறே. உன் தலை விதி அப்படி இருந்தா யார் என்ன பண்ணமுடியும்?''என்று திட்டிவிட்டுக் குளியலறைக்குள் புகுந்து கதவைச் சாத்தினார்.

சிவநேசன் பல் விளக்கி முகம் கழுவிக் கொண்டு வீட்டுக்குள் வந்து ஹாலில் வந்து வழக்கமாகத்தாம் உட்காரும் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். மறு நிமிடம் காப்பி டபரா டம்ளருடன் அவர் முன்னே ஆஜராகும் அவர் மனைவி சொர்ணம் ஐந்து நிமிடங்களாகியும் காணவில்லை.

''சொர்ணம்'' என்று குரல் கொடுத்துப் பார்த்தார். பதிலில்லை.

எரிச்சலோடு காலைச் செய்தித் தாளைப் பிரித்து வைத்துக் கொண்டார்.

சொர்ணம் நான்காவது வீட்டில் இருக்கும் அன்னபூரணியம்மாளைக் கூட்டிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தாள்.

''எழுந்துட்டீங்களா? இதோ காப்பி கொண்டு வரேன்'' என்று சொல்லிவிட்டு சொர்ணம் அவசரம் அவசரமாகச் சமையலறையை நோக்கிச் சென்றாள்.

அன்னபூரணியம்மாள் நேரே தொலைபேசி இருக்கும் இடம் போய் ஒலிவாங்கியை எடுத்துக் காதில் வைத்துக் கொண்டு பேசத் தொடங்கினாள். பேச்சிலிருந்து டில்லியில் இருக்கும் தனது மகனோடு பேசுகிறாள் என்பதைச் சிவநேசன் புரிந்து கொண்டார்.

அன்னபூரணியம்மாள் பேசிவிட்டு விடை பெற்றுக் கொண்டு போன பிறகு சிவநேசன் சொர்ணத்தைப் பிடித்துக் கொண்டார்.

''உன்னை யாரு காலங்கார்த்தால நாலு வீடு தள்ளிப் போய் அந்தக் கிழவியைக் கூட்டியாரச் சொன்னது? கூப்பிடறதுக்கு இங்கே யாரும் இல்லேன்னு சொல்லிட வேண்டியதுதானே? நீ என்ன அவங்க வெச்ச ஆளா? டெலிஃபோன் வெச்சிக்கிட்டிருக்கிறது நம்ம சௌகரியத்துக்காகவா, ஊர்ல இருக்கிறவங்க சௌகரியத்துக்காகவா?''

''இதுல என்னங்க வந்தது? காசு செலவா பணம் செலவா? பாவம் அந்தப்பிள்ளை எஸ். டி. டி. கால் போட்டு, அம்மாவோட பேசணும்; கொஞ்சம் தயவு பண்ணிக் கூப்பிடறீங்களான்னு கெஞ்சுது. எப்படி முடியாதுன்னு சொல்றது?''

''நாளைக்கு இந்தம்மா வந்து பிள்ளையோட பேசணும். ஒரு 'கால்' போட்டுக் குடுங்கன்னு கேப்பாங்க. நீ சரிம்பே. அவங்க பாட்டுக்குப் பத்து நிமிஷம் பேசிட்டுப்போயிடுவாங்க. நம்ம கணக்கிலே முந்நூறு கால் ஏறிடும்.''

''அப்படி யெல்லாம் பேச மாட்டாங்க. பேசினாலும் இவ்வளவாச்சுன்னு சொன்னாக் குடுத்திடுவாங்க.''

''குடுப்பாங்க, குடுப்பாங்க. நீயும் கேக்க மாட்டே. அவங்களும் குடுக்க மாட்டாங்க. நீங்கள்ளாம் எனக்குப் பொண்டாட்டியாவும் புள்ளையாவும் வந்திருக்கப்படாது. யாராவது லட்சாதிபதிக்கோ கோடீஸ்வரனுக்கோ பொண்டாட்டியாயும் புள்ளையாவும் இருக்கணும். பெரிய தர்மப் பிரபுக்கள்தான்'' என்று அலுத்துக்கொண்டே செய்தித் தாளில் கவனத்தைச் செலுத்தினார்.

சாப்பிட்டு விட்டு சிவநேசன் காரியாலயத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார். அப்போது அவர் காரியாலயத்தில் வேலை செய்யும் சிங்காரவேலு (பக்கத்துத் தெருவில் இருப்பவன்) அவரைத் தேடிவந்தான்.

''என்ன ஸிங்காரம்?''

''லீவ் லெட்டர் குடுத்துட்டுப் போக லாம்னு வந்தேன் ஸார். இன்னிக்கி நான் ஆபீசுக்கு வரமுடியாது.''

''என்ன விசேஷம்?''

''விசேஷம் இல்லே சார். ஸேட் நியூஸ். எங்க வீட்டுல இன்னொரு கோ-டெனன்ட் இருக்காங்க. அவங்க தாயார் செத்துப் போயிட்டாங்க. தாயாரும் ரெண்டு பொண் ணுங்களும்தான் குடும்பமே. கர்மம் பண்ற துக்குக்கூட அந்தம்மாவோட தம்பியோ, அவ புருஷனோட தம்பியோ யாரோ மது ராந்தகத்துலேருந்து வரணும். தகனத் துக்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் நான்தான் செய்யணும். ரெண்டு பொண் ணுங்க. என்ன செய்யும் பாவம். சைல செலவுக்குக் கூடப் பணம் கிடையாது போல இருக்கு. அதுகூட நான்தான் ஏதாச் சும் ஹெல்ப் பண்ண வேண்டி யிருக்கும். நான் வரட்டுமா? இந்தாங்க லீவ் லெட்டர்'' என்று கடிதத்தை சிவநேசன் கையில் திணித்து விட்டுப் பரக்கப் பரக்க ஓடினான்.

பஸ் ஸ்டாண்டை அடைந்து பஸ்ஸுக் காக சிவநேசன் க்யூவில் நின்று கொண்டார். அவருக்கு முன்னால் க்யூவில் நின்றிருந்த இரண்டு பேர் புது முகமாகத் தெரிந் தார்கள். இருவரும் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தது சிவநேசனின் காதுகளில் விழுந்தது.

''அப்படின்னா இந்த எட்டு வருஷமா உன் மாமனார் மாமியார் உன் வீட்லயா இருக்காங்க?''

''வேற வழி?''

''அப்ப நீதான் அவங்களுக்குப் பையன்னு சொல்லு. மாப்பிள்ளை அல்ல.''

''மாமனார் வார்த்தைக்கு வார்த்தை அப் படித்தான் எல்லார் கிட்டயும் சொல்லிண் டிருக்கார்.''

''ரெண்டு பேருக்கும் என்ன இல்லேன் னாலும் இந்தக்காலத்துல மூந்நூறு, நானூறு ரூபா செலவாகுமே. பெரிய பர்டன் இல் லியோ உனக்கு?''

''பர்டன்னு நான் நினைக்கல்லே. எங்க பேரண்ட்ஸ் இருந்தாச் செய்ய மாட்டேனா? அப்படி நினைச்சுண்டு செய்யறேன்.''

''வயித்தில பிறந்த பையன் இருக்கான். சம்பாதிக்கிறான். கிட்டத்தட்ட ஆயிரம் ரூபா வரதுங்கறே. அவனுக்கில்லாத கட மையா உனக்கு? அதிசயப் பிறவியா இருக்கியேப்பா. ஆனா, எனக்கு சந்தோஷம் தான். நீ பண்ற இந்தக் காரியம் லேசுப்பட்ட தில்லே. பகவான் உனக்கு இதுக்குத் தகுந்த மாதிரி அள்ளிக் கொடுப்பார்.''

இந்தப் பேச்சு நடந்து கொண்டிருந்த போது ஒரு அம்பாஸிடர் கார் அங்கே வந்து நின்றது. காரில் டிரைவர் இருப்பிடத்தில் இருந்த ஒருவரைத் தவிர மற்றபடி வேறு யாரும் இல்லாமல் காலியாக இருந்தது.

காரை ஓட்டிக் கொண்டு வந்தவர் சிவ நேசனுக்கு முன்னால் நின்று பேசிக் கொண்டிருந்தவர்களைப் பார்த்துச்சிரித்தார்.

''பாரிஸ் கார்னர்தானே? ஏறிக்குங்க வண்டியில'' என்றார்.

''என்ன பலராமன் சார், வழக்கமா பீச் ரோடு வழியாப் போயிடுவேளில்லையா? இன்னிக்கு இந்தப் பக்கம் வந்துட்டாப்பல இருக்கு'' என்று சொல்லிக் கொண்டு காரின் கதவைத் திறந்தார் ஒருவர்.

இருவரும் காரில் ஏறி உட்கார்ந்து கொண் டனர் — முன் சீட்டிலேயே.

''இன்னும் மூணு பேர் வரலாம். வண்டி யில இடம் இருக்கு. பாரிஸ் போறவா ஏறிக் கலாம், ப்ளீஸ்'' என்றார் காரின் சொந்தக் காரர்.

சிவநேசனும் இன்னும் இரண்டு பேரும் ஏறிக் கொண்டார்கள். கார் புறப்பட்டுச் சென்றது.


காரை ஓட்டிக் கொண்டே அதன் சொந் தக்காரர் பேசினார்— ''இங்கே ராமகிருஷ்ண மடத்தில ஒரு வேலை இருந்தது. அதுக்காக இந்தப் பக்கம் வந்தேன். அவா அத்வைத மும் சைவமும்னு ஒரு பெரிய புஸ்தகம் போடப் போறா. ஐந்நூறு பக்கத்துக்கு மேல வரும். அதனோட செலவு பூரா நான் ஏத்துண்டிருக்கேன்.''

''இந்த மாதிரி தர்மமாப் பண்ணிப் புண் ணியத்தை ஏகமா மூட்டை கட்டிண்டிருக் கீர்'' என்று சிரித்தார் முன் சீட்டில் இருந் தவர்களில் ஒருவர்.


''புண்ணியம் பாவம்னெல்லாம் எதிர் பார்த்து நான் இதைச் செய்யலே. ஏதோ பகவான் குடுத்திருக்கான். இந்த மாதிரி நாலு காரியம் பண்ணும்போது மனசுக்குச் சந்தோஷமா இருக்கு. செய்யறேன்.''

''எங்களை யெல்லாம் கார்ல ஏத்திண்டு போய் விடறேளே. இது யார் செய்யறா சொல்லுங்க இந்தக் காலத்தில. பஸ்,

ராலி:.பேன் விசிறிகளின் உள்ளமைந்த மேம்பாடு. இதனைக் கண்கூடாக காணலாம்.



கவர்ச்சி மிக்க
ராலிஃபேன்
டெபொனேர்
உங்கள் கட்டட
அலங்காரத்திற்குக்
களையூட்டுகிறது.



அழகிய தோற்றம் என்கிற கண்ணோட்டத்தில் பார்க்கிற போது, ராலி:.பேன் விசிறிகளுக்கு இணையே இல்லை. ஏனெனில் சீரிய செயல்திறனோடு விளங்க ஒவ்வொரு ராலி:.பேன் விசிறியும் அப்பழுக்கற்ற முறையில் வடிவமைக்கப்படுகிறது. மின்சார முறை வண்ணப் பூச்சு கொண்ட பாகங்கள், மற்றும் கவர்ச்சியான பியானோ கீ ஸ்விட்ச். விசேஷ-ஸிங்கிள்-பீஸ் பிளேடுகள் என்பதால், சீராக ஓடுவதோடு இரைச்சலும் இருக்காது. மிக நுணுக்கமான கியர்-பாக்ஸ் இருப்பதால் உதறல் இன்றி, சமநிலை இயக்கம் கிடைக்கிறது. ஆகவே உங்களுக்குக் கிடைப்பது—இத்தனைச் சிறப்புகளும் உள்ளடங்கிய அருமையான விசிறி. தேர்ந்தெடுக்க வசதியாக, பல்வகை ராலி:.பேன் விசிறிகள். டெபோனேர், டீலக்ஸ், நியூ டிலைட், டெமாக்ரேட், மற்றும் பெடஸ்டல், வால், கேபின் விசிறிகள். ஒவ்வொன்றிலும் ஓங்கி நிற்கும் ராலி:.பேன் மேம்பாடு.

ராலி:.பேன்

தரமோங்கிய தயாரிப்புகளுக்கு

ராலீஸ்

மல்ட்டி-டெக்னாலஜி க்ரூப்

ULKA-RF-3-82TAM

டாக்ஸி ஸ்டிரைக் இருந்தாக் கூட கார்ல தனியாப் போறவா லிஃப்ட் குடுக்கிறதில்லே. பயம். நீங்க வலிஞ்சு கூப்பிட்டு அழைச்சிண்டு போறேன்'' என்றார் பின் சீட்டில் வெங்கடேசனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒருவர்.

பேச்சு தொடரத் தொடரக் காரின் சொந்தக்காரர் செய்த பல நல்ல காரியங்கள் —ஆறு ஏழைப் பையன்களின் படிப்புச் செலவை முழுதுமாக ஏற்றுக் கொண்டிருப்பது, மாதம் ஒரு முறை தவறாமல் ப்ளட் பாங்குக்குப் போய் ரத்த தானம் செய்வது, தமது கண்களைத் தமது மரணத்துக்குப் பிறகு எடுத்துக் கொள்ளச் சொல்லிக் கண் தானம் செய்திருப்பது முதலியவை — தெரியவந்தன.

கார் ப்ராட்வே முனையை நெருங்கியதும் வெங்கடேசன் காரின் சொந்தக்காரருக்கு நன்றி சொல்லிவிட்டு இறங்கிக் கொண்டார்.

சரியாகப் பதினொரு மணிக்கு கன்ட்ராக்டர் சுப்பையா பிள்ளை சொன்னபடி வந்து விட்டார்.

''வாங்க. உங்க பில் ரெடி. நேத்தே பாஸ் பண்ணியாச்சு'' என்று வரவேற்றார்.

''ரொம்ப தேங்க்ஸ் ஸார்'' என்று கூறியபடியே சுப்பையா பிள்ளை தமது சட்டைப் பையைத் தொட்டுக் காட்டி ''ரெடியா இருக்கு. இங்கியே குடுத்துடவா வெளியே போய்க் காப்பி சாப்பிடலாமா, அங்கே வாங்கிக்கிறீங்களா?'' என்று கேட்டார்.

''அப்ட. குடுக்கிறதா நிச்சயம் பண்ணிட்டீங்க?''

''பின்னே, ஒத்துக்கிட்ட மாதிரி குடுக்க வேண்டாமா? சொன்ன சொல் தவறலாமா?''

''சரி அப்போ குடுங்க. ஆனா எனக்கு வேண்டாம். நான் சொல்ற இடத்துல!''

''யாருக்குக் குடுக்கச் சொல்றீங்களோ குடுத்துடறேன்.''

''ராமகிருஷ்ண மடம் இருக்கில்லியா மயிலாப்பூர்ல. அங்கே கொண்டு போய் டொனேஷனுக் குடுத்துடுங்க — உங்க பேர்லயே.''

''என்ன சார் இது? ஏன் இப்படி?''

''ஆமா, சுப்பையா பிள்ளை. நிஜமாத்தான் சொல்றேன். இதுவரைக்கும் நான் இந்த மாதிரி பணம் வாங்கினதில்லே. நேத்து என்னமோ ஒரு சபலம் — எல்லாரும் வாங்கிக்கிறாங்களே, நாம மட்டும் ஏன் வாங்கக் கூடாதுன்னு. அந்தச் சபலத்துலதான் உங்களைக் கேட்டுட்டேன். ஆனா நம்மைச் சுத்தி இருக்கிறவங்க எல்லாருமே அப்படிப்பட்டவங்க இல்லே, நல்லவங்களும் இருக்காங்கங்கறதை ஆண்டவன் எனக்கு உணர்த்திட்டான். பணத்தையோ, உபகாரத்தையோ ஒருத்தர் கிட்டேயிருந்து வாங்கிக்கிறதை விட அதைக் குடுக்கிறதுலதான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் ஜாஸ்தி இருக்குங்கறதை நாலஞ்சு மணி நேரத்துல தெரிஞ்சுக்கிட்டேன்'' என்றார்.

''ரொம்ப சந்தோஷம் சார். என் பில் பாஸாச்சுங்கிறதுனால கூட எனக்கு இவ்வளவு சந்தோஷம் இல்லே சார்'' என்று சுப்பையா பிள்ளை சொன்னபோது அவர் கண்களில் வீசிய ஒளி அவர் உண்மைதான் பேசுகிறார் என்பதைச் சொல்லியது.



ஆஸ்த்மா

தேவிபாலா

அதுவரை அவள் அனுபவித்திராத விசித்திர உணர்வு அது. ஓரளவு மிதமான சூழ்நிலையிலும் வியர்த்து ஊற்றியது. முகம் முழுவதும் சூடாகிப் போனது தெரிந்தது. உடலே பாரமாகத் தாங்க முடியாமல் கனத்தது.

அடுப்பில் பஜ்ஜி வெந்து கொண்டிருந்தது. அம்மா கீழே உட்கார்ந்து கேசரிக்கு முந்திரிப் பருப்பை ஒடித்துக் கொண்டிருந்தாள்.

''அம்மா, என்னால நிக்க முடியலே. நீயே இதையும் பார்த்துக்கோ.'' அவசரமாகச் சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

''என்னடி உமா, என்னாச்சு?'' பதறிப் போன அம்மா சட்டென கேஸை அணைத்துவிட்டு அவளோடு ஓடினாள். ''மூச்சு விடக் கஷ்டமா இருக்கும்மா...'' திணறித் திணறி அதைச் சொன்னாள்.

''என்னா, இங்க வரேளா சித்த! இவ என்னன்னமோ சொல்றாளே!''

அப்பா ஓடிவந்தார். ''உமா, என்னம்மா செய்யறது உனக்கு?''

''சொல்லத் தெரியலப்பா. ரொம்பக் கஷ்டமா இருக்கு.'' அழத் தொடங்கினாள். சரளமாக வருகிற மூச்சு, 'இந்தா எண்ணிக் கொள்' என்பது போல் தனித் தனியாக வரத் தொடங்கியது. கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பது போல, காலிலிருந்து மூச்சைக் கஷ்டப்பட்டு கொண்டுவரத் தொடங்கினாள். அந்தப் போராட்டத்தில் மார்புக் கூடு முன்னால் தள்ளி கழுத்து வளைந்துகொண்டது. பஸ்ஸர் போன்ற மெல்லிய ஒரு ஓசை 'ஞ்ரிங் ஞ்ரிங்' என்று வெளிப்பட்டது.

''இப்ப என்ன செய்யறது?'' — அம்மா கவலைப்பட,

''சரி, படுக்க வச்சு, ஜன்னலை யெல்லாம் திறந்து விடு. ஓடிப்போய் டாக்டரைக் கூட்டிண்டு வரேன். இன்னும் டைம் இருக்கு. பிள்ளையாத்துக்காராளை வர வேண்டாம்னு ஃபோன் பண்ணிடறேன். இந்த நிலைல இவளைப் பார்த்தா வேண்டாம்னுதான் சொல்லத் தோணும்.''

டாக்டர் வந்தார். பரிசோதித்தார்..

''இதுக்கு முன்னால இது மாதிரி வர்றதுண்டா?''

''இல்லை டாக்டர். இப்பத்தான்.''

''இது ஆஸ்துமா மாதிரி இருக்கு. எதுக்கும் ரத்தப் பரிசோதனை செஞ்சுடலாம்.'' ஊசி போட்டுச் சில மருந்து, மாத்திரைகள் எழுதினார். ''அலட்டிக்காதம்மா உனக்கு ஒண்ணும் இல்ல...''

ப்ளட் ரிப்போர்ட் 'ஆஸ்த்தமா' என்றது.

''எப்படி டாக்டர்? இது நாள்வரைக்கும் அவளுக்கு எதுவுமே கிடையாதே!'' — அப்பா.

''வியாதிகளெல்லாம் பிறக்கும்போதே வருதா, என்ன? பல காரணங்கள் இருக்கலாம். ஈஸ்னோஃபீலியா பத்து சதவிதத்துக்குமேலே இருக்கு. கொஞ்சம் க்ரானிக்கோட சேர்ந்தது தான். அலர்ஜியா இருக்கும்.''

''ஆஸ்த்மா குணமே ஆகாத வியாதின்னு சொல்றாங்களே டாக்டர்? உண்மையா?''

''ஒரு டாக்டரா இருந்து எதையுமே குணமாகாதுன்னு நான் சொல்லக் கூடாது. அது தொழில் தர்மம் இல்லே. லெட் அஸ் ஹோப் ஃபார் த பெஸ்ட். நான் சொன்னபடி செய்யுங்க. சாம்பிராணி, ஊதுபத்தி இது மாதிரி வாசனைகளைக் குறைச்சுக்குங்க. திடீர்னு அட்டாக் வந்தா டெரிஃபிலின் போட்டுக்குங்க.''

ஆரம்ப வைத்தியங்களில் சரியாகிப் போக அப்பா சந்தோஷப்பட்டார்.

அடுத்த நாள் உமாவைப் பார்க்க அவர்கள் வருகிறார்கள் என்றபோது இன்று மறுபடியும் ஆஸ்துமா வந்து எட்டிப் பார்த்தது.

மெல்ல ஆரம்பித்த சங்கீதம், பக்கவாத்தியங்களையும் துணைக்கு அழைத்துக்கொண்டு விஸ்தாரமாக ஆலாபனம் செய்ய ஆரம்பித்தது. ஒவ்வொரு சுவாஸத்துக்கும் மூச்சு அஷ்டமத்தில் சஞ்சரித்தது.

டாக்டர் அவசரமாக அழைத்து வரப்பட,

மறுபடியும் டெரிஃபிலின் அவளை விரும்ப, எதற்கும் விட்டுக் கொடுக்காத சுவாசம் முரட்டுப் பிடிவாதத்தில் இருக்க,

தொம் தொம் என்று குதிக்கும் இதயத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் சக்கர வட்டமாகச் சுழன்றாள் உமா. மூட்டுக்கு மூட்டு விடுபடத் துடிக்க.... அது ஒரு மரண ஓலமாக இருந்தது.

''அட்மிட் பண்ணிடுங்க. மாஸ்கிட்டர் வச்சு, ஒருவாட்டி ஆக்ஸிஜன் ஃபீட் பண்ணிட்டா சரியாயிடும்....'' அவசரமாக டாக்டர் கடிதம் தர, ஆம்புலன்ஸுக்குத் தம்பி ஓட, அம்மா முழு நாணயத்தைப் பிரார்த்தித்து விபூதியில் செருக, அப்பா உமாவின் முதுகைத் தடவி, கட்டுப்படுத்த முயன்று தோற்றுக் கொண்டிருந்தார்.

''என்னாச்சு அந்த வரன் அம்மா?''

''அது போச்சுடி. அந்தப் பார்ட்டிக்கு எப்படியோ விஷயம் தெரிஞ்சு போச்சு. ப்ளஸ், வர வர இவளோட ஆஸ்த்மா சமாசாரம் எப்படியோ பரவிப் போய் எந்த வரனும் குதிர மாட்டேங்கிறதே.''

''ஏதோ ஒரு ராமன்.. முத்துராமனா... சுப்பராமனா? அண்ணா நகர்ல இருக்காராமே! என்னமோ ஒரு ட்ராப்ஸ் குடுக்கறாராம். அது சாப்டா ஆஸ்த்மாவே வர்றதில்லையாம். போய்க் காட்டலாமா?''

''ம்! எதை வேண்டாம்னு வச்சோம். ஹைதராபாத்தில மீனுக்குள்ள மருந்தை வச்சு, பௌர்ணமில தர்றதாச் சொன்னே. காட்டினோம். யாரோ யோகா பண்ணச் சொன்னா. பலன், உடம்புதான் அவளுக்கு ஊதிப்போச்சு. இதையும் பார்த்துரலாம்.''

அவரது அலுப்பைப் பொருட்படுத்தாத ஆஸ்த்மா உமாவைக் கெட்டியாகப் பிடித்து ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறது.

வந்த வரன்கள் தட்டிப் போன கதை ஏராளம்.

''அது யாரு உங்க சின்னப் பொண்ணு?'' என்று அடுத்தவன் சீமாவுக்குச் சிலர் கொக்கி போட, உமாவைப் பார்க்க வரும் நாட்களில் சீமா காணாமல் போனாள்.

மறைத்துச் செய்து விடலாம் என்றுதான் அப்பா ஆரம்பத்தில் முயன்றார்.

ஒரு வரன் எல்லா விதத்திலும் ஒத்துப் போனது. டிபனை எடுத்து வந்த உமாவை, வந்தவர்கள் அங்கேயே உட்கார்த்தி வைத்தார்கள்.

பிள்ளையாண்டான் போட்டிருந்த ரேவ-லான் இன்டிமேட்.. கும்மென்று ஆளைத் தூக்க, ஆசை தாங்க முடியாமல், 'உன்னை நானும் பார்க்க வேண்டும்' என்று எட்டிப் பார்த்து விட்டது ஆஸ்த்மா. இன்னொரு இடத்தில்....

பிள்ளையின் அப்பா, வந்த இடத்தில் இழரென்று இழுக்கத் தொடங்க, தனது தோஸ்தைத் தேடித் துணைக்கு வந்தது உமாவின் ஆஸ்த்மா.

''ஐயோ! இது பொல்லாத வியாதி! அனுபவிச்ச எனக்குத் தெரியும். என் பிள்ளைக்கு வாணாம், இந்தச் சங்கடம்.''

ஆஸ்துமாவினால் தொடர்ந்த இரவுகளில் உமாவுக்கு நித்திரை வரவில்லை. ஆனால் சித்திரை வந்து விட்டது அவளுக்கு வயது முப்பது என்று சொல்ல.

''அப்பா, எனக்கு இனிமே எந்த வரனும் பார்க்க வேண்டாம். ஆஸ்த்மா எனக்குத் தாலி கட்டியாச்சு. அதனால இன்னொருத்தர் எனக்கு வரமாட்டார். என்னாலே சீமாவோட வாழ்க்கை பாழாயிண்டிருக்கு!''

''நீ அலட்டிக்காதேம்மா!''

''ஆனா ஊரும், அக்கம் பக்கமும் அலட்டிக்கறதே. அம்மா கிட்ட அவா பேசறது என் காதுல விழாம இல்லே. பெரிசு சீக்காளி. அதை எவனும் சீந்த மாட்டான். சின்னதைஎன் வீட்டல வச்சுக்கணும்னு கேக்கறான்பா.



இந்த ஜன்மத்துல எனக்குக் கல்யாணம் நடக்காதுப்பா. அவளுக்காவது வரன் பாருங்கோப்பா!''

அது சரியோயென்று தோன்றியது அப்பாவுக்கு.

அம்மாவிடம் கேட்டபோது முதலில் அழுதாள். யோசித்தபோது அம்மாவுக்கும் சரியாகப் பட்டது.

''சரி, அவ இஷ்டப்படியே செஞ்சுடலாம்.''

அப்பா இந்துப் பத்திரிகை பார்த்து எழுதிப் போட, புகைப்படம் கேட்டுப் பதில் வர சீமாவின் புகைப்படம் போய்ச் சேர்ந்த ஆறுவது நாள் பெண் பார்க்க வருவதாகப் பதில் வந்தது. அம்மா வழக்கம் போல் சொஜ்ஜி, பஜ்ஜி செய்தாள். ஆனால் எதிலுமே சுவாரஸ்யம் இல்லை.

தம்பி அவர்களை அழைக்க ஸ்டேஷனுக்குப் புறப்பட்டுப் போனான்.

சீமாவுக்குத் தலை பின்னத் தொடங்கினாள் உமா.

''அக்கா இது சரியா? மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு. அப்படி உனக்கு என்னக்கா வயசாயிடுத்து. இப்ப நினைச்சாக்கூட இதை வேண்டாம்னு வச்சிரலாம்.''

'நீ பேசாம இரும்மா. எது நடக்கணுமோ அதுதான் நடக்கும்.' அப்பா வந்து எட்டிப் பார்த்தார்.

''அப்பா, அவா விவரங்கள் கேட்டா, ஒரே பொண்ணுன்னு சொல்லிடுங்கோ. வியாதிக்கார அக்கா காரணமாக அவளுக்கும் வர்றது தட்டிப் போக வேண்டாம்.''


அடுத்த அரைமணி நேரத்தில் அண்ணா, மன்னியோடு சிவராம் டாக்சியில் வந்து இறங்கினான்.

ஒரே பார்வையில் சீமாவைப் பிடித்துப் போக அங்கேயே சம்மதம் சொன்னார்கள். மற்ற விஷயங்களில் எந்தக் கட்டுப்பாடும் விதிக்காமல் ஒப்புக் கொண்டார்கள்.

மறைந்து நின்று கொண்டு ஜன்னல் வழியாக மெல்ல அவனைப் பார்த்தாள் உமா. செக்கச் சிவந்த உடம்புமாகக் கவர்ச்சியாக இருந்தான் சிவராம். ஒவ்வொரு அசைவிலும் அவனது கண்ணியம் புரிந்தது.

நாகப்பாம்பு: என்ன அந்தப் பாம்பு இமிராத் தலையைத் தூக்கிக்கிட்டுப் போகுது?
மற்ற பாம்பு: அது தண்ணிப் பாம்பு அதனால அது அப்படிப் போகுது.

-கே. சக்கரபாணி



சட்டென்று ஓடிப் படுக்கையில் உட்கார்ந்து கொண்டாள். மெதுவாக மூச்சிரைத்தது.

'நான் பொறாமைப்படுகிறேனா?' நினைத்த போது அதிர்ச்சியாக இருந்தது. அவசரமாக பெட்லிலானைத் தேடினாள்.

ஊர் விட்டு ஊர் வரவேண்டாம் என்று நிச்சயதார்த்தத்தைப் பெண் வீட்டிலேயே நடத்தச் சொன்னார்கள். வீடு முழுக்க உறவுக்காரர்களும் நண்பர்களும் இறைந்திருக்க, வீட்டில் கல்யாணக் களைகட்டி விட்டது.

வாசலில் மோட்டார் வந்து நிற்க உமா அடுக்களைக்குள் ஒதுங்கிக்கொண்டாள். பிறகு களைப்பில் சுருண்டு கட்டிலில் வந்து விழுந்தாள். எத்தனை நேரம் அவள் படுக்கையில் கிடந்தாளோ தெரியாது. படுக்கை அறைக் கதவு தட்டப்படும் ஒலியில் மெல்ல எழுந்து வாசலுக்கு வந்தாள்.

திறந்தபோது அதிர்ந்தாள். சிவராம்.....

''நீங்க.... நீங்களா?''

''உங்கப்பா என்னிடம் எதுக்கு ஒரு பொய் சொன்னார்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''என்ன பொய்?'' நடுங்கிப் போனாள்.

''சீமா ஒரே பொண்ணுங்கறது பொய் இல்லையா?''

''ஓ.... அதுவா? நாந்தான் சொல்லச் சொன்னேன். என் தங்கைக்குத் தடையா இருக்க இஷ்டப்படலே.''

''அன்னு பெண் பார்க்கிற அன்னைக்கு ஜன்னல்ல பாதி முகம் தெரிஞ்சதை மறைக்க உங்களால முடியலியே! நான் மட்டும் பார்த்தேன்.''

''என் தங்கையோட வருங்காலக் கணவனைப் பார்க்கிற ஆசையை என்னாலே கட்டுப்படுத்த முடியல!''

''இந்த ஆஸ்த்மாதான் உங்க வேதனைக்குக் காரணம்னு நினைக்கிறேன்...'' அவளது இழுப்பு அவளைக்காட்டிக் கொடுத்து விட்டது.

''இதை ஏன் உங்கப்பா சொல்லல்லே?''

''இதை யாரும் சொல்லவேண்டாம் சார். அதுவே வந்து சொல்லிடும்!''

''ஒருவேளை கல்யாணத்துக்குப் பின்னால இது உங்களுக்கு வந்திருந்தா... கட்டினவன் விட்டிருப்பானா?''

''என் விதி. அது போகட்டும், நேரமாச்சு, நிச்சயதார்த்தத்துக்கு எல்லாரும் காத்துண்டு இருப்பா. முன் ஹாலுக்குப் போங்கோ.''

''நீயும் சந்தோஷமா டிரஸ் பண்ணிக்கோ, நிச்சயதார்த்தம் உனக்கும் எனக்கும்தான்!''

''சிவராம், என்ன உளர்றீங்க?''

''உளரலே. அழகான உன் தங்கைக்கு, வியாதியே இல்லாத உன் தங்கைக்கு, ஊர்ல ஆயிரம் மாப்பிள்ளைகள் கிடைக்கலாம். பணமும் உடம்பும் எனக்கு முக்கியமில்லை. இதுக்கு மேலே என்னைப் பத்திச் சொல்லிக்க நான் தயாராயில்லை. கிளம்பும்மா!'' ஆதரமாக அவளது தோளில் கையை வைத்து மெல்ல அவன் அழுத்தியபோது தெய்வத்தையே நேரில் தரிசித்தது போல இருந்தது.

இதற்கு முன் வந்த அத்தனை பேரும் வெளியே தெரிந்த ஆஸ்த்மாவைப் பார்த்தார்கள். இவன் உள்ளே இருக்கும் ஆத்மாவைப் பார்த்து விட்டான்.

நக்சலிஸத்தை எதிர்த்துக் கொடி பிடித்துள்ளார் கோமல் சுவாமிநாதன்.

தனிமனிதனைப் பழி வாங்குவதால் சமூக விரோத சக்திகள் பூண்டோடு அழிந்து விடாது. மக்கள் உணர்வுகளைத் தட்டி எழுப்பும் ஒன்றுதிரண்ட சக்தி மூலம்தான் அதைச் சாதிக்க முடியும் என்பதைச் சொல்லியுள்ளார். இதைக் கூறும்போதே அவருடைய பேனா கத்தியாக மாறிப் புரையோடிப் போன சமுதாய சூழல்களுக்கு சஸ்திர சிகிச்சை செய்துள்ளது.


தீவிரவாதியாக நடித்திருக்கும் ராஜேஷ், நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு கல்லூரி பிரின்சிபால், கமிட்டி உறுப்பினர்கள், போலீஸ் அதிகாரி இவர்கள் முன்னிலையில் கனல் தெறிக்கப் பேசும் போது தன்னை நிஜமான தீவிரவாதியாக மாற்றிக் கொண்டவர் போலக் காணப்படுகிறார்.

கோரும்போதும் சரி முதுகெலும்பாகிறார்கள். காதல் காட்சிகளில் இவர்களை நெருங்க விடாமல் வார்த்தைகள் மூலமாகவே ஒரு மனப்பட வைத்திருப்பது டைரக்டரின் நயம்.

வாத்தியார் ராமன் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றிய மாதிரிப் பேசிப் படத்தைச் சலசலக்க வைக்கிறார். எதைக் கொடுத்தாலும் வாங்கிக் கொள்ளும் இந்த டாக்டருக்கு நாம் கொடுப்போம் ஒரு சபாஷ்!

மறக்க முடியாத கதாபாத்திரம் ஜடாயு! காந்தி கையெழுத்தைக் காசாக்கிய சோகக் கதையைச் சொல்லி நெகிழ வைக்கிறார்.

பளிச் பளிச்சென்று இப்படிப் பலர். அனைவருமே கோமலின் கருத்துச் சிதறல்களாக வந்து போகிறார்களே யன்றி கதா பாத்திரங்களாக அல்ல. கதையை விட அரசியலே அதிகமுள்ள இப்படத்தில் டைரக்ஷனுக்குப் புதிய கோணம் அமைத்துள்ளார் கோமல்.



அனல் காற்று

ஆனால், நக்ஸலைட்டாக மாறி, போலீசுக்குப் பயந்து தலைமறைவான பிறகு அந்த வீரம் ஒடுங்கிப் போன மாதிரி தெரிகிறதே!

சாத்வீகமான போராட்டத்தில் புரட்சி காணத் துடிக்கும் எதிர் கோணத்தில் வருகிறார் டெல்லி கணேஷ். அந்த சாத்வீகம் இவரது நடிப்பிலும் தெரிகிறது. ஆனால் கதையின் (அப்படி ஒன்று இருந்தால்) முடிவு ஜனநாயக ரீதியான கம்யூனிஸப் புரட்சிக்கு வெற்றியாக அமையாது படுகொலையிலேயே முடிந்தது துரதிர்ஷ்டம்தான்.

ராஜ்மதனும் வனிதாவும் படத்துக்கு வலுவூட்டும் கதாபாத்திரங்கள். நக்ஸலைட் இயக்கத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொண்ட பிறகு அவவழி தவறானது என்பதைப் புரிந்து கொண்டு தங்களைத் திருத்திக் கொள்ளும் போதும் சரி, தலைவனைச் சரணாகதி யடையக்

அரசாங்க அலுவலகத்தில் லஞ்சம் கேட்டு நாற்காலி மேஜைகளை மட்டுமே பேச வைத்திருப்பது — ஒன்று.

தலைமறைவான தீவிரவாதிகளைப் பசிக்குக் கிடைத்த 'பன்'னைச் சுவைக்க விடாமல், புரட்சிக் கவிதைகளைப் பாட வைத்து அவர்களது கொள்கைப் பசியைத் தீர்த்து வைக்கும் நயம் — இரண்டு.

என்றாலும் விநாயகர் படம் கூட லஞ்சம் கேட்பதாகக் கற்பனை ரொம்ப ஓவர்.

படத்தின் பிற்பகுதியில் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடரும் சாவுகள் அலுப்பை அளித்தாலும், பொங்கி எழும் புரட்சி எண்ணம் கொண்டவர்களுக்கு இது அனல் காற்றல்ல — குளிர் காற்று.

—நிரைஞானி

நிஜமும் சிதையும்!

'ஜெரா'


அந்த ஒரு கணத்தில் இதயம் 'குப்' பென்று அடைக்க, ஏதும் பேசத் தோன்றாமல் விக்கித்துப் போனாள் பிருந்தா! இதைப் பாஸ்கரிடமிருந்து சற்றும் எதிர்பார்க்காத தால் அவள் இதயம் சிறகு வெட்டப்பட்ட பறவையாகப் படபடத்தது. ஏமாற்றம்... மயிர்க் கால்களில் ஜில்லென்று ரத்தம் பாய, அடிவயிற்றில் பந்தாக எழும் பயத்துக்கு வித்திடும் கனமான ஏமாற்றம்.

பாஸ்கரின் கரங்களில் நாசூக்காய்ச் சிறைப் பட்டிருந்த அவளுடைய பத்து விரல்களும் லேசாக நடுங்கிக் கொண்டிருப்பதை அவளால் உணர முடிந்தது.

அவள் தன் விரல்களை மெல்ல விடுவித்துக் கொண்டு, பார்வையைத் திருப்பி, கீழே அதல பாதாளத்தில் கூடைகளைக் கவிழ்த்தாற்போல் கட்டிடங்களை வைத்துக்கொண்டிருக்கும் கோவை நகரை நோட்டமிட்டாள்.

உதகமண்டலத்தின் குளிர் சற்று அதிகமாக உரிமையை எடுத்துக் கொண்டு, கவசமிடப்படாத கன்னத்தைத் தொட்டுச்செல்லம் கொஞ்சியது. தொட்டபெட்டாவின் உச்சியில் நின்று கொண்டிருக்கும் போதே ஏதோ பள்ளத்துக்குள் சிக்கிக் கொண்டிருப்பது போல இனம் தெரியாத பரிதவிப்பு பிருந்தாவைப் பகடையாக்கிக் கொண்டிருந்தது.

கூடாது... இந்த உணர்ச்சிக் குவியல் கட்டு மீறிவிட்டால் அருகிலிருக்கும்பாஸ்கருக்குப் பிருந்தாவை அடையாளம் காட்டி விடும். அப்புறம் இவள் மேல் பாஸ்கர் வைத்திருக்கும் மதிப்பு மண்ணாகிப் போய், இந்த பிருந்தாவும் ஒரு சாதாரணப்





பெண் தான் என்ற அளவில் எடைபோட்டு விடுவான்.

கொஞ்ச நேரம்தான் பிருந்தா...சமாளித்துக் கொண்டாள். சலங்கைச் சிரிப்பில் அந்தப் பிராந்தியத்தையே பிடித்து உலுக்கித் தூரத்தில் நின்று கொண்டிருந்த ஓரிரு டூரிஸ்ட்களையும் திரும்பிப் பார்க்க வைத்தாள். பாஸ்கர் அப்பாவித்தனமாக அவளைப் பார்த்தான்.

''ரியலி ஐ வொண்டர் மிஸ்டர் பாஸ்கர்... நீங்க எப்படி?''

பாஸ்கர் தலைகுனிந்து கொண்டான். பிறகு மெல்லப் புன்னகைத்தபடி ''எனக்குச் சொல்லத் தெரியலே மிஸ் ப்ருந்தா... பட் ஐ லவ் ஹர் – ஐ வாண்ட்டு மேரி ஹர்'' என்றான்.

நாசூக்காகத் தைக்கும் வார்த்தை அம்புகள்! பிருந்தா தொலைவில் நின்றுகொண்டிருந்த காரைப் பார்த்தாள்.

'' ஷல் வீ மூவ்....''

இருவரும் நடந்தார்கள். இமையோரத்தின் ஈரத்தைப் புதுப்பிக்க ஓரிரு கண்ணீர்த் துளிகள் தயாரானதும் பிருந்தா சட்டென்று கூலிங் கிளாஸை எடுத்துமாட்டிக் கொண்டாள். குளிர்ந்த காற்று பாஸ்கரின் விழிகளை ஈரப்படுத்திக் கொண்டிருந்தது.

''மிஸ்டர் பாஸ்கர் – சில சமயங்களில் தென்றல் கூட நம்மை அழ வைச்சிடுது– ப்ளீஸ் கண்ணைத் துடைச்சுக்குங்க.''

அவள் நீட்டிய கர்ச்சீப்பை வாங்காமல் தன் பாக்கெட்டிலிருந்து ஒரு ரோஸ் கலர் கர்ச்சீப்பை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டான் பாஸ்கர்.

''பார்த்தீங்களா மிஸ் பிருந்தா -- இது உங்க சிநேகிதியோட கர்சீப். நேத்து அவங்க ரூமுக்குப் போயிருந்தப்போ காப்பி கொடுத்தாங்க. டம்ளர் கொஞ்சம் ஸ்லிப் ஆகி பேண்ட்லெ எல்லாம்... துடைக்கறதுக்காக அவங்க கர்சீப்பை வாங்கினேன்... திருப்பிக் கொடுக்க மறந்துட்டேன்.'' என்று நிறுத்தியவன் எங்கோ லயித்தபடி கனவில் பேசுபவன் போலவாக்கியத்தை முடித்தான்.

''நாட் ஒன்லி தி கர்சீப் – மை ஹார்ட் ஆல்ஸோ.''

குறுகிய வளைவுகளில் கூட மிக அலட்சியமாக ஸ்டீயரிங்கைக் கையாளும் பிருந்தாவை வித்தியாசமாகப் பார்த்துக் கொண்டிருந்தான் பாஸ்கர்.

''யூ ஆர் கிரேட் மிஸ் பிருந்தா–உங்களைப் போல இருக்கிற 'டேலண்டட்' கேர்ள்ஸைப் பார்க்கிறதே அபூர்வம். உங்க சிநேகிதிங்கறதினாலே மிஸ் வித்யாவுக்கு சர்டிபிகேட்டே தேவையில்லே – என்ன அருமையா வீணை வாசிக்கிறாங்க தெரியுமா – ஸிம்ப்ளி ஸூபர்ப்.''

''தேங்க்யூ மிஸ்டர் பாஸ்கர்'' – பிருந்தாவின் தொனியில் ஜீவன் இல்லை. இந்த பாஸ்கர் சாதாரணமான ஆள் இல்லை. தன்னைப் புகழ்வது போலவே புகழ்ந்து வித்யாவை உச்சியில் தூக்கி வைக்கிறான்.

பிருந்தாவுக்குப் புரியவில்லை. தன் மனம் திடீரென்று ஏன் இப்படிப் பேய் பிடித்தது போலப் பொருமுகின்றது? அப்படி என்றால்.. எவ்வளவுதான் இன்டலக்சுவலாக இருந்தாலும் இறுதியில் பெண் பெண்தானா? ''இல்லை இல்லை.'' – மனசுக்குள்ளிருந்து இன்னொரு பிருந்தா கையாட்டினாள்.

எவ்வளவுதான் அடி மட்டத்தோடு இணைந்து கொண்டிருந்தாலும் சமயம் வரும்போது மேல் மட்டங்கள், மேல் மட்டங்கள்தான்!'' -- இதை இந்தப் பாஸ்கர் மட்டுமல்ல... இதோ பிருந்தாவும் கூடத்தான் நிரூபித்துக் கொண்டிருக்கிறாள்!

வித்யாவுக்கு இவன் செய்தது கொஞ்சநஞ்சமல்ல... அளவுக்கு மீறி...அந்தஸ்துக்கு மீறி... அவள் எலிமெண்டரி ஸ்கூலில் இருந்து டிகிரி முடிக்கும் வரை அத்தனை செலவுகளும் வித்யா கேர் ஆஃப் பிருந்தாதான்.

தன் கார் டிரைவரின் மகளுக்கு எந்த முதலாளியின் மகளும் இவ்வளவு தூரம் உதவி செய்ய மாட்டாள்.

பிஞ்சு வயதில் முளைவிட்ட அந்த நட்பின் நெருக்கம் கிளைவிட்டுப் படர்ந்து செழித்துப்

பார்ப்பவர்களின் விரல்களை யெல்லாம் மூக்கைத் தொடத் தூண்டியது. அந்தஸ்து வித்தியாசம் பார்க்காமல் இப்படி ஒரேயடியாக உறவாடுகிறாளே என்று ஆரம்பத்தில் முகம் சுளித்த பிருந்தாவின் தந்தை ராமநாதன் கூட இந்த விஷயம் ஊரில் பரவலாகப் பேசப்படும் பெருமைக்குரிய விஷயமாகவும், சுலபமாக பப்ளிஸிடி தரக் கூடிய விஷயமாகவும் இருக்கவே இது ஒரு விதமான கௌரவம் என்று தம்மைச் சமாதானப் படுத்திக் கொண்டார்.

இப்போது நினைத்துப் பார்த்தால் வித்யாவுக்காகத் தான் செய்தது எல்லாம் ஒரு வித சுயநலத்தின் அடிப்படையில்தானோ என்ற சந்தேகம் பிருந்தாவுக்கு ஏற்பட்டது. எல்லாரும் போற்றிப் புகழும் அளவுக்குப் பிரபலமாகி விட்ட இந்த நட்பு அப்படி ஒன்றும் புனிதமானதல்ல... சுயநலம் மோதித்தாக்கும்போது தடம் புரளக் கூடியதுதான் என்பதை நிரூபிப்பது போல அல்லவா அடுத்தடுத்த நிகழ்ச்சிகள் அலை மோதுகின்றன!

நேற்றே முடிவு செய்யப்பட்ட புரோகிராம்தான். இந்த ஊட்டி டிரிப். பாஸ்கர் பிருந்தா, வித்யா மூவரும் கிளம்புவதாக ஏற்பாடு. ஆனால் அதிகாலையில் ரோஸ்கலர் ஸாரியில் அலங்கார பூஷிதையாக வந்து நின்ற வித்யாவைப் பார்த்ததும் பிருந்தா ஏன் பேய் அறைந்தது போலானாள்? இந்த இரண்டு நாட்களில் வித்யாவோடு ஒட்டும் அளவுக்குத் தன்னிடம் விலகியே நிற்கும் பாஸ்கரின் நடத்தையா? இல்லை, வழக்கத்தைவிட தன் அலங்காரத்தில் சற்று அதிகமாக அக்கறை செலுத்தும் வித்யாவின் திடீர் மாற்றமா?

அப்போது கூட விபரீதமாக எதையும் கற்பனை செய்யத் தோன்றவில்லை பிருந்தாவுக்கு. ஏதோ தோன்றியது — வித்யா இல்லாமல், தானும் பாஸ்கரும் மட்டும் ஊட்டி போகலாமே என்ற எண்ணம்! ஏதோ ஓர் அந்தரங்க தாபத்தைக் கொட்டித் தீர்த்து விடும் வாய்ப்புக்காகக் காத்திருந்த அவள் மனத்தின் அவசர முடிவாகக் கூட அது இருக்கலாம்.

திருச்சி காய்கறி மார்க்கெட்டில் பீட்ரூட் கிழங்கை ''இரத்தத்தின் இரத்தம்- தொண்ணூறு பைசா'' என்று கூறி விற்பனை செய்கின்றனர்.

-வி. எம். செய்யது புகாரி



''ஸாரி வித்யா — இன்னிக்கு டிரிப் கான்சல். பாஸ்கர் அப்பா கூட பேக்டரி ரவுண்ட் போறார். நான் இழுத்துப் போர்த்தித் தூங்கப் போறேன்... ஸோ... நீ...?''

''லீவைக் கான்ஸல் பண்ணிட்டு பேங்குக்குப் போறேன்.'' ஆழமாகப் பிருந்தாவை ஊடுருவிய வித்யாவின் பார்வையில் ஏதோ ஒரு நெருக்கம் இழை பிரிந்து பிசிறடித்துப் போனதாகத் தெரிந்ததைப் பிருந்தா பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

காரில் வரும்போதெல்லாம் எந்த சப்ஜெக்டை எடுத்துப் பேசினாலும் அதில் சாமர்த்தியமாக வித்யாவை இணைத்து பாஸ்கர் பேசும்போது கூட பிருந்தா வித்யாசத்தை உணரவில்லை. ஒரு நூறு தடவையாவது அவன் வித்யாவைப் பற்றி விசாரித்திருப்பான்!

பொட்டானிகல் கார்டனின் உயர்ந்த மரங்களைப் பற்றி இவன் புகழ ஆரம்பித்தால் ''உங்களுக்கும் வித்யாவுக்கும் இடையிலே இருக்கிற ஸ்நேகம் இதைவிட உயர்ந்தது'' என்று முடித்தான்.

''மிஸ் பிருந்தா — ஐ டெல் யூ ப்ராங்க்லி— ஐ லவ் வித்யா. அவள் எனக்குக் கிடைக்க நீங்க உதவி செய்ய முடியுமா?''

அவன் இக்பிரமை பிடித்து நிற்கும் போதே அவன் மடமடவென்று பேசினான்:

''நீங்களும் வித்யாவும் இதோ இந்த நகமும் சதையும் போல — ரொம்ப நெருக்கமாக இருக்கீங்க — நீங்க சொன்னா அவள் நிச்சயம் மறுக்க மாட்டா.''

சர்ரக்... காரின் டயரும் பாதையும் பலமாகத் தழுவிக் கொண்டதில் கார் குலுங்கி நின்றது. ஏதோ கற்பனையில் மிதந்து கொண்டிருந்த பாஸ்கர் 'வாட் ஹாப்பண்ட்' என்றான். அவள் பார்வையால் பாதையைச் சுட்டிக் காட்ட ஒரு குரங்கு உயிர் தப்பிய ஆனந்தத்தில் அவசரமாக ஓடிப்போய்ப் பாதையோர மரத்துக்குத் தாவியது. கார் கிளம்ப ஆரம்பித்ததும் பெருமூச்செறிந்த பாஸ்கர் ''உங்களுக்கு ரொம்ப இளகிய மனசு பிருந்தா'' என்று ஐஸ்வைக்க ஆரம்பித்தான்.

பிருந்தா பதில் பேசாமல் ஒரு புன்னகையால் அவன் பாராட்டை அங்கீகரித்தவளாகச் சாலையில் கவனம் செலுத்தவே பாஸ்கர் கொஞ்சநேரம் பொறுமை இன்றி நெளிந்தான். அவன் வித்யாவுக்காக இத்தனை தூரம் அலட்டிக் கொள்வதைப் பார்க்கும் போது ஒரு புறம் பொறாமையாகவும், இன்னொரு புறம் சிரிப்பாகவும் இருந்தது பிருந்தாவுக்கு.

''மிஸ் பிருந்தா... நான் கேட்டதுக்கு நீங்க பதிலே சொல்லல்லே...''

''டோண்ட் வொர்ரி மிஸ்டர் பாஸ்கர். வித்யா கிட்ட நான் பேசறேன். உங்களை 'ஹப்பியா' ஏத்துக்க அவளுக்குக் கசக்குமா என்ன?''

''பெரிய உதவி மிஸ் பிருந்தா. தேங்க் யூ வெரிமச்.''

நெகிழ்ந்து போய் நன்றி சொன்ன பாஸ்கர் ஸ்டியரிங் மீது விளையாடும் பிருந்தாவின்

கை விரல்களை நெடு நேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

''ரோஜா வண்ணச் சாயம் உங்க விரல் நகங்களுக்கு ரொம்பப் பொருத்தமாகவும் அழகாகவும் இருக்கு மிஸ் பிருந்தா.''

அவன் சொன்ன ''நகமும் சதையும்'' உவமை திடீரென்று இவளுக்கு ஞாபகம் வர இனம் தெரியாத அருவருப்பு அதிசயமாகக் குரல்வளையைப் பிடித்தது. இந்த பாஸ்கர் இவளுக்குத் தெரியாமலே நேற்றிரவு வித்யாவின் வீட்டிற்குப் போயிருக்கிறான். வித்யாவும் இதைப் பற்றி இவளிடம் வாய் திறக்கவில்லை!

பாஸ்கரின் தந்தை கோவையில் உள்ள ஒரு 'குரூப் ஆப் காட்டன் மில்'ஸுக்கு மேனேஜிங் டைரக்டர். பிருந்தாவின் தந்தையோ அந்த மில்களை நிர்வகிக்கும் ஜெனரல் மானேஜர். அடிக்கடி கோவை வரும்போதெல்லாம் பாஸ்கரின் தந்தை பிருந்தாவின் அறிவுக் கூர்மையைக் கண்டு அதிசயித்ததுண்டு. பாஸ்கருக்கு இவளை மனைவியாக்கிவிடலாம் என்று இலை மறை காயாக ராமநாதனிடம் கூறியதுண்டு.

மேற்படிப்பை முடித்து விட்டு அமெரிக்காவிலிருந்து வந்திருக்கும் பாஸ்கர் மில்களைச் சுற்றிப் பார்க்கக் கோவை வருகிறான் என்று மேனேஜிங் டைரக்டர் தகவல் கொடுத்த போதே ராமநாதன் அதில் தொக்கி நின்ற சூட்சமத்தைப் புரிந்து கொண்டார். பிருந்தாவிடம் அதைப் பற்றி விவரமாகப் பேசி அவள் சம்மதத்தையும் வாங்கி வைத்திருந்தார். வெண்ணெய் நன்றாகத்தான் திரண்டது.... ஆனால்...

கார் கோவை நகருக்குள் நுழைந்து வாகன நெரிசலில் மூச்சுத் திணறி, அமைதியான ரேஸ்கோர்ஸ் ரோடிலிருந்த பிருந்தாவின் பங்களா போர்ட்டிகோவில் நின்றதும், இறங்குவதற்கு முன் பாஸ்கர் சொன்னான்:

''மிஸ் பிருந்தா நான் நாளைக்கே ஊருக்குக் கிளம்பறேன். டாடி கிட்டே என் மேரேஜைப் பத்தியும், வித்யாவைப் பத்தியும் பேசிட்டு வித் இன் எ வீக் நல்ல சேதியோட வரேன். ஓ.கே.''

புயல் போல அறைக்குள் நுழையும் பிருந்தாவைக் கவனித்துக் கொண்டிருந்த ராமநாதன், அந்தப் பரபரப்பு புதிதாகத் தோன்றவே, மெல்ல எழுந்து அவள் அறை நோக்கி நடந்தார். உட்புறம் தாழிடப்பட்டிருந்த கதவை விரலால் ஓசை எழுப்பிக் காத்திருந்தார். சற்று நேரத்தில் கதவைத் திறந்த பிருந்தாவைக் கண்டதும் பதறிப் போய்விட்டார்.

அவள் முகம் லேசாக வீங்கியிருந்தது. நன்றாக அழுதிருக்கிறாள் என்று கண்களின் சுற்றுப்புறங்கள் சாட்சி கூறின. ராமநாதனைக் கண்டதும் அவள் விருட்டெனத் திரும்பித் தன் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு கையிலிருந்த நக வெட்டியால் வண்ணம் பூசப்பட்ட நகங்களை வெட்டி எறிய ஆரம்பித்தாள். அவளைச் சுற்றிச் சிதறிக் கிடந்த ரோஜா வண்ண நகத் துண்டுகள் வியவஸ்தை இன்றிச் சிரிப்பதைப் போலிருந்தது.

''பிருந்தா வாட் இஸ் திஸ் – பாஸ்கருக்குப் பிடிக்கும்னு காலையிலேதானே ரோஸ் பாலிஷ் போட்டுட்டுப் போனே – அதுக்குள்ளே....''

''யெஸ் டாடி – பாஸ்கருக்குப் பிடிக்குதுங்கறதினாலதான் இந்த நகத்தையெல்லாம் வெட்டி எறியறேன். நகம் அளவுக்கு மீறி வளர்ந்து போச்சு – அது சதைக்குக் கீழே இருக்கிற வரைக்கும்தான் ஆரோக்கியம். அதிகமா வளர விட்டா ஆபத்துத்தான்.''

ஏதோ ஒரு சக்தி இயக்கி விட்டதைப் போல மடமடவென்று பேசிக் கொண்டே போகும் மகளைப் பார்த்துப் புரியாமல் குழம்பிப் போன ராமநாதன், ''பாஸ்கர் என்னதாம்மா சொன்னார்?'' என்றார்.

''டாடி...'' என குரல் கம்ம ஆரம்பித்த பிருந்தா உடனடியாக முகம் இறுகிப் போனவளாகப் பல்லைக் கடித்தாள்.

''உடனடியாக உங்க செல்வாக்கைப் பயன்படுத்தி வித்யாவை இந்த ஊரை விட்டே மாத்தியாகணும் – வித் இன் எ வீக் இது நடந்தாகணும். இனிமே நான் அவளைப் பார்க்க விரும்பலே.''

இத்தனை நாள் போர்த்திக் கொண்டிருந்த போலிப் போர்வை சரேலென விலகிப்போக, பணக்கார வர்க்கம் என்ற மமதையில் தெறிக்கும் பிருந்தாவின் வார்த்தைகள் எந்தப் பின்னணியில் எழுந்திருக்கும் என்று ராமநாதனுக்கு லேசாகப் புரிய ஆரம்பித்தது. கொஞ்ச நேரம் மௌனமாக நின்றுகொண்டிருந்தவர் ''டேக் இட் ஈஸி மை சைல்ட்'' என்று முணு முணுத்தபடி அறைக்கு வெளியே நடந்தார்.

அவர் போனதும் குமுறி வரும் அழுகையை மெத்தையில் புதைத்துக் கொண்ட பிருந்தா வித்யாவை விரட்டுவதற்கும், பாஸ்கரிடம் ஏதேனும் பதில் சொல்லி மழுப்பவும் தன்னைத் தயார்ப் படுத்திக் கொள்ள ஆயத்தமானாள்.

வெட்டி எறிவது என்று முடிவாகி விட்ட பிறகு இங்கு 'நெயில் கட்டர்'களுக்கா பஞ்சம்!

பொன்னாகப் பாதுகாக்கிறோம்...

....என்கிறார் விவசாயி

விதைக்கும் பருவத்திலிருந்து, விதை முற்றிக் கொழிக்கும் காலம் வரை நாங்கள் பாதுகாத்து கவனித்துக் கொள்கிறோம்.

★ இளஞ் செடி வளமாகச் செழித்து வளர்ந்திட உயர்ந்தபட்சக் கவனம் செலுத்துகிறோம் நாங்கள்.

★ வேண்டிய ஊட்டம் ஊட்டி, அதைப் போஷித்து வளர்க்கிறோம்

★ நோய்கள் அணுகாமல், பூச்சிகள் அரிக்காமல், கொடிய கிருமிகள் தாக்காமல் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்து, அதனைப் போற்றிப்பாதுகாக்கிறோம்.

கடினமாக உழைத்துக்காக்கிறோம். காரணம் : எமது கடின உழைப்பின் பலன் நல்லதோர் அறுவடை.

நாங்களும் கருத்தாகக் கவனித்துக் கொள்கிறோம்...

பாங்க் ஆப் தஞ்சாவூர்

விவசாயப் பெருமக்களுக்குக் காலமறிந்து நிதி உதவி வழங்கிடு வதற்குப், அவர்கள் நிலத்திற்கு இடவேண்டிய அத்தியாவசியப் பொருள்களையும் கருவிகளையும் இதர துணைச் சாதனங்களையும் வாங்க உதவிடுவதற்கும், விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களின் கீழ்ப் பல்வேறு திட்டங்களை வைத்திருக்கிறது.

உற்பத்தி அதிகரிப்புக்கு நாங்களும் எங்கள் பணியை ஆற்றிடுகின்றோம்.

நாட்டுக்கு உதவிட—விவசாயிக்கு உதவுகிறோம் !

பாங்க் ஆப் தஞ்சாவூர் லிமிடெட்

பதிவு அலுவலகம் : 1087, மிஷன் வீதி, தஞ்சாவூர்-613 001. தமிழ்நாடு.

S. சொக்கலிங்கம்,
ஜெனரல் மானேஜர்

B.K. மாதவன்
சேர்மன்





ஓர் உயர்நீதிமன்றம் வழக்காகிறது!

சரித்திர முக்கியத்துவம் பற்றிக் கவலைப் படாமல் பல சாலைகளின் பெயர்கள் மாற்றப் படுகின்றன. அது மட்டுமல்ல, வரலாற்றுச் சிறப்பும் கட்டிடக் கலையின் மேன்மையையும் உள்ளடக்கிய மாளிகைகள் பலவற்றுக்கு இப்போது ஆபத்து வந்துள்ளது.

சென்னைக் கோட்டையில் பென்டிக்ஸ்ஹவுஸை இடித்து விட்டு அங்கு வேறு பல அடுக்கு மாடிக் கட்டிடம் எழுப்ப இருந்த திட்டம், பத்திரிகைகள், பொது மக்கள் காட்டிய விழிப் புணர்ச்சி காரணமாகக் கைவிடப்படலாம் எனத்தெரிய வருகிறது. ஆனால் இதே நேரத்தில் நுங்கம்பாக்கத்தில் உள்ள பழங்காலக் கட்டிடமான டோல்டன் மாளிகைக்கு ஆபத்து வந்திருக்கிறது. இதைத் தரை மட்டமாக்கிவிட்டு அங்கு வேறு புதிய கட்டிடம் எழுப்ப உத்தேசித்திருக்கிறார்களாம். இடித்துத் தள்ளும் ஜுரம் பெங்களூரிலும்பரவியுள்ளது

பெங்களூருக்கு வருகை தருபவர்கள் விதான சௌதாவுக்கு எதிரே நீண்டு பரந்து கிடக்கும் சிவப்பு நிறக் கட்டிடத்தைப் பார்க்காமல் இருக்க முடியாது. 'ஹட்டாரா கச்சேரி' என்றழைக்கப் படும் அந்தக் கட்டிடம்தான் கர்நாடக மாநிலத்தின் உயர்நீதி மன்றம்.

அந்தக் கட்டடத்துக்கு இப்போது ஆபத்து வந்திருக்கிறது. அதை இடித்துத் தள்ளி அதே இடத்தில் கூடுதலான வசதியுடன் புதியதொரு கட்டிடத்தை எழுப்பக் கர்நாடகா அரசுமுடிவெடுத்திருக்கிறது.


கிரேக்க, ரோமன் கலாசார அமைப்பில் கட்டப் பட்டுள்ள இரு பகுதிகளைக் கொண்ட இந்தக் கட்டி



✖ கப்பன் பூங்காவில் மேஜர் கப்பன் சிலை

டத்தின் வயது 115! மைசூரிலிருந்து பெங்களூருக்கு அரசு அலுவலகங்களை மாற்ற வேண்டுமென்று 1831ஆம் ஆண்டில் கருதிய ஜூனியர் கமிஷனரான சி. எச். ஹாஸிங்டன், பெங்களூரில் உள்ள திப்பு சுல்தான் அரண்மனையைத் தான் பல்வேறு பட்ட அரசாங்க அலுவலகங்களுக்கு முதலில் உபயோகித்து வந்தார்.

சர் மார்க் கப்பன் என்பவர் 1864 ஆம் ஆண்டில்



✖ ஹட்டாரா கச்சேரி

மைசூர் மாநில அரசாங்க அலுவலகங்களுக்காகத் தனி இடம் தேவை என்ற காரணத்தால் இக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார். நான்கே ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்ட இக் கட்டிடத்திற்கு ஆன மொத்த செலவு நாலரை லட்சம். விலை மதிப்பற்ற நினைவுச் சின்னமாக இன்று திகழ்கிறது. இக் கட்டிடத்தில் பதினெட்டு வெவ்வேறு அரசு அலுவலகங்கள் செயல்படத் தொடங்கின. இதன் காரணமாக இக் கட்டிடத்தைக் குறிப்பிடும்போது 'அட்டாரா கச்சேரி' எனக் குறிப்பிட்டனர். இதனையடுத்துப் பெரிய தொரு பூங்கா 1866-ஆம் ஆண்டில் அமைக்கப் பட்டது. அதுதான் 'கப்பன் பூங்கா'. இக் கட்டிடத்தில் மைசூர் மாநில (அந்நாளைய) சட்டசபைப் பிரதிநிதிகளின் கூட்டத் தொடர்களும் நடைபெற்றிருக்கிறது. புதியதொரு அரசு அலுவலகக் கட்டிடமான 'விதான சௌதா' கட்டி முடித்த பிறகு, 1956ஆம் ஆண்டு முதல் இக் கட்டிடம் உயர்நீதி மன்றமாக மாற்றியமைக்கப் பட்டது.



உலகிலேயே முதல் தீக்குளிப்பு நிகழ்ச்சி 1963ல் தெற்கு வியட்நாமில் அதிபர் டியம் ஆட்சியை எதிர்த்து நடந்தது. தீக்குளித்தவர் குவாட்தக் (72 வயது) என்ற புத்த மத துறவி. அவரைத் தொடர்ந்து ஆறு பேர் தீக்குளித்தனர்.

—எஸ். ஏ. யூசுப்

இக் கட்டிடத்தைத் தற்போது இடிக்க வேண்டுமென்று கருதும் கர்நாடக அரசின் யோசனையை எதிர்த்து 'உயர்நீதி மன்றக் கட்டிட ரசிகர்கள் அமைப்பு' ஒன்று போராட முன்வந்துள்ளது. எவ்வளவுதான் பணத்தைச் செலவழித்தாலும் இது போன்ற அழகிய அமைப்புடன் கூடிய நினைவுச் சின்னமாக அமைந்துவிட்ட கட்டிடமொன்றைக் கட்ட இயலாது. எனவே இடித்துத் தள்ளும் எண்ணத்தைக் கைவிட வேண்டுமென்று கர்நாடகா கன்ஸ்யூமர் சர்வீஸ் சொஸைட்டி, இண்டியா ஹெரிடேஜ் சொஸைட்டி போன்ற பல அமைப்புகளும் போராடத் துவங்கியுள்ளன.

-அ. குமார்

பாரதி நூற்றாண்டில்:

பெண் விடுதலை எந்த அளவில் இருக்கிறது?

● அரசாங்க வங்கி ஒன்றில் ஆபீஸராகப் பணிபுரியும் **லலிதா லட்சுமணன்,** சிறு வயதிலிருந்தே வளர்ப்பு, படிப்பு ஆகிய வற்றில் பெற்றோர் பூரண சுதந்திரம் அளித்த தாகவும், அதைத் தான் நன்கு பயன்படுத்திக் கொண்டதாகவும் தெரிவித்தார். சரி, வேலைக்கு என்றுவந்த பின்னர் ஏதாவது பாகு பாடு காட்டப்படுகிறதா. அதாவது பெண் உரிமை என்று வாய் கிழியப் பேசிக்கொண்டே அதே சமயம் குறிப்பிட்ட சில வேலைகளை —உதாரணம்: கோடவுன் செக்கிங் — பார்க்காது. ''நாங்க லேடீஸ்தானே சார்?'' என்று ஒரு சாக்குத் தேடிக்கொள்ளும்வழக்கம் இருக்கிறதா?''

''கிடையாது. என்னைப் பொறுத்தமட்டில் எதையும் —கோடவுன் செக்கிங் உள்பட— நான் செய்து வருகிறேன். வேறு சில தொழில்களில் உள்ளது போல் சம்பளத்தில் வேற்றுமை இல்லையே?'' என்று சிரித்தார். ''வீடு திரும்பச் சில நேரங்களில் மிகவும் தாமதமாகி விடுகிறது. ஆனால் அது தவிர்க்க முடியாதது. ஒரு சமயம் வேறு வழியின்றி சைக்கிள் ரிக்ஷா வைத்துக் கொண்டு என் சிநேகிதி வீட்டில் டின்னர் விருந்தாளியாகப் போனேன்!'' என்றார். அனுசரணையான கணவர் கிடைத்திருப்பது இவர் அதிர்ஷ்டம்.

● வேறொரு தைரியசாலியான பெண் **ஜயந்தி.** லா படித்துத் தனியார் கம்பெனியில் வேலை பார்த்து நிர்வாக அனுபவமும் பெற்ற இவர் – தற்போது வீடு கட்டும் காண்டிராக்டராக இருக்கிறார். தகப்பனார் அவ்வப்போது வீடுகள் பல கட்டிக் கட்டி விற்று வந்ததால் அதனுடைய நுணுக்கங்கள் தெரிய வந்தன என்று குறிப்பிடுகிறார்.

''ஃபிளாட்ஸ் கட்டுவதற்காக அரசாங்க உயர் அதிகாரிகள் பலரைச் சந்திக்க வேண்டியுள்ளது. எல்லாரும் இனிமையாகப் பேசுகிறார்கள். ஆனால் விதி முறை என்ன என்பதில் அவர்கள் தெளிவாக இருப்பதில்லை. ஆனால் அவர்களைச் சொல்லியும் குற்றமில்லை. அரசாங்க விதிகள் கிளியர் கட்டாக இல்லை'' என்பது இவர் குற்றச்சாட்டு. - பெண் கண்டிராக்டர் என்பதால் சலுகை எடுத்துக் கொண்டு, வாடிக்கையாளர்கள் பண விஷயத்தில் தகராறு செய்வார்களோ?

''கிடையாது. மாறாகத் தங்களது தேவைகளை, குறைகளை மனம் விட்டுச் சொல்கிறார்கள். நானும் பரிவுடன், இரக்க சிந்தையுடன் குறைகளைக் காது கொடுத்துக் கேட்பேன்.''

● ஐ. ஏ. எஸ். படித்துத் தமிழக அரசு சமூக நலத் துறைச் செயலராகப்பணிபுரிந்து வரும் ஸ்ரீமதி **அஞ்சலி தயானந்**தின் கருத்துக்கள் சற்று வித்தியாசமாக இருந்தன.

பெண் விடுதலை பற்றிக் கேட்டபோதே, ''ஆண்களுக்குச் சுதந்திரம் இருக்கிறதா?'' என்று திருப்பி மடக்கினார் வேடிக்கையாக. ''சமுதாயத்தின்போக்கும் பார்வையும்மாறச் சில காலம் ஆகும். அரசியல் நிர்ணயச் சட்டம் வெகு தெளிவாகப் பெண்களும் ஆண்களுக்குச் சமம் என்று எடுத்துச் சொல்லியும் கூட சட்டப்படி பெண்ணின் நிலைமை கீழ்ப்படியில்தான் இருக்கிறது. ஆனால் குறிப்பிடத் தக்க முன்னேற்றமும் மாற்றமும் பெண்கள் விஷயத்தில் நிகழ்ந்திருக்கிறது என்பதை மறுக்க இயலாது.

''ஒன்று தெரியுமா? சர்வதேசத் தொழிலாளர் சங்கம் விதிமுறைப்படி ஒரு வேலைக்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரேமாதிரியான கூலி தரப்பட வேண்டும்.

''பஞ்சாயத்துஒன்றியத்துக்குஒருபெண்ணை நியமிக்க வேண்டும் (Co-opt) என்று தீர்மானித்து பஞ்சாயத்து யூனியன் தலைவர் பதவிகளில் 15 சத விகிதம் பெண்களுக்குத் தரவேண்டும் என்று தமிழக அரசு கொண்டு வந்திருக்கும் கொள்கை பாராட்டப்பட வேண்டிய ஒன்று.''

✖ கே. ஜெயந்தி



✖ திருமதி. அஞ்சலி தயானந்த்



✖ லலிதா லஷ்மணன்



✖ மாலினி சேஷாத்திரி



செயலர் தெரிவித்த ஒரு புள்ளி விவரம் லேசாகப் புருவத்தை உயர்த்த வைத்தது. ''வளர்ச்சி யடைந்து விட்ட வேறு நாடுகளில் பெண்கள் பெரும்பாலும் காரியதரிசிகளாகவோ, எழுத்தாளர்களாகவோ இருக்கிறார்கள். ஆனால் இங்கே பொறுப்பான பதவிகளில் அதிகாரம் உள்ள பதவிகளில் பெண்கள் பெரும் அளவில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பெண்களை நமது சமுதாயம் மோசமாக நடத்தி விடவில்லை.''



● டி. வி.யிலும் ஆங்கில தினசரிகளிலும் அடிக்கடி பார்த்திருப்பீர்களே **ஸ்ரீமதி மாலினி சேஷாத்திரி.** அவரைச் சந்தித்தபோது குறிப்பிட்ட சில விஷயங்களைப் பற்றி ஆணித்தரமாகத் தம் கருத்தைக் கூறினார்:

1. பெண்களுக்கென தனி சர்வகலாசாலை

கல்வி முறையை இன்னும் சீரழியச் செய்ய இதைவிட ஒரு நல்ல 'ஏற்பாடு' தேவையில்லை. வைஸ் சான்ஸலரிலிருந்து கடைசி ஜூனியர் வரை பெண்களாகவே இருந்து விட்டால் கேட்கவே வேண்டாம்! 'பெண்களுக்கு மட்டும்' என்று சொல்லி, செயற்கைத் தீவு சிருஷ்டித்துவிட முயற்சி செய்கிறார்கள்.

அதுதான் போகட்டும். இந்த யூனிவர் ஸிடியிலிருந்து வெளிவந்து அவர்கள் எந்தச் சமூகத்தைச் சந்திக்கப்போகிறார்கள்? வளர்ந்து வரும் சமூகத்தில் பெண்களுக்கு ஒரு படுதாத் தடுப்புப் போட்டு ஒதுக்குவானேன்?


2. பெண்களுக்கெனத் தனி பஸ்கள் பஸ்களில் தனி ஸீட்டுகள்

பம்பாயில், சென்னையில் இருப்பது போல மகளிர் ஸ்பெஷல் பஸ்ஸோ, தனி இருப்பிடங்களோ இல்லை.

இது ஒரு புறமிருக்க, மூட்டை மாதிரி புஸ்தகங்களைச் சுமந்து கொண்டு வரும் சிறுவர், சிறுமியருக்கு ஆண்கள் இடம் தருவதில்லை. பெண்களாவது இடம் கொடுக்க மாட்டார்களோ? குழந்தைதானே நிற்கட்டும் என்று கண்ணை மூடிக் கொண்டோ, முகத்தைத் திருப்பிக் கொண்டோ உட்கார்ந்து விடுகிறார்களே பெண்கள்!

3. தலைமுறை இடைவெளி:

பாட்டிகள் எல்லாம் பேரன்கள் எது செய்தாலும் பெரிசாக அலட்டிக் கொள்வதில்லை, ஆனால் பேத்திகள் விஷயத்தில் அப்படி இருப்பதில்லை. கவலையும் அக்கறையும் கொண்டு ''எங்கே போனாய்? ஏன் நேரம் கழித்து வருகிறாய்? யாருடன் வெளியே சுற்றினாய்?'' என்று கேட்கிறார்கள். ஆனால் அம்மாக்களோ பெண்ணைத் திருப்திப்படுத்த எண்ணுகிறார்கள். பெண்ணின் ரசனைக்குத் தகுந்த மாதிரி உடை உடுத்துகிறாள் தாயார்!



4. விளம்பரங்களில் பெண்கள்:

சம்பந்தம் இல்லாத விளம்பரங்களுக்குப் பெண்ணை இழுக்கும் மோசமான நிலைமை நிச்சயம் நீக்கப்பட வேண்டும். பாலிஷ் செய்த சலவைக் கல் விளம்பரத்துக்குக்கூட பெண்ணைத்தான் செக்ஸியாகப் படம் பிடித்துப் போடுகிறார்கள். பெண்ணினத்துக்கு இழுக்கு என்று உணர்ந்து பெண்கள் அமைப்புகள் இது விஷயத்தில் போராட வேண்டும். வெற்றி கிடைக்கா விட்டாலும் நிச்சயம் ஒரு பாதிப்பை ஏற்படுத்தும்.

5. கணவன் உத்தியோகம்:

இங்கே விருந்துகளில் பெண்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது கேட்கிற முதல் கேள்வி: ''உன் கணவர் என்ன செய்கிறார்?'' கணவரின் அந்தஸ்துக்கு ஏற்பத்தான் பெண்ணுக்கு மதிப்பு அளிக்கப்படுகிறது. தனிப்பட்ட விதத்தில் படித்துக் கெட்டிக்காரியாக இருந்தாலும் கூட கணவருக்கு அந்தஸ்து இல்லாவிட்டால் அவளுக்கும் இல்லை! மேற்கத்திய நாடுகளில் இப்படி இல்லை.

6. வரதட்சிணைக் கொடுமை:

நாளுக்கு நாள் இது அதிகரித்துக்கொண்டு வருவது கவலையைத்தான் அளிக்கிறது. ஆனால் பெண்ணின் பெற்றோர்களைத்தான் குற்றம் சாட்ட வேண்டும். கணவனோடு வாழ்க்கை நடத்த இயலாமல் கொடுமைப் படுத்தப்பட்ட பெண் பெற்றோரை நாடி வரும்போது, அவளைத் திருப்பி அனுப்பி, ''உன் வாழ்க்கை கணவனோடுதான். கஷ்டமோ, நஷ்டமோ, நீ அங்கேதான் இருக்க வேண்டும்'' என்று விரட்டும் பெற்றோர் இருக்கும்போது இந்தப் பெண்களுக்கு மரணம் தான் துணை!

தொகுப்பு: சாருகேசி, தமயந்தி

பம்பாய் மு.வ.

சில வருஷங்களுக்கு முன்பு மகாராஷ்டிர மாநிலத்தில் 'சிவசேனே' இயக்கம் தமிழர்களுக்குத் தொல்லை கொடுத்து வந்தது தெரியுமே!

பம்பாய் வாழ் தமிழினம் இந்தத் தொல்லைகளால் துவண்டு போயிருந்த சமயத்தில் வரதராஜ முதலியார் என்ற தொழிலதிபர் அவர்களுக்கு ஆறுதல் கூறித் தமிழர்களை ஒன்று கூட்டிச் சங்கம் அமைத்தார். இந்த அமைப்பு நாளடைவில் பொதுச் சேவை புரிந்து பிரபலமமடைந்தது.

தமிழர் பேரவைத் தலைவராக ஏக மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வரதராஜ முதலியார், 'பொங்கல் திருநாளன்று பம்பாய் வாசிகளின் உபயோகத்துக்காக பேரவை ஆறு ஆம்புலன்ஸ் வண்டிகளை அன்பளிப்



✕ ரத்த தானம்

✕ திரு வரதராஜ முதலியார்

பாக வழங்கும்' என்று அறிவித்தார். தமது சொந்தச் செலவில் ஆம்புலன்ஸ் வண்டிகளைப் பல்வேறு ஆஸ்பத்திரிகளுக்கு நன்கொடையாக அளித்தும் விட்டார் முதலியார்.

வரதராஜ முதலியார் ஜாதி மத இன மொழி பேதமின்றி பம்பாய்வாசிகளுக்கு உதவுவது கண்டு சிவசேனே வியந்து அடங்கியது.

சில மாதங்களுக்கு முன்பு பம்பாயில் நடந்த டிரக் போலீஸ் ஸ்டிரைக்கின்போது பலர் வெளியே தலைகாட்டவே பயந்தனர்.

ஆனால் முதலியார் பல லாரிகளைச் சொந்தச் செலவில் ஏற்பாடு செய்து அலுவலகம் சென்றிருந்த வயோதிகர் மற்றும் குடும்பப் பெண்களைப் பத்திரமாக வீட்டுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தார். அது சமயம் சாலைகளில் ஏக கலாட்டா, கல்வீச்சு நடந்தபோதும் ''முதலியார் லாரி'' என்றதும் பொதுமக்கள் மரியாதை செய்து அனுப்பி வைத்தனர். இது பற்றி டைம்ஸ் ஆஃப் இந்தியா பாராட்டியிருந்தது.

குடியரசு நாளன்று ஆறுயிரம் பேருக்குச் சொந்தச் செலவில் சமபந்தி போஜனம் நடத்தித் தமிழர் பேரவையின் மதிப்பை மேலும் உயர்த்தினர் முதலியார்.

பம்பாய்த் தமிழர்கள் இவரை இப்போது 'மு. வரதராசனுர்' என்று மரியாதையுடன் அழைக்கிறார்கள்!

பம்பாய் ஆஸ்பத்திரிகளில் பல்வேறு குரூப் ரத்தம் கிடைக்கவில்லை என்று தெரிந்ததும் மு. வ. சயான் செயின்ட் ஜார்ஜ் ஆஸ்பத்திரியில் இதற்காக ஒரு விசேஷ முகாம் நடத்தினர். அன்று ஒரே நாளில் அறுநூற்றி முப்பத்திரண்டு பாட்டில் ரத்தம் தானமாகக் கிடைத்தது!

மாதுங்கா ரயில்வே ஸ்டேஷன் அருகேயுள்ள விநாயகர் கோயிலில் ஆண்டு தோறும் விநாயக சதுர்த்தியைச் சிறப்பாகக் கொண்டாடுகிறார் மு. வ.

இந்த அதிசய மனிதர் வேலூரைச் சேர்ந்தவர். கடந்த இருபது வருடங்களாக பம்பாயில் வசிக்கிறார். ஜுஹூ பகுதியில் கலைச் சிறப்பு மிளிரும் 'ஓட்டல் சந்திர குப்தா' என்ற த்ரீ ஸ்டார் ஓட்டலை நடத்தி வருகிறார். திரை உலகில் இவர் நண்பர்கள்: அமிதாப்; சத்ருக்ன சின்ஹா!

-மன்னை செளரிராஜன்

'வீடியோ'வரை காத்திரு! 12

கதை: ஜே.எஸ்.ராகவன் சித்திரம்: செல்லம்




வீடியோங்கறது ஒண்ணுமில்லே, ஒரு 'கோட்' அவங்களுக்குள்ளே தகவல் அனுப்ப ஒரு ரகசிய வார்த்தை.
'கோடா'
ஆமாம்! வீராசாமி தோணியிலே டில்லிபாபுவுக்கு யோகேஷ் அனுப்புற சரக்கு வருதுன்னு சிக்னல் வீ, டி, யோ... புரியலே?
ஜீஸஸ்! ரியலி?
இது கஸ்டம்சுக்கு தெரிய ஆரம்பிச்சுடுத்து. உங்கப்பா இனிமே சரக்கை ஏத்த மாட்டேன்னு சொல்லிட்டார். பிரஷர் குடுக்க உன்னை கிட்நாப் செஞ்சாங்க.
அப்படீன்னு எங்கப்பாக்கும் தண்டனை கிடைக்குமா சுரேஷ்? டாடியை ஜெயில்லே போடுவாங்களா?
மாட்டாங்க ஜீஜி! இனிமே அவரைத் தண்டிக்க முடியாது!
எ...ன்ன சொல்றே சுரேஷ்?
தெரிஞ்சிப்பே. சீட் பெல்ட்டை கட்டிக்கோ.
விமானம் இறங்கத் துவங்குகிறது.
ஜீஜி! நம்ம கல்யாணம் எப்போன்னு...
வெய்ட்! அதுக்கும் நீங்க 'வீடியோ'வரை காத்திருக்கணும்.
வீடியோ வரையா?
ஆமாம்! வீணை அரங்கேற்றமாகணும், டிகிரி வாங்கணும், யோகா கோர்ஸ் முடியணும். வீ, டி, யோ! அது வரை வெய்ட் பண்ண முடியுமா சுரேஷ்?
முற்றும்

நீங்கள் கேட்டவை

தராசு

○ எம். சம்பத். வேலாயுதம்பாளையம்
? கபில்தேவ் தமது புயல்வேக ஆட்டத்தால் இரண்டாவது டெஸ்ட் தோல்வியிலிருந்து இந்திய அணியைக் காத்ததன் மூலம் காப்டன் பதவிக்குப் பெருமை தேடித் தந்தார் அல்லவா?
காப்டன் பதவிக்கு மட்டுமா பெருமை? இந்திய அணிக்குப் பெருமை, பாரத நாட்டுக்குப் பெருமை, ஏன், சர்வதேச கிரிக்கெட் ஆட்டத்துக்கே பெருமை. அன்று கமெண்ட்ரி சொன்ன அயல் நாட்டவரின் உற்சாகம் இதை உணர்த்தியது!

○ வெ. லட்சுமிநாராயணன், கடலூர்
? பத்திரிகைகளை ஓசியிலோ, வாசகசாலையிலோ, சர்குலேட்டிங் லைப்ரரியிலோ படிக்காமல் காசு கொடுத்து வாங்கிப் படிக்கும் என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
பிறருக்கு வழிகாட்டியாக விளங்குகிறீர்கள் என்று!

○ என். நம்பி, திருவாரூர்
? சமீபத்தில் தங்களை வியப்பில் ஆழ்த்தியது?
! மேற்கு வங்க சட்ட மன்றத்தில் (இ) காங்கிரஸ் அங்கத்தினர்கள், கவர்னர் தமது உரையைப் படித்துக் கொண்டிருக்கும் போது அநாகரிகமாகக் கூச்சல் போட்டதுடன், தாங்களாகவே தயாரித்த அறிக்கைகளை உரக்கப் படித்துக் கொண்டிருந்தார்கள். கவர்னர் உரையை முடித்துக் கொண்டு திரும்பும்போது அவரிடம் இவர்கள் தாங்கள் தயாரித்த வேறு ஓர் உரையைத் தந்து அதைத்தான் கவர்னர் படித்திருக்க வேண்டும் என்றனர். இதை இந்திரா காங்கிரஸ் தலைமை அனுமதித்தது வியப்பு. லோக சபையில் ஜெயில் சிங், இந்திரா காந்தி அரசு தயாரித்துத் தரும் உரையைப் படிக்கும்போது எதிர்க் கட்சிகள் தாங்கள் தயாரித்துத் தரும் பேச்சைத்தான் அவர் படிக்க வேண்டும் என்றும் வற்புறுத்தலாம் அல்லவா? அந்த இந்திரா காந்தி விரும்புவாரா?

○ ஆர். பிரகாசம், நல்லாலம்
? கஷ்டப்பட்டுப் படிக்கும் பையன் பெயில் ஆகிவிடுகிறான். ஏனோ தானோ என்று படிப்பவன் பாஸாகி விடுகிறானே?
! எவ்வளவு நேரம் படிக்கிறோம் என்பது முக்கியமல்ல, படித்ததில் எவ்வளவு புரிந்து கொண்டு மனத்தில் பதிய வைத்துக் கொண்டோம் என்பதுதான் முக்கியம். சிலருக்கு ஒரு முறை படித்தாலே எதுவும் மனப்பாடமாகி விடுகிறது. இத்தகைய காமிராக் கண்கள் உடைய ஒருவர் அமைச்சர் காளிமுத்து.

○ ஏ. கே. நாசர், லட்சுமாங்குடி
? ஸ்டில் ஃபோட்டோகிராபர்களில் தங்களைக் கவர்ந்தவர் யார்?
! பெரும்பாலான நமது புகைப்பட நிபுணர்கள் போஸ் கொடுக்கச் செய்து படம் எடுக்கிறார்கள். Candid shots என்று எதிர்பாராத சமயங்களில் படம் எடுத்துத் தருபவர்கள் மிகக் குறைவு.
எதிர்பாராத தருணங்களில், எதிர்பாராத கோணங்களில், எதிர்பாராத பாவங்களில் எதிர்பாராத பின்னணிகளில் படம் எடுக்கும்போது ஒவ்வொரு ஸ்டில்லும் ஒரு கதை பேசும். நீண்ட நேரம் அந்தப் படத்தைப் பார்த்து ரசிக்க முடியும். உதாரணமாக கூட்டுச் சேரா மாநாடுகள் நடந்தபோது ஒரு நாட்டின் தலைவர் கொட்டாவி விடுவதையோ, தூங்கி வழிவதையோ கற்பனை செய்து பாருங்கள்!

○ ஆ. சந்திரசேகரன், லால்குடி
? மனிதனின் முதல் தேவை மன நலமா, உடல் நலமா?
! உடல் நலமின்மையையும் மனோ பலம் வெற்றி கொள்ளும். நலமான உடலையும் பலவீன மனம் பாழடையச் செய்யும். எனவே....

○ ஏந்தல் ஆர். இளங்கோ, திருச்சி
? எது பெரிய ஜோக்?
! டப்ளின் கார்ப்பரேஷன் கலை நிலையத்துக்கு ஒரு புகழ் பெற்ற அமெரிக்க ஓவியரின் எதுவுமே எழுதப்படாத வெறும் திரைச் சீலையை ஏகப்பட்ட பணம் கொடுத்து வாங்கிச் சென்றிருக்கிறார்கள். இதை ஜோக் என்பதா? பைத்தியக்காரத்தனம் என்பதா?

○ மன்னை உ. அன்பரசு, திருச்சி
? அண்மையில் தாங்கள் அனுபவித்த அதிர்ச்சி?
! பங்களூரில் ஒரு பெண் லால்பாக்கில் பட்டப் பகலில் பலவந்தப்படுத்தப்பட்டாள்.

ஜியாவின் உள்நோக்கம் என்ன?



ஜியா

அவள் உதவிக்குக் கூக்குரலிட்டு அழைத்ததை யாரும் கண்டு கொள்ளவேயில்லை. இப்படி ஜடங்களாக நம்மக்கள் இருக்கிறார்களே! துச்சாதனன் திரௌபதியை இழுத்துப்போனபோது சும்மா பார்த்துக்கொண்டிருந்த மக்களை ஏசுகிறானே பாரதி அது நினைவு வந்தது. இதை விடப் பெரிய அதிர்ச்சி இந்த வார நியூஸ் வீக்கில் அமெரிக்கப் பெண் எழுத்தாளர் எலிஸபெத் எழுதிய கட்டுரை. இவர் வீட்டில் நன்கு அறிமுகமான ஒரு சக எழுத்தாளர் புகுந்தார். நேற்றுவரை பண்பாளராயிருந்த அவர் திடீரென்று காமாதுரனாய் மாறி எலிஸபெத்தைத் தாக்கிப் பலவந்தப்படுத்தினார். பெரும்போராட்டம் நிகழ்த்தித் தப்பினார் எலிஸபெத். இதனால் ஏற்பட்ட அதிர்ச்சியை விடப்பெரிய அதிர்ச்சி எலிஸபெத்துக்குக் காத்திருந்தது. ஆண்களான அவரது நண்பர்கள் எல்லாம் நீசனைப் பழிவாங்க வேண்டும் என்று பொங்கினர். ஆனால் தோழிகளோ ஒருவர் பாக்கியின்றி, நடந்ததை மறந்து விடுமாறு அறிவுரை கூறினர்! பெண் விடுதலை, அனைத்திலும் சம வாய்ப்பு, பொருளாதார சமத்துவம் என்று போராடி வெற்றி கண்டுள்ள அமெரிக்கப் பெண்கள் இப்படி நடந்துகொண்டது எலிஸபெத்துக்கே அதிர்ச்சி எனில் நமக்கு.....!

○ ஏ. எல். எஸ். ராஜ், பூவலூர்

? இது எங்க நாடு படம் ஆளும் கட்சியைக் குறிப்பதாக தி.மு.கவும் ஆண்ட கட்சியைக் குறிப்பதாக அ.தி.மு.க.வும் குற்றம் சாட்டுவது எதைக் குறிக்கிறது?


! காமராஜர் கூறியது சரி என்று.



கபில்



எலிஸபெத்



காளிமுத்து

○ வெ. கோபால், மாதேமங்கலம் ★

? ஒரு பக்கம் அமெரிக்க உதவியுடன் ஆயுதக் குவிப்புச் செய்தும், மறு பக்கம் இந்தியாவிடம் தோழமைப் பேச்சு நடத்தியும் வரும் பாகிஸ்தான் அதிபர் ஜியாவின் உள்நோக்கம் என்னவாக இருக்கும்?

! பொருளாதார சீர்குலைவு இந்தியாவில் ஏற்பட, பார்த்து மகிழ்வது அவர் எண்ணமாயிருக்கலாம். அமெரிக்க உதவிகளை அவர் பெறப் பெற நாம் ராணுவத்துக்கு அதிகமாகச் செலவழிக்க வேண்டியிருக்கிறது. இந்த ஆண்டு பாதுகாப்புச் செலவு 6000 கோடி என்கிறது பட்ஜெட். மொத்த பட்ஜெட்டில் ஐந்தில் ஒரு பங்கு இது. இப்படியே போனால் தேசம் பொருளாதார — தொழில் துறையில் முன்னேறுவது ரொம்பக் கஷ்டம். ஜியாவின் எண்ணத்தை முறியடிப்பது போல் அண்டை நாடுகளுடன் நட்புறவுகளை வளர்த்துக் கொள்ளவும் ராணுவச் செலவினங்களைக் குறைத்துக் கொள்ளவும் வழி காண வேண்டும்.

○ த. சத்தியநாராயணன், அயன்புரம்

? ஏப்ரல் முதல் தேதி என்றதும் உங்களுக்கு நினைவு வருவது?

! நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்!

○ எஸ். அன்புமணி, ஈரோடு


? அம்பேத்கார் இயக்கம் காந்தி பட விஷயத்தில் நடந்துகொள்ளும் விதம் பற்றி....?

! அம்பேத்காருக்குப் பெருமை தேடித் தருகிற காரியமல்ல. காந்தி திரைப் படத்தை ஒரு சரித்திர டாக்குமெண்டரியாகக் கருத வேண்டாம். ஒரு மாமனிதனின் வாழ்க்கைக் கதை திரைப்படமாகியுள்ளது. அதில் காந்திக்குத்தான் முக்கியத்துவம் இருக்க முடியும். மேலும் இது இந்தியருக்காக மட்டும் எடுக்கப்பட்ட படமல்ல, சர்வதேச ரசிகர்களுக்காக உருவானது. பிரிட்டிஷார் நமக்குச் செய்த கொடூரங்களை எவ்வளவு அப்பட்டமாக இந்த பிரிட்டிஷ் தயாரிப்பாளர் — டைரக்டர் சித்திரிக்கிறார்; அதைத் தயக்கமின்றி எப்படி பிரிட்டிஷ் அரசு அனுமதித்திருக்கிறது என்பதைப் பார்த்தால் — அந்தப் பெருந்தன்மையில் சிறிதளவேனும் நாம் பெற்றால்—தென்னிந்தியாவுக்குப் படத்தில் முக்கியத்துவம் இல்லையே, ராஜாஜியைக் காட்டவில்லையே என்பது போன்ற சில்லறைக் குறைகளைக் கூறிக் கொண்டிருக்க மாட்டோம்.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:

வெ. கோபால், மாதேமங்கலம் போஸ்ட்
லளிகம் (வழி)
தருமபுரி (மா.வ.)

சிரிப்பு அறுவடை!



கருத்து:
எஸ்.எம். ஏந்துணம்

அவன்: "மானேஜரிடம் லீவு லெட்டரைக் கொடுத்துட்டு வீட்டுக்கு வந்தா எனக்குப் பெரிய அதிர்ச்சி!"
இவன்: "ஏன்டா!"
அவன்: "லீவு லெட்டரில் குறிப்பிட்டிருந்தபடி என் பாட்டி செத்துப் போயிருந்தா!"

—உ. ராஜாஜி





தந்தை: கையில் என்னடா புஸ்தகம்?
மகன்: குழந்தை வளர்ப்பு!
தந்தை: நீ எதுக்குடா படிக்கிறாய்?
மகன்: நீ என்னைச் சரியா வளர்க்கிறயான்னு பார்க்கத்தான்!

—பட்டுக்கோட்டை ரவி

"எம்பா காக இல்லாமச் சாப்பிட்டா மாவு மட்டும்தானே அரைக்கணும், நீங்க என் சட்னியும் அரைக்கச் சொல்றீங்க?"
"மாவு சாப்பிட்டதுக்காக, சட்னி—டிப்சுக்காக!"

—பிரகாஷ் முரளி






அவன் (ஒரு நாவலைக் காட்டி): "இது ஒரு அருமையான துப்பறியும் நாவல்டா..."
இவன்: "கொலைகாரன் யாருங்கிற விஷயம் சஸ்பென்ஸாவே இருக்கா?"
அவன்: "இல்லே! கொலை நடந்ததா இல்லையாங்கறதே சஸ்பென்ஸா இருக்குடா...."

—எஸ். அன்புமணி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran



அது மிகவும் சுலபம். ஒரு குழந்தைகூட அந்த தந்திரத்தைச் செய்துகாட்டலாம். நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் சர்க்கரை மற்றும் நீருடன் ரஸ்னாவைக் கலக்குங்கள். நிமிடங்களில் பானம் தயார். 32 டம்ளர் சுவைமிக்க குளிர்பானம் தயாரிக்க 2 பாட்டில்கள் சிரப் போதும். இதை இதர எந்த சிரப்/ஸ்குவாஷுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். மற்றவைகளைவிட ரஸ்னாவுக்கு பாதி விலைதான் ஆகிறது என்பதை உணர்வீர்கள்.



ரஸ்னா

ஸாஃப்ட் ட்ரிங்க்
கான்ஸன்ட்ரேட்

சுவையானது!
சிக்கனமானது!

தயாரிப்பவர்கள்: பயோமா இண்டஸ்ட்ரீஸ், அசர்வா, அஹமதாபாத் 380 016.

இவ்விடங்களிலும் கிடைக்கின்றது: குவைத், துபாய், பேஹ்ரின், மொரீஷியஸ், செஷல்ஸ், கத்தார், ஓமான், நைரோபி, ஜெத்தா, டிரிபோலி, லண்டன்.

ISTERED No. M. 4362
…istered as a Newspaper in Sri Lanka

